விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு + XVI

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2050 மார்கழி 06 ஞாயிற்றுக்கிழமை (22.12.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 03

## மணல் கொள்ளைக்கு எதிராக யாழில் இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணக் குடாநாடு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வு இடம்பெறுவதால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படப் போகும் பாதிப்பைத் தடுப்போம் என வலியுறுத்தி இன்று போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் மணல் வளம் மிகவும் சுதந் 15

## பேருந்தில் கஞ்சா கடத்தியவர் பொலிஸாரால் கைது

(வவுனியா)
யாழிலிருந்து அநுராதபுரம் நோக்கி கேரள கஞ்சாவினை கடத்தி சென்றவரை வவுனியா பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளதாக 15

## மணல் கடத்தல்காரர்களை விரட்டியடித்த பொதுமக்கள்

### குடத்தனை வடக்கில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
வடமராட்சி கிழக்கில் சட்டத்துக்குப் புறம்பாக மணல் அகழ்வில் ஈடுபட்டவர்களை மக்கள் ஒன்று திரண்டு விரட்டினர்.

இந்தச் சம்பவம் நேற்று பிற்பகல் குடத்தனை வடக்குப் பகுதியில் இடம்பெற் 15

## தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை கோப்பாய் வடக்கில் இடம்பெற்றுள்ளது.

இதில் அதேயிடத் 15

## விக்னேஸ்வரனுக்கு வரலாறு தெரியாது

# இது சிங்கள நாடு இன்னல் தந்தால் வாளால் விரட்டியடிப்போம்

### மேர்வின் சில்வா மிரட்டல்



**(கொழும்பு) இலங்கையின் வரலாறு தெரியாமல் வட மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நாட்டில் வாழ்கிறார். இலங்கையின் ஆதிக்குடிகள் சிங்களவர்களே. தமிழர்கள் வந்தேறு குடிகள். நாம் எந்த இனத்துக்கும் எதிரானவர்கள் இல்லை. எமக்கு யாரும் இன்னல் தந்தால், துட்டகைமுனுவின் வாளை எடுத்து விரட்டியடிக்க வேண்டுமென சிங்கள மக்களிடம் அறைகூவல் விடுத்துள்ளார் முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா.**

செய்தியாளர் மத்தியில் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில, வடக்கின் முன்னாள் முதலமைச்சர் இலங்கை வரலாறு மட்டுமன்றி உலக வரலாற்றைக் கூட தெரியாமல் இருக்கிறார். நாட்டின் சமூக 15

## கடல் அட்டையுடன் மன்னாரில் 7 பேர் கைது

(மன்னார்)
மன்னார் - வங்காலை கடற்பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை பிடித்துக் கொண்டிருந்த ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை கடற்படையினர் மேற் 15

## தமிழ் மொழி தெரியாததால் சிங்கள மக்கள் வெட்கப்பட வேண்டும்

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)
இலங்கை வாழ் சிங்கள மக்கள் தமிழ் மொழி தெரியாமல் இருப்பதை நினைத்து வெட்கப்பட வேண்டும் என கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் இரண்டு பிரதான மொழிகள் காணப்படுவதாகவும் அந்த மொழிகள் தொடர்பில் மக்கள் அறியாமல் 15

## இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை மறுப்பு ஏன்?

### சரத் பவார் கேள்வி

(கொழும்பு)
இந்தியாவில் குடியேறியிருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு மட்டும் குடியுரிமை மறுக்கப்படுவது ஏன் என இந்திய தேசியவாத காங்கிரஸ் கட்சித் தலைவர் சரத் பவார் கேள்வி எழுப்பியுள்ளார்.

குடியுரிமைத் திருத்தச் சட்டத்தில் பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ் 15

## விடுதலைப் புலிகளை தோற்கடித்தது சில நாடுகளுக்கு மகிழ்ச்சியில்லை

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ



(கொழும்பு)
விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து இலங்கை போரை முடிவுக்குக் கொண்டு வந்ததையிட்டு சில நாடுகள் மகிழ்ச்சியடையவில்லை என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தியத்தலாவ இராணுவப் பயிற்சி முகாமில் பயிற்சியை முடித்து வெளியேறும் படையினரின் அணி 15

## இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை

### இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவிப்பு

(சென்னை)
இலங்கை ஏதிலிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது குறித்து ஆராயப்படுமென இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியுடனான சந்திப்பின்போதே அவர் 15

## கோட்டா, மகிந்த, மைத்திரி நேற்று திடீர் சந்திப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பு செயலகத்தில் இடம் 15

## யாழ்.சிறைச்சாலை முன் பௌத்த சின்னங்கள்

### பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)
சட்டவிரோதமான முறையில் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்னால் பௌத்த 15

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 23.11.2019 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

## அமரர் அன்னலிங்கம் சிவமணிதேவி

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று (21.12.2019) சனிக்கிழமை காலை 8.00 மணியளவில் **கீரிமலை புனித தீர்த்தக்கரையில்** நடைபெற்றது. நாளை (23.12.2019) திங்கட்கிழமை பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**சிவகுலவீதி,**
**உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.**

(1565)


இங்ஙனம் -
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

## கிருஷ்னர் செல்வநாயகம்

(தேவராஜா, தேவா)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26 | 14 |
| 05 | 12 |
| 1946 | 2019 |



சுழிபுரம் விக்டோரியா கல்லூரி பழைய மாணவரும் உதைபந்தாட்ட வீரருமாகிய மூளாயைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட செல்வநாயகம் (தேவராஜா, தேவா) அவர்கள் 14.12.2019 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஷ்னர் - செல்லாச்சி தம்பதிகளின் மூத்த புதல்வரும், றோஸ்மலரின் அன்புக் கணவனும், டொனால்ட், ஜெறோம்சன், றொசானியின் அன்புத்தந்தையும், டயானா, புஸ்பராஜா (நந்தன்) ஆகியோரின் மாமனாரும், ஜோரிஸ், திவ்யன், ஆரோஸ் ஆகியோரின் பேரனும். செல்வமணி, சிவராஜா (செல்வம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஜெயகாந்தன், ஜெயகுமார் (பிரான்ஸ்), ஜெயசீலன் (பிரான்ஸ்), வசந்தா, அஜந்தா ஆகியோரின் மாமாவும், உஷாழினி (லண்டன்), கோகிலா (பிரான்ஸ்) ஆகியோரின் பெரியப்பாவும், அருமைத்துரை, கலா, சிங்கராஜா, காலஞ்சென்ற ஜேசுராஜா, செல்வராஜா, தங்கராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பிரான்ஸில் 23.12.2019 திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு (பிரான்ஸ் நேரப்படி) நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு :
077 763 6256

(1554)

**இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகள் மற்றும் சகோதர சகோதரிகள், பேரப்பிள்ளைகள்.**

## சேவை முகவர்

வீடு, காணி விற்பனைக்கு ஓட்டுமடம் வீடு 2 1/2 பரப்பு, பலாலி வீதி, திருநெல்வேலி, கந்தர்மடம், 4, 3 1/2 பரப்பு விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம். தரகர் தேவையில்லை. **சுந்தரம் : 077 481 9801** (1564)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வாழும் 30 வயதுடைய Non Rc மதத்தைச் சேர்ந்த மணமகளுக்கு தகுந்த மணமகனை இலங்கையில் எதிர்பார்க்கிறோம். சுவிஸ் பிராஜாவுரிமை பெற்ற 34 வயதுடைய 07ல் செவ்வாய் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறோம். இலங்யையில் வாழும் 38 வயதுடைய பொறியியலாளர் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம்.

**தொடர்புகளுக்கு : 076 236 4188, 021 222 1515, 0014166661855, 0014377728129** (1562)

## பசுமாடு விற்பனைக்குண்டு

18 மாதம் நிரம்பிய பசு விற்பனைக்குண்டு (சினைப்படுத்தக் கூடியது)

**தொடர்பு : 077 420 6382**

(1558)

## வீடு வாடகைக்கு

கச்சேரி, பொஸ்கோ பாடசாலைக்கு அண்மையில் 4 அறை மற்றும் 2 குளியலறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு : 076 675 7518** (1560)

Kokuvil Hindu College * Old Students' Association *

## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

### 2020 இல் தூய்மையான பாடசாலை

கொக்குவில் இந்துக் கல்லூரியினை "2020 இல் தூய்மையான பாடசாலை" எனும் தொனிப்பொருளில் மாற்றியமைக்கும் செயற்பாட்டில் அதிபர், ஆசிரியர்கள், கல்லூரியின் கழகங்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் இணைந்து கல்லூரியினை சிரமதான பணி மூலம் தூய்மையாக்கும் நடவடிக்கையினை மேற்கொள்ளவுள்ளோம்.

எனவே குறித்த தினத்தில் பாடசாலையின் மற்றும் மாணவர்களின் நலனில் அக்கறையுடைய கல்லூரி சமூகத்தினர் அனைவரும் குறித்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.


**காலம் : 28.12.2019 சனிக்கிழமை**
**நேரம் : காலை 9.00 மணி**


**பழைய மாணவர் சங்கம்,**
**கொக்குவில் இந்துக்கல்லூரி.**

(C-8604)



# யாழ்.சிறைச்சாலை முன் முளைத்த பௌத்த மத அடையாளங்கள் ஆர்ப்பாட்டக்காரர்களைக் கண்டதும் அப்புறப்படுத்திய நிர்வாகம்





(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையின் முன் பக்க வாயிலில் உரிய தரப்பினர்களிடம் அனுமதி பெறாமல் பௌத்த மத அடையாளங்களைக் காட்சிப் படுத்தும் நடவடிக்கை பொதுமக்களின் எதிர்ப்பையடுத்து நேற்றுத் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, யாழ்.சிறைச் சாலையின் எல்லைக்கு அப்பால் பிரத்தியேகமாகப் புற்றரை அமைக்கப்பட்டு பௌத்த மதம் சார்ந்த விஜயன் மற்றும் சங்கமித்தை வரவைச் சித்திரிக்கும் (சீமெந்திலான) உருவப்பொம்மைகள் நேற்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்தால் திறக்கப்பட ஏற்பாடுகள் இடம்பெற்றன.

இந்நிலையில் யாழ்.சிறைச் சாலைப் பகுதிக்குச் சென்ற மாநகர சபை உறுப்பினர்கள், பொது மக்கள் மற்றும் ஊடகவியலாளர்களைக் கண்டதும் திறப்பதற்காக காட்சிப்படுத்தப்பட்ட பௌத்த மத உருவச் சிலைகளை சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி சிறைச் சாலை நிர்வாகத்தினர் அப்புறப்படுத்தினர்.

இதனையடுத்து யாழ்.மாநகர சபை துணை முதல்வருக்கும் சிறைச்சாலை நிர்வாகத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு வார்த்தையின் அடிப்படையில் உரிய தரப்பினரிடம் தாம் அனுமதிக்கான கோரிக்கைக்கடிதங்களை அனுப்புவதாகவும் அது வரை தற்காலிகமாக இடைநிறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் சிறைச்சாலை நிர்வாகத்தின் எழுத்து மூலம் அல்லாத உறுதிமொழிகளைதாம் நம்ப முடியாதென ஆர்ப்பாட்டத்திற்கு வருகை தந்த பொதுமக்கள் தெரிவித்ததோடு நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்தனர். (இ-10)

## அரிசிக்கான விற்பனை விலை 98 ரூபா

### வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

அரிசிவகைகளுக்கான நிர் ணய விற்பனை விலையாக 98 ரூபா வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டது.

வெள்ளை/ சிவப்பு சம்பா (வேகவைத்தது/ அவித்துப் பெறப்பட்டது) கீரி சம்பா மற்றும் சீரக சம்பா தவிர்ந்த ஒரு கிலோக் கிராம் அரிசியின் ஆகக் கூடுதலான சில்லறை விலை 98 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது மொட் டைக் கறுப்பன் மற்றும் ஆட்டக்காரி தவிர்ந்த வெள்ளை மற்றும் சிவப்பு நாடு என்பனவும் நிர்ணய விலைக்குள் அடங்கும்.

குறித்த நிர்ணய விலைகளைப் பின்பற்றாது அரிசி விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராகப் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் சட்டதிட்டங்களுக்கு அமைய வழக்குத் தொடர முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-10)


ANDRA BOOKS

உங்கள் பிள்ளைகளின் பரீட்சை மதிப்பெண்களை அதிகரிக்க வேண்டுமா?

அன்றாவின் யாழ் அருவி

பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன்...

2020 ஆண்டுக்குரிய தவணை-1

தரம் - 1 தொடக்கம் தரம் - 11 வரை ...

இப்போது விற்பனையில்...!

அனைத்துப் புத்தகக் கடைகள் மற்றும் உள்ளூர் சுப்பர் மார்கெட்டுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.



இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் முன்னணி ஆசிரியர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.!




ANDRA PUBLICATIONS

Hotline: 0763604891



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
1937
05
16



மறைவு
2019
01
02

அமரர் திரு.செல்லச்சாமி பாலகிருஷ்ணசாமி

ஓங்கி ஒலித்திருக்கும்
உங்கள் குரல் மட்டும்
ஓய்ந்து போயுள்ளதய்யா
நாங்கள் வாழும் நாட்கள்
அத்தனையும் எம்முடனே
நீங்களும் வாழ்ந்திருப்பீர்கள்!!

நாளை மறுதினம் 23.12.2019 எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

C-8601

கொத்தியால் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

தகவல்: குடும்பத்தினர் நாதகோபாலன்

**உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?**

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாறவேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்கு உண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள் (1487)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.


# நத்தார் தாத்தாவாக கோலி



இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி.


முதலில் தன்னை யார் என காண் பிக்காமல் விராட் கோஹ்லி அங்குள்ள சிறுவர்களுடன் உரையாடியுள்ளார். அதன்பின்னர் அவர்களிடம் நீங்கள் விராட் கோஹ்லியை சந்திக்க விரும்பு கின்றீர்களா என அவர் கேட்டுள்ளார்.

அதற்கு அவர்கள் ஆம் என தெரி வித்ததும் தான் அணிந்திருந்த நத்தார் தாத்தா முகமூடியை கழற்றி விராட் கோஹ்லி, தான் யார் என்பதை காண்பித்துள்ளார். இந்த தருணங்கள் எனக்கு மிகவும் முக்கியமானவை என விராட் கோஹ்லி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில் உள்ள அநாதை சிறுவர்கள் இல்லத்திற்கு நத்தார் தாத்தா வேடத்தில் சென்று அங்குள்ளவர்களுக்கு இன்ப அதிர்ச்சியை வழங்கியுள்ளார்

இந்த சிறுவர்கள் வருடம் முழுவதும் எங்களை வாழ்த்துகின்றனர், உற்சாகப்படுத்துகின்றனர் எனத் தெரிவித்துள்ள விராட் கோஹ்லி இந்த சிறுவர்களுக்கு தன்னால் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



கடந்த 23.11.2019 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

**கந்தசாமி இராசலட்சுமி**

அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (23.12.2019) திங்கட் கிழமை 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

44/2, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
0770569692, 0779125873

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.மலர்ராஜன் ஜீன்சன்**

அழகப்பா பல்கலைக் கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலைமாணி (பொது நிர்வாகம்) பட்டம் பெற்ற திரு.மலர்ராஜன் ஜீன்சன் அவர்களை மேன் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
உறவினர், நண்பர்கள்

குப்பிளான் தெற்கு சுன்னாகம் (C-8611)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

# மரண அறிவித்தல்



## வினாசித்தம்பி தம்பு
### (தம்பு கிளாக்கர்)

பிறப்பு:-03/03/1940

இறப்பு:-18/12/2019

சரவணை கிழக்கு, வேலணை, மயிலபுலத்தை பிறப்பிடமாகவும் முருகன் ஆலய வீதி, மாமூலை, முள்ளியவளையை வசிப்பிட மாகவும் கொண்ட ஓய்வுபெற்ற முள்ளியவளை பிரதேச சபை எழுதுநர் திரு.வினாசித்தம்பி தம்பு (தம்பு கிளாக்கர்) அவர்கள் 2019.12.18 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மாமூலை முருகன் ஆலய வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (22.12.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணியளவில் நடை பெற்று பூதவுடல் கற்பூரப்புல் இந்து மயானத் தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:-
குடும்பத்தினர்

(C-8607)

# சிங்களவர்களின் வரலாற்றை யாரும் இலங்கையின் வரலாறாக காட்ட முடியாது

## சிவாஜிலிங்கம் கடும் எதிர்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.சிறைச்சாலையில் சிங்களவர்களின் வரலாறுகளை இலங்கையின் வரலாறாகக் காட்ட முயல்வோர் ஏனைய இனங்களின் வரலாறுகளையும் காட்சிப்படுத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பக்க வாயிலில் உரிய தரப்பினர்களின் அனுமதி பெறப்படாமல் நேற்று திறக்கப்பட இருந்த பௌத்த மதம் சார்ந்த உருவச் சிலைகளை பார்வையிட வந்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் பெரும்பான்மையாக தமிழர்கள் வாழ்கின்ற நிலையில் தமிழர்களின் அடையாளங்களையும் வீர வரலாறுகளையும் சித்திரிக்காமல் விஜய மன்னன் மற்றும் சங்கமித்தை ஆகியோரின் உருவச் சிலைகளை மட்டும் காட்சிப்படுத்த நினைப்பது இன ஐக்கியத்தை சீர்குலைக்கும் செயற்பாடாகும்.

யாழ்.சிறைச்சாலையின் முன்பக்க வாயிலில் பௌத்தமதம் சார்ந்த விடயங்களை காட்சிப்படுத்தினால் நாமும் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னன் சங்கிலியனின் உருவப் படத்தை கீறுவோம்.


அதுமட்டுமல்லாது சுமார் 400 ஆண்டுகளுக்கு முன் போர்த்துக்கீச மன்னனால் யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் சங்கிலியன் சிறைக்கு அழைத்துச் செல்லப்படும் காட்சியை நான் முன்னின்று கீறுவேன்.

ஆர்ப்பாட்டக்காரர்களை கண்டவுடன் தற்காலிகமாக இடைநிறுத்திய பௌத்த உருவச்சிலை அமைப்பு நடவடிக்கை இன்னும் ஓர் இரு நாட்களிலோ அல்லது இரவோடு இரவாகவோ மீண்டும் முன்னெடுக்கப்படக்கூடிய நிலைமை காணப்படுகிறது.

மேலும் இன நல்லிணக்கம் பற்றிப் பேசுவோர் அதற்குச் செயல் வடிவம் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும் என எமது நியாயமான கோரிக்கைகளை சிறைச்சாலை நிர்வாகம் கவனத்தில் கொள்ளாது செயற்படுமானால் தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)


# 8ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 12 - 07 - 1942



மறைவு 22 - 12 - 2011

வைத்திய கலாநிதி

**மரிசலீன்பிள்ளை மரியதாசன்(JP) (பேரின்பம்)**

சுகாதார வைத்திய அதிகாரி (MOH)

யாழ்.மாநகரசபை (2001-2011)

நீங்களிருந்த பொழுதெல்லாம் கொண்டாடினோம்
குதூகலித்தோம்
இப்போது நீங்கள் எம்மோடு இல்லையே -எனினும்
எங்கள் உள்ளங்களிலே நீங்கள்...
நிலையாகவே தங்கிவிட்டீர்கள்...

(1557)

ஆவே மரியா
72, கோயில் வீதி, சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

பேரன்-அருண்
என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


# வலி.வடக்கு மீள்குடியேற்றப் பகுதிகளுக்கு அமைச்சர் தொண்டமான் நேற்று விஜயம்



(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மீள்குடியேற்றப் பகுதிகளுக்கு சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது வலி.வடக்குப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்கள் தொடர்பில் கேட்டறிந்ததுடன் விடுவிக்கப்படாத ஏனைய காணிகள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.



அமைச்சரின் இவ்விஜயத்தில் யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் மற்றும் தெல்லிப்பழை பிரதேச செயலக அதிகாரிகள் கலந்து கொண்டனர்.(இ-10)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2020 ஆம் ஆண்டிற்கான பகிரங்க ஏல அறிவித்தல் (திருத்தம்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட மரக்கறிச் சந்தைகள், மீன் சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 2020.01.01 ஆம் திகதி தொடக்கம் 2020.12.31 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான 20.12.2019 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் சுன்னாகம் உப அலுவலகத்திற்குட்பட்ட சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம்,வாகன தரிப்பிடம் உட்பட) (தொடர் இலக்கம் 01) இற்கான அறிவித்தல் கீழ்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

| தொ இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரத் தொகை (VAT தவிர) | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT தவிர) | மாத வாடகை (VAT தவிர) |
|---|---|---|---|---|---|
| 1 | சுன்னாகம் பொதுச் சந்தை, (மீன் சந்தை மற்றும் மீன் வெட்டுமிடம் வாகன தரிப்பிடம் உட்பட) | 3000.00 | 30000.00 | 10,000,000.00 | |

க.தர்ஷன்,
தவிசாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.

(சி-8602)


# இராசி பலன்

**மீனம்** — கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எடுத்த காரியத்தில் சில இடையூறுகள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மேடம்** — தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு மகிழ்ச்சிதரும், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** — புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும், தந்தைவழி உறவினர்கள் மூலம் நன்மைகள் கிடைக்கலாம், பெரியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

| | | | |
|---|---|---|---|
| | | | ராகு |
| | இராசி பலன் கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி, அச்சுவினி | | |
| சுக் | | | |
| சூரி,கேது சனி, குரு | புத | சந்.செவ் | |

22.12.2019
மார்கழி 06, ஞாயிற்றுக்கிழமை
சூரிய உதயம் காலை 6.23 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 3.54 மணிவரை
சுவாதி முன்னிரவு 7.28 மணிவரை
சுபநேரம் 9.25-10.55 மணிவரை
இராகுகாலம் 4.55-6.25 மணிவரை
ஏகாதசி விரதம்

வளவன்

**கடகம்** — மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மகரம்** — தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**சிம்மம்** — உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பகை விலகும், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** — மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்** — தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள், நிதானத்துடன் நடந்து நிம்மதி காண வேண்டிய நாள்.

**துலாம்** — பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** — வாக்கு மேன்மையுண்டு, வழிபாட்டில் மகத்துவம் காண வேண்டிய நாள், உடல் நலனில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

## தொழில் துறைகள் ஊக்குவிப்பு குறித்து

# இந்தியத் துணைத்தூதுவர் குழு அமைச்சர் டக்ளஸுடன் சந்திப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் தொழில் துறைகளை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை உருவாக்குவது தொடர்பில் யாழ்.இந்தியத் துணைத் தூதுவர் எஸ்.பாலச்சந்திரன் தலைமையிலான குழுவினர் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவுடன் கலந்துரையாடினர்.

குறித்த சந்திப்பு நேற்று முன்தினம் அமைச்சரின் யாழ்ப்பாணம் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது வடக்கில் மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கு ஏற்ற தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கான ஏது நிலைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக கடல் வளம் சார் தொழிற்றுறைகளை ஊக்குவிப்பதுடன் கடல்சார் வளங்களை பயன்படுத்தி கடல்பாசி வளர்ப்பு மற்றும் பனைவளத்தை மூலதனமாகக் கொண்ட சிறுதொழில் முயற்சிகள், தகவல்தொழில்நுட்பம் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்வது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. (இ-7)

## பரிசில் நாள் நிகழ்வும் கலைவிழாவும்

(கொடிகாமம்)

கைதடி பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் வருடாந்த பரிசில் நாள் நிகழ்வும் கலை விழாவும் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பராசக்தி பாலர் பகல் இல்லத்தின் வளர்ச்சிக்குழுத் தலைவி திருமதி பொ.ஸ்ரீரஞ்சனாதேவி தலைமையில் கைதடி இணுங்கித் தோட்ட அன்னை ரத்தின மணிமண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், விசேட விருந்தினராக வடமாகாண நன்னடத்தை சிறுவர் சேவைகள் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் ரீ.விஸ்வரூபன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-114)

## விவசாய அடையாள அட்டைப்பதிவு

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் ஆளுகைப் பரப்பிற்குள் வரும் பிரதேசங்களில் விவசாய அடையாள அட்டைப் பதிவு கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் 23.12.2019 முதல் 27.12.2019 வரையான காலப் பகுதிகளில் அலுவலக நேரங்களில் நடைபெறும்.

கைதடி வடக்கு, கைதடி கிழக்கு, கைதடி தெற்கு, கைதடி மேற்கு, நாவற்குழி மேற்கு, கிழக்கு, கோயிலாக்கண்டி, கைதடி, நாவற்குழி, மறவன்புலவு, தனங்கிளப்பு, கைதடி நுணாவில், தென் மட்டுவில், மட்டுவில், நுணாவில் மட்டுவில் மத்தி, சந்திரபுரம் ஆகிய கிராம விவசாய சம்மேளனங்களது விவசாயிகள் விவசாய அடையாள அட்டைக்குப் பதிவு செய்ய முடியுமென பெரும்பாக உத்தியோகத்தர் கு.கோகுலன் அறிவித்துள்ளார். (இ-7)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் தொண்டர் ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடவுள்ளதால் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் இன்று 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் அமைச்சரின் யாழ்.அலுவலகத்திற்கு வருகை தருமாறு தொண்டர் ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ-5)

## யாழ்.வைத்திய நிறுவகத்தின் வாகனத் தரிப்பிடப்பணி நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகத்தின் அருகாமையில் செயற்பட்டு வந்த கட்டணம் செலுத்தப்பட்ட வாகனத் தரிப்பிடப் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

யாழ்.மாவட்ட மகளிர் விவகாரக் குழுக்களின் மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வந்த குறித்த வாகனத் தரிப்பிடத்தில் முறையற்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாக யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டதையடுத்து குறித்த தரிப்பிடம் யாழ்.மாவட்ட மகளிர் விவகாரக் குழுவின் செயலாளரால் தற்காலிகமாகப் பூட்டப்பட்டது. (இ-10)

## தொழிற்பயிற்சி கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகாரசபையானது யாழ்.மாவட்டத்தில் தற்கால வேலைவாய்ப்பினை மையமாகக் கொண்டு முழுநேர மற்றும் பகுதிநேர தொழிற்பயிற்சி கற்கைநெறிகளை நடத்தி வருகின்றது.

இதன் யாழ்.மாவட்டத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பின்வரும் கற்கைநெறிகள் எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு தை மாதம் 2 ஆம் திகதி முதல் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவை ஆறு மற்றும் ஒரு வருடம் பயிற்சிக் காலத்தைக் கொண்டது. இக் கற்கை நெறிகள் அனைத்தும் தேசிய தொழில் தகைமை மட்டம்-4 (NVQ-4) சான்றிதழுக்கான பயிற்சிகளாகும்.

அலுமினியம் பொருத்துநர், வெல்டிங், அறை பராமரிப்பாளர், மின்னிணைப்பாளர், மரவேலை தொழில்நுட்பவியலாளர், கட்டட நிர்மாண உதவியாளர், நீர்க்குழாய் பொருத்துநர், மோட்டார் சைக்கிள் திருத்துநர், வெதுப்பாளர் இக்கற்கை நெறிகளை முழுமையாகப் பூர்த்தி செய்து NVQ சான்றிதழ்களை பெற்றுக் கொள்ளும் அனைவருக்குமான தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி கொடுத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் கற்கை நெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், 4 ஆம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் (021 222 7949/071 031 8737) நாளை மறுதினம் 24 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபை உதவிப் பணிப்பாளர் கு.நிரஞ்சன் அறிவித்துள்ளார். (இ)

## விபத்தில் சிக்கிய இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மீசாலைக்கும் மடத்தடிக்கும் இடையில் நேற்றுச் சனிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் இடம் பெற்ற மோட்டார்-சைக்கிள் டிப்பர் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்

மந்துவில் மேற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த திலீபகலா (வயது-36), ஸ்ரீஸ்கந்தவராஜா (வயது 18) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

எதிரே வந்த டிப்பர் வாகனத்தை கவனிக்காது முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளையில் நிலை தடுமாறியதில் சாவகச்சேரியில் இருந்து மந்துவிலுக்கு செல்வதற்காக சென்ற மோட்டார் சைக்கிள் கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி நோக்கி சென்ற டிப்பர் வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-101)

## "கூடி மகிழ்வோம்" கலாசார நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் ஏற்பாட்டில் 2020 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக "கூடி மகிழ்வோம்" கலாசார நிகழ்வு இன்று 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கொழும்புத்துறை புனித சூசையப்பர் முதியோர் இல்லத்தில் இடம்பெறும். (இ-5)

## 25 கிராம் குடுவுடன் பெண் கைது

(யாழ்ப்பாணம்)

25 கிராம் குடு போதைப்பொருளுடன் 54 வயதுப் பெண் ஒருவர் சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தாவடிப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்யப்பட்டார். இக் கைது நடவடிக்கையை யாழ்.மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி இ.சேந்தன் தலைமையிலான பொலிஸ் பிரிவினர் முன்னெடுத்தனர். (இ-30)

## இளைஞனைக் காணவில்லை!



(கரணவாய்)

வேலைக்கு செல்வதாக வீட்டில் கூறிவிட்டு சென்ற இளைஞன் ஒருவர் இதுவரை வீடு திரும்பவில்லை என அவரின் பெற்றோரால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

போயிட்டி, அச்செழுவைச் சேர்ந்த அ.ராகுலன் (வயது- 23) என்ற இளைஞன் கடந்த 18ஆம் திகதி வேலைக்கு செல்வதாக கூறி வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார். ஆனால் அவர் இதுவரை வீடு திரும்பவில்லை. இதனையடுத்து அவரின் பெற்றோர் நேற்று சனிக்கிழமை அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். எனவே குறித்த இளைஞன் தொடர்பில் தகவல் அறிந்தவர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தின் 021-205 85 85 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறு பொலிஸார் கேட்டுள்ளனர். (இ-60)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 300 | 200 | 220 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 250 | 220 | 200 | 300 |
| தக்காளி | 160 | 150 | 140 | 110 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 220 | 70 | 100 |
| கோவா | 140 | 110 | 140 | 110 | 160 |
| கரட் | 300 | 360 | 240 | 220 | 400 |
| பூசணி | 60 | 50 | 50 | 80 | 80 |
| புடோல் | 180 | 160 | 160 | 110 | 160 |
| வாழைக்காய் | 80 | 80 | 80 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 500 | 400 | — | 420 | 600 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 | 180 | 160 |
| பாகற்காய் | 350 | 450 | 320 | 320 | 400 |
| வெண்டிக்காய் | 140 | 120 | 80 | 80 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 80 | 90 | 120 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 180 | 260 |
| லீக்ஸ் | 350 | 370 | 360 | 360 | 450 |
| பீற்றூட் | 260 | 200 | 200 | 80 | 250 |
| கறிமிளகாய் | 300 | 280 | 220 | 230 | 280 |
| முருங்கைக்காய் | — | 1400 | 800 | 800 | 800 |
| போஞ்சி | 250 | 240 | 280 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | — | 190 | 240 |
| கீரை-1பிடி | 70 | 60 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 60 | 80 | 80 | 70 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 30-60 | 45 | 30-50 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 210 | 240 |
| வெங்காயப்பூ | 400 | 400 | — | — | — |
| முள்ளங்கி | 120 | 160 | 130 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 50 | 40 | 60 | 30 | 40 |
| வல்லாரை | 15 | 70 | 30 | 30 | 20 |
| ஈரப்பலா | — | 100 | — | 110 | 120 |

# முஸ்லிம் தலைமைகள் சமூகத்தைக் காட்டிக் கொடுத்து அரசியல் செய்ய முற்படக் கூடாது-பைஸர் அறிவுறுத்து



(கொழும்பு)

எமது சமூகம் பாதுகாக்கப்பட வேண்டுமானால் இனவாத ரீதியில் சிந்திப்பதைத் தவிர்க்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இனவாதத்தைத் தூண்டி அரசியல் செய்ய முற்பட்டால் சிறுபான்மைச் சமூகத்தின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித் தேர்தலில், இம்முறை பௌத்த சிங்கள மக்கள் மிகவும் ஆழமாகவே சிந்தித்தனர். சிறுபான்மை தரப்புக்களின் இலக்கை நோக்கி குறிவைத்து தவிடு பொடியாக்கி விட்டனர்.

ஆனால், வடக்கு-கிழக்கில் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள், கோட்டாபய ராஜபக்ஷவை முற்று முழுதாக நிராகரித்தனர்.

இதனால், என்ன நடந்தது என்பதை சிறுபான்மைச் சமூகம் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் உணர்ந்திருப்பார்கள் எனக் கருதுகிறேன்.

முஸ்லிம் சமூகம் இனி சிந்திக்க வேண்டும். சுயநல அரசியல் தலைவர்களின் பின்னால் அணிதிரளாமல் சுயமாகச் சிந்தித்து செயற்பட முன்வர வேண்டும்.

அத்துடன், முஸ்லிம் தலைமைகளும் சமூகத்தைக் காட்டிக் கொடுத்து அரசியல் செய்ய முற்படக் கூடாது. அத்துடன், ஒற்றுமையுடன் 'நாம் இலங்கையர்' என்ற ரீதியில் எமது அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்ள முன்வர வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-7)

# உப்புறோட்டு இந்து மயானம் தொடர்பில் அபிவிருத்திச் சங்கம் அக்கறை காட்டவில்லை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தெற்கு-மேற்கு உப்பு றோட்டு இந்து மயானம் அபிவிருத்தி இன்றிக் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். வடமராட்சி தெற்கு-மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட குறித்த மயானத்தில் கொட்டகைகள் அமைக்கப்படவில்லை.

மயானத்திற்கென அமைக்கப்பட்ட அபிவிருத்தி சபை எவ்விதமான நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் பொதுமக்களைச் சிரமதானம் மூலம் பார்த்தீனியச் செடிகளை அகற்றுவதற்கு முன்வருமாறு கோரிக்கை விடுத்தனர். (இ-10-60)


## உணவக வேலை ஆட்கள் தேவை

கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஐஸ்கிறீம் மற்றும் தோசை மால் கடைக்கு

- ❖ ஐஸ்கிறீம் வெட்டிக் கொடுக்கக் கூடியவர்கள்.
- ❖ தோசை வகைகள் செய்யத் தெரிந்தவர்கள்.
- ❖ சிற்றுண்டி வகைகள் செய்யத் தெரிந்தவர்கள்.
- ❖ சமையல் வேலை தெரிந்தவர்கள்.
- ❖ உணவு ஐஸ்கிறீம் பரிமாறக் கூடியவர்கள்.

உடன் தேவை. ஆண்/பெண்கள் இருபாலாரும் விரும்பத்தக்கது. திறமைக்கு தகுந்த சம்பளம் கிடைக்கும். உணவு, தங்குமிட வசதியுண்டு.


தொடர்புகளுக்கு: ராஜன்- 077 771 0785

(C-8591)


# பிள்ளையானை விடுதலை செய்ய மகிந்தவிடம் கருணா கோரிக்கை

(அக்கரைப்பற்று)

முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானை விடுதலை செய்ய பிரதமர் மகிந்தவிடம் கோரிக்கை ஒன்றை விடுத்திருப்பதாகத் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான கருணா தெரிவித்தார்.



அக்கரைப்பற்று ஆலயடிவேம்பு கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் மாலை மக்களுடன் மாபெரும் கலந்துரையாடலில் ஈடுபட்ட பின்னர் பொதுமகன் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். திருகோணமலையில் எங்கள் கட்சியின் கட்டமைப்பு முன்னெடுக்கப்படுகிறது.

முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானை விடுதலை செய்ய பல முயற்சிகளை நான் மேற்கொண்டுள்ளேன். நாம் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து பயணிப்பது தான் பிரதான இலக்கு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இந்த அறிக்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த செப்டெம்பர் மாதம் 22 ஆம் திகதி இந்த ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது.

கடந்த 3 மாத காலப் பகுதியில் 30 பேரிடம் குறித்த ஆணைக்குழு வாக்கு மூலம் பதிவு செய்தது.

மேலும் குண்டுத் தாக்குதல்கள் குறித்து 65 பொது மக்களின் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட 250 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3 சூரி செவ் 12 இல்<br>உயரம்:6'2''<br>தகைமை/தொழில்:B.Sc , Hydrograpic Surveyor, Singapore<br>எதிர்பார்ப்பு:சைவபோசணம் (உள்நாடு)<br>தொ.இ: B/10306 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 2 சூரி செவ் 4 இல்<br>உயரம்:5'10''<br>தகைமை/தொழில்: BA,MA, Policy Analyst, CANADA<br>எதிர்பார்ப்பு:Doctor, Engineer<br>தொ.இ: G/10314 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சதயம் கி.பா: 16<br>உயரம்:5'6''<br>தகைமை/தொழில்:BA, Med Following, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/10310 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 17 ½<br>உயரம்:5'6''<br>தகைமை/தொழில்:B.Sc, M.Sc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:Doctor, Engineer (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: G/10316 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1<br>கி.பா: 19செவ் 12 இல்<br>உயரம்:5'6''<br>தகைமை/தொழில்:M.Sc Engineer, America<br>எதிர்பார்ப்பு:A/L, பட்டதாரி (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/10311 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்:உத்தரம் 1 சூரி செவ் 7 இல்<br>உயரம்:5'6''<br>தகைமை/தொழில்:B.Sc பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு:அரச தனியார் தொழில் (உள்நாடு)<br>தொ.இ: G/10318 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>உயரம்:5'4''<br>தகைமை/தொழில்:O/L, சாரதி<br>எதிர்பார்ப்பு:சைவபோசணம் (உள்நாடு, வெளிநாடு)<br>தொ.இ: B/10312 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 2<br>கி.பா: 13<br>உயரம்:5'4''<br>தகைமை/தொழில்:A/L, அரச தொழில்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/10324 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

22.12.2019 (ஞாயிற்றுக்கிழமை)

### பிறேம்நாத் ஸாகித்



இன்று தனது முதலாவது பிறந்த நாளை வெகு விமர்சையாக தனது இல்லத்தில் (சுவிஸ்) கொண்டாடும் திருமதி பிறேம்நாத் துளசி தம்பதியரின் அன்புச் செல்வன் ஸாகித் குட்டிக்கு எமது பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் பல்லாண்டு காலம் சகல சௌபாக்கியங்களும் பெற்று வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்:
தாத்தா, அம்மம்மா குடும்பம்.

தெய்வநாதன் தவமலர்
'தமிழ்த்தாரகை'
இமையாணன், உடுப்பிட்டி.

(C 8603)

# HNDA ☞



HNDA 002 சுவர்ணியா வசந்தராஜா
HNDA 003 இந்துஜா திசநாதன்
HNDA 004 நயினசெல்வன் சிவரூபன்
HNDA 005 கோபாலசிங்கம் துஷாந்தன்
HNDA 006 அனுசியா நடராஜா


ALUMNI ASSO
ALUMNI ASSO
JAFFNA ADVANCED TECHOLO
பாராட்டி வாழ்த்து

22.12.2019 மற்றும் 23.12.2019 ஆம் திகதிகளில்
மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இலங்கை உயர்
பட்டமளிப்பு வைபவத்தில் HNDA, HNDM, HNDE, HND
யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவன பழைய
பட்டம் பெறும் ஏனைய மாணவர்களையும் மேலும்
வாழ்த்துகின்றோம்.

ALUMNI ASSOC
JAFFNA ADVANCED TECHNOL
No.665/2, BEACH ROA




HNDA 029 தனு தேவராசா
HNDA 028 மொறின் நர்மதா பெனடிற்
HNDA 027 யனுசா யோகநாதன்
HNDA 026 ஜீவரட்னராஜா ஷஜீவன்
HNDA 024 குணசேகரலிங்கம் காந்தரூபன்
HNDA 023 நடராசா வினோத்



HNDA 030 வைஸ்ணவி இளங்கோ
HNDA 034 தர்ஷிகா கணேசராசா
HNDA 035 கஜேந்தினி பாலசிங்கம்
HNDA 036 தர்மரத்தினம் மயூறராஜ்
HNDA 037 விதுஷா கணேஷ்வரன்
HNDA 038 தேனுகா இராஜசேகரம்
HNDA 039 புவனேந்திரராசா சங்கீத்
HNDA 040 சர்வேஸ்வரன் கதிஸ்



HNDM 256 கிரிசாந்தி பாலசுப்பிரமணியம்
HNDM 255 ஞானரட்னம் பிரசாந்
HNDM 254 ஆன் மனோஜினி புவனேந்திரன்
HNDM 253 வித்தியா முத்துலிங்கம்
HNDM 252 அனுராதா சிவரஞ்சன்
HNDM 251 விதுர்ஷனா பிரதாபன்
HNDM 250 ரூபதர்ஷினி இராசலிங்கம்
HNDM 249 தர்மினி சந்திரசேகரம்



HNDM 257 நிதுஷா இராஜேந்திரன்
HNDM 258 மயூரி கேதீஸ்வரன்
HNDM 259 பம்பை செட்டியார் கந்தன்ராஜ்
HNDM 260 கேதாரநாதன் சிவரூபன்
HNDM 261 தவேந்திரன் ஜித்தேந்திரா
HNDM 262 இராஜசேகரம் ரஜிதன்
HNDM 263 நவநேசன் அமிமன்
HNDM 264 விதுர்ஷனா இராசேந்திரம்



HNDIT 226 கஸ்தூரி ஜெயராஜசிங்கம்
HNDIT 225 ஜெயராஜா கோவர்த்தனன்
HNDIT 223 குணேந்திரசீலன் வாகீசன்
HNDIT 220 ஜீவகுலநாதன் வருணன்
HNDIT 219 சோபிகாசினி சிறிபதி
HNDIT 218 மிறியம் இவோன்கா முத்துக்குமார்
HNDIT 217 சரண்யா நவரட்ணராஜா
HNDIT 216 அர்ச்சனா இராஜசேகரம்



HNDIT 233 திருமலைராசா தனேஷ்
HNDIT 236 சண்முகராஜா பார்த்தீபன்
HNDIT 237 விமலினி குகராஜன்
HNDIT 239 கிருத்திகா தருமராசா
HNDIT 240 தட்சணாமூர்த்தி சுஜிதரன்
HNDIT 241 சந்திரசேகரம் லலீசன்
HNDIT 242 லதிகா சந்திரமோகன்
HNDIT 243 ருக்ஷாயினி பாலகுமாரன்



HNDE 186 கார்த்திகா கபிலன்
HNDE 184 சகிஷ்மனா சிவசந்திரபோஸ்
HNDE 183 இலக்ஷ்மனா வரதராஜா
HNDE 182 கரோலின் ஜினுஷா அன்ரன் பெஞ்சலோ
HNDE 181 ஜானுதி இந்திரகுமார்
HNDE 179 துசானி பிரதீபன்
HNDE 178 யானுகா தர்நிசன்
HNDE 173 மயூரி செந்தில்நாதன்

# ASSOCIATION
# ASSOCIATION

ED TECHOLOGICAL INSTITUTE

## ாழ்த்துகின்றோம்

SLIATE

ம் திகதிகளில் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச லங்கை உயர் தொழில் நுட்பவியல் நிறுவன 16ஆவது , HNDE, HNDIT, HNDTHM, HND.ENG. பட்டம் பெறும் றுவன பழைய மாணவர் சங்க அங்கத்துவர்களையும் ாயும் மேலும் பல பட்டங்கள் பெற்று சிறப்படைய

NNI ASSOCIATION
ED TECHNOLOGICAL INSTITUTE,
, BEACH ROAD, JAFFNA.



HNDA 007 பராசசிங்கம் தயாளரூபன் | HNDA 008 தர்சிகா தில்லைராசன் | HNDA 010 ஹாட்ஸ் சுகந்தினி அல்பிறட் மரியாம்பிள்ளை | HNDA 011 ரஸ்மிதா பரமேஸ்வரன் | HNDA 012 குமாரலிங்கம் பதீதன் | HNDA 015 வரதராசா விமலன்



HNDA 021 பிரான்சிஸ் றபாயேல் | HNDA 020 சிவநேசன் சிவகணேசன் | HNDA 019 சைலாயினி இராசதுரை | HNDA 018 அல்பேட் ஜெயரட்ணம் மரிய பிரசாந்தன் | HNDA 017 பிரியங்கா யோகநாதன் | HNDA 016 லெனிசியா ஜெகநாதன்



HNDA 040 சர்வேஸ்வரன் கதீஸ் | HNDA 041 சகிலா இராசநாயகம் | HNDA 043 சுகீர்த்தனா பரமதாஸ் | HNDA 044 சிவதனுஹா சூரியகுமார் | HNDA 045 ஜெயப்பிரியா கனகநாயகம் | HNDA 046 பிரியா கேசவதீபன் | HNDA 047 நிறோஜா இந்திரலோகன் | HNDA 048 ஆதம்கண்டு மொஹமட் அஸாம்




HNDM 249 தர்மினி சந்திரசேகரம் | HNDM 247 ஆனந்தராஜ் அனோஜன்ராஜ் | HNDM | HNDA 055 மிதிலா பரமநாதன் | HNDA 053 தனுஷா குலநாதன் | HNDA 052 சிறீஸ்காந்தன் சிறிபாலறசாத் | HNDA 050 ரம்சிகா நவசிவாயம் | HNDA 049 சுஜீரா உதயகுமார்



HNDM 264 விதுர்ஷனா இராசேந்திரம் | HNDM 266 நிவேஜா குமாரசாமி | HNDM 267 சுகன்யா தர்மரட்ணம் | HNDM 268 பானுஜா இராசலிங்கம் | HNDIT | HNDIT 187 வினோதா கனகசிங்கம் | HNDIT 188 தேவகரன் தீபன் | HNDIT 201 நிராஞ்சலி சிவநாதன்



HNDIT 216 அர்ச்சனா இராஜசேகரம் | HNDIT 215 கௌசிகா செல்வராசா | HNDIT 214 சாருகா ஜெகநாதன் | HNDIT 213 வித்தகி செல்வரத்தினம் | HNDIT 211 வசந்தினி அடைக்கலதாஸ் | HNDIT 212 யேமலர் கொன்ஸ்ரன்ரைன் லூட்ஸ் | HNDIT 206 பவித்திரா சிவனேசன் | HNDIT 205 தமிழினி சத்தியமூர்த்தி




HNDIT 243 ருக்ஷாயினி பாலகுமாரன் | HNDIT 244 ஜனா தங்கராசா | HNDIT 245 குணபாகன் லவரூபன் | HNDTHM | HNDTHM 271 அம்பாலிகா முரளி | HNDTHM 273 அருள்வாகினி தியாகராஜா | HNDE | HNDE 152 பஞ்சலானி விவேகானந்தன்



HNDE 173 மயூரி செந்தில்நாதன் | HNDE 172 திலுக்ஷா ஜெகநாதன் | HNDE 171 லிடியா ரிஷானா ஜெறாட் கனியூட் | HNDE169 ஷாலினி சாந்தகுமார் | HNDE 164 நிதர்சனா உதயகுமார் | HNDE 160 மிரீதா மகேந்திரன் | HNDE 159 மாக்கிரெட் செபஸ்ரியன் | HNDE 157 அனுசா சிவபாதசுந்தரம்

# தமிழ்த் தலைமைகள் ஒற்றுமையாக மேற்கொள்ள வேண்டிய அரசியல் நகர்வுகளை தடுத்து நிறுத்தியவர் சம்பந்தனே!

## ஈ.பி.ஆர்.எல்.எவ்.குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் தங்களுக்கே மீண்டும் ஆணை வழங்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

அவரது உரைக்குப் பதிலளித்து ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ்.க.பிரேமச்சந்திரன் ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில், கடந்த 18 ஆம் திகதி நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் 70 ஆவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் இரா. சம்பந்தன் பல்வேறுபட்ட விடயங்களை உள்ளடக்கி நீண்ட உரை ஒன்றை ஆற்றியிருந்தார்.

தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு எழுபது வருடங்கள் ஆகியிருக்கலாம். 1976 ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2004 ஆம் ஆண்டுவரை கடந்த 28 ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி உறங்கு நிலையிலேயே இருந்தது.

2004 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்காக தமிழரசுக் கட்சியின் சின்னம் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, இரா. சம்பந்தன் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினை தொடர்பாக தாங்கள் பல விடயங்களைச் சாதித்திருப்பதாகவும் சர்வதேச ரீதியான ஒப்புதல்களை எழுத்துமூலம் தாங்கள் பெற்றிருப்பதாகவும் தாங்கள் நீண்ட அனுபவசாலிகள் என்றும் மக்கள் தொடர்ச்சியாக தங்களுக்கே ஆதரவு தந்திருக்கிறார்கள் என்றும் தொடர்ந்தும் தங்களுக்கே ஆதரவு தரவேண்டும் என்று கூறியிருப்பதுடன், தங்களால் மாத்திரமே அதிகாரப்பகிர்வினை ஏற்படுத்திக்கொள்ள முடியுமென்றும் ஏனையோரால் இவ்விடயங்களைக் கையாள முடியாதென்றும் கூறியிருப்பதுடன், தங்களால் மாத்திரமே சர்வதேச சமூகத்தினதும் இந்தியாவினதும் ஆதரவினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்ற தோரணையிலும் பேசியிருக்கின்றார்.

2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தை முன்னெடுக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்றத்தினூடாகவும் சர்வதேச மட்டத்திலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்தது. அது வெறுமனே சம்பந்தர் தொடர்புபட்ட விடயமாக இருக்கவில்லை.

அந்தக் காலத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழீழ விடுதலை இயக்கம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை இணைந்தே சர்வதேச ரீதியாகவும் பாராளுமன்றத்திலும் தமிழ் மக்களின் உரிமைகளுக்கான போராட்டங்களை ஜனநாயக வழியில் முன்னெடுத்து வந்திருந்தனர். தனித் தமிழரசுக் கட்சியோ அல்லது இரா.சம்பந்தனோ இதற்குத் தனித்து உரிமைகோர முடியாது.

2009 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதற்குப் பின்னர், தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைக்காகப் போராடுவதற்கான முழுப்பொறுப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேல் வந்திறங்கியது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய நிலையில் தமிழரசுக்கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய மூன்று கட்சிகள் மட்டுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் பெற்றிருந்தன.

இந்தக் காலகட்டத்தில்தான், மகிந்த அரசாங்கத்துடன் பதினெட்டு சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று அவை தோல்வியில் முடிவடைந்தன.

இதே காலகட்டத்தில் எம்.ஏ. சுமந்திரன் மகிந்தவுடன் இணைந்து கிரிக்கெட் விளையாடியதும் இரா.சம்பந்தன் சுதந்திரதினக் கொண்டாட்ட நிகழ்வில் பங்கேற்றதும் ரணிலை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து மேதினம் நடத்தி அதில் சிங்கக் கொடியை கையில் ஏந்திய நிகழ்வுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்த விடயங்கள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பங்காளிக் கட்சிகளினதும் எதிர்ப்பிற்கு மத்தியில் இரா.சம்பந்தனால் மேற்கொள்ளப்பட்ட தன்னிச்சையான முடிவுகளாகவே இருந்தன.

இவ்வாறான சூழ்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதற்காக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை (புளொட்)யும் கூட்டமைப்பின் அங்கத்தவராக இணைத்துக் கொண்டோம்.

அதேசமயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்தும் நோக்கமாக அதற்கான யாப்பு ஒன்றினைத் தயாரிக்கவும் அதனைப் பதிவு செய்வதற்குமாக பல்வேறுபட்ட கலந்துரையாடல்களை கூட்டமைப்பிற்குள் தொடர்ச்சியாக நடத்தி வந்தோம்.

தமிழரசுக் கட்சியின் தலைமை சாக்குப்போக்குச் சொல்லி அதனை முற்றிலும் நிராகரித்தது. இன்றுவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது எதுவிதக் கட்டமைப்புமற்ற, யாப்பு எதுவும் இல்லாத தேர்தல் ஆணையத்தால் பதிவு செய்யப்படாத ஒரு கூட்டாகவே இருந்து வருகின்றது.

2015 ஆம் ஆண்டின் பொதுத் தேர்தலின் பின்னர், இவர்கள் எடுத்த அனைத்து முடிவுகளும் தமிழ் மக்களை மேலும் மேலும் பாதிப்புக்குள்ளாக்கும் முடிவுகளாகவே அமைந்திருந்தது.

பிரத்தியேகமாக ஜெனிவா மனித உரிமைகள் ஆணையத்தில் இலங்கை அரசாங்கத்திற்குப் பெற்றுக் கொடுத்த கால அவகாசங்களானது தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த விடாமல் ஒரு தடுப்பணையை ஏற்படுத்தியிருந்தது.

இதனால் மைத்திரி-ரணில் கூட்டு அரசாங்கம் பாதுகாக்கப்பட்டதே தவிர, தமிழ் மக்களுக்கான நீதியை நோக்கிய பயணத்தில் குறிப்பிடத்தக்க வெற்றியை ஈட்ட முடியவில்லை.

அதைப் போலவே, உள்நாட்டிலும் அரசினைப் பாதுகாப்பதை முழுமுதல் நோக்கமாகக் கொண்டு தமிழ் மக்களுக்குக் கேடுவிளைவிக்கக்கூடிய அனைத்து வரவு-செலவுத் திட்டங்களுக்கும் இவர்களால் ஆதரவு வழங்கப்பட்டது.

அதற்குச் சொல்லப்பட்ட காரணம்: ஒரு புதிய அரசியல் சாசனம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதற்கு இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதா கவே அமைந்திருந்தது.

நீதிமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் சர்வதேச அமைப்புக்களிலும் இலங்கை அரசாங்கத்தைப் பாதுகாத்துவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இவர்கள் கூறிவந்த புதிய அரசியல் சாசனம் என்பதை இறுதிவரை பாராளுமன்றத்தில் நிறைவேற்ற முடியவில்லை.

இதற்கு கூட்டு அரசாங்கத்தின் செயற்பாடுகள் ஒருவகையில் காரணமாக இருந்தாலும் மைத்திரி-ரணில் அரசாங்கத்தை இவர்கள் சரியான முறையில் கையாளத் தவறியமையும் புதிய அரசியல் சாசனத்தைக் கொண்டுவரமுடியாமைக்கான காரணமாகும்.

விடுதலைப் புலிகள் மட்டுமன்றி, ஏனைய விடுதலை அமைப்புக்களும்கூட, தமிழ் மக்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்காக தமது இன்னுயிரை ஈந்திருக்கிறார்கள். பல்வேறு தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்.

அவர்களின் தியாகங்களின் மீது நின்றுதான் நாம் தமிழ் மக்களின் உரிமைகள் குறித்து குரல்கொடுக்கின்றோம் என்பதை இரா.சம்பந்தன் மறந்துவிடக் கூடாது.

நீங்கள் சொல்வது அத்தனையும் சரியென்று நினைக்காதீர்கள். உங்களது ஒவ்வொரு நடவடிக்கைகளையும் தமிழ் மக்கள் மிகவும் அவதானமாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து நீங்கள் கருத்துக்களை வெளியிடுவது நல்லதென்பதுடன், மக்களைத் தொடர்ந்தும் ஏமாற்ற முடியும் எனக் கருத வேண்டாம் என்றும் தங்களை வினயமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

உங்களது உதடுகள் ஐக்கியத்தை உச்சரிக்கின்றபோதிலும் உங்களது தன்னிச்சையான செயற்பாடுகள் எப்பொழுதும் ஐக்கியத்திற்குக் குந்தகமாகவும் எதிராகவுமே இருக்கின்றது.

உங்களது செயற்பாடுகளும் அணுகுமுறைகளுமே ஒரு மாற்றுத் தலைமைக்கான அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. தமிழ் அரசியல் தலைமைகள் அடுத்தகட்ட அரசியலை முன்னெடுத்துச் செயற்பட வேண்டிய நிலையில், மீண்டும் ஒரு புதிய ஐக்கிய முன்னணியைக் கட்டியெழுப்புவதில் நேரத்தைச் செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் தங்களாலேயே உருவானது என்பதைத் தங்களுக்குச் சுட்டிக்காட்ட விழைகிறோம்.

இதற்கான முழுப்பொறுப்பையும் தாங்களே ஏற்கவேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## "தமிழருவி" கலைவிழா

(கொழும்பு)

மொரட்டுவைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றம் வருடந்தோறும் நடத்தி வரும் "தமிழருவி" கலைவிழா இன்று 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் பிற்பகல் 3.02 மணியளவில் ஆரம்பமாகும்.

இதில் தமிழ் இலக்கிய மன்றம் வருடந்தோறும் நடத்திவரும் சொற்கணை விவாத நிகழ்வில் வெற்றியாளர் கௌரவிப்பு, ஒளிச் சுவடு புகைப்படப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்வு ஆகியவற்றுடன் மாணவர் கல்விக்காய் உதவும் ஜீவநதி செயற்றிட்டத்தின் விபரிப்பும் நூல் வெளியீட்டு வைபவமும் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமியும் சிறப்பு விருந்தினராக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தின் மூத்த அறிவிப்பாளர் "மதுரக்குரலோன"அப்துல் ஹமீத்தும் கௌரவ விருந்தினராக பொறியியலாளர் த.நந்தனும் கலந்து கொள்வதுடன் மக்கள் மன்றத் தீர்ப்பாளராக யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத் தலைவர் "செந்தமிழ் சொல்லருவி" ச.லலீசன் பங்கு பெறுவார். (இ)

## சுன்னாகம் நூலகத்திற்கு விசேட தேசிய விருது



(கொழும்பு)

2018 ஆம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தில் வாசிப்பை ஊக்குவிக்கும் செயற்பாட்டில் மிகச் சிறப்பாகச் செயலாற்றிய மைக்காக சுன்னாகம் பொது நூலகத்துக்கு இம்முறை விசேட தேசிய விருது வழங்கப்பட்டது. தேசிய வாசிப்பு மாதத்தின் பிரதான விழா கடந்த வியாழக்கிழமை கொழும்பிலுள்ள விளையாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறறது.

இவ் விழாவில் சுன்னாகம் பிரதம நூலகர் திருமதி ஜெயலட்சுமி சுதர்சன் கலந்து கொண்டு கல்வி யமைச்சர் டளஸ் அழகப்பெரும விடமிருந்து விருதைப் பெற்றுக் கொண்டார்.

தேசிய வாசிப்பு மாதத்தில் சிறப்பாகச் செயற்பட்டமைக்காக சுன்னாகம் பொதுநூலகம் ஏற்கனவே ஏழு தடவைகள் தேசிய விருது பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-18)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 17.12.2019-14.01.2020

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

### குடும்ப முன்னேற்றம் கூடும் நேரம்



விகாரி வருட மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் தனாதிபதி செவ்வாய் உங்கள் இராசியிலேயே வீற்றிருக்கிறார். எனவே, பண வரவுக்கு பஞ்சம் ஏற்படாது. மனக்குழப்பங்கள் அகலும். வீடு, இடம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாள் எண்ணங்கள் நிறைவேறும் விதத்தில், கிரக நிலைகள் உலா வருகின்றன.

விரயாதிபதி புதன் தன ஸ்தானத்தில் வலிமை இழந்திருக்கிறார். எனவே, விரயத்திற்கு ஏற்ற வருமானம் வந்து கொண்டே இருக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புகள் அகலும். முன்னோர்கள் கட்டி வைத்த ஆலயங்களை முறையாக பராமரிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். பட்டும் படாமலும் பேசி வந்த உறவினர்கள், இப்போது ஒட்டி உறவாடுவர். திட்டமிட்ட காரியங்களில் சில மாற்றங்களைச் செய்து வெற்றி வாய்ப்பை உருவாக்கிக் கொள்வீர்கள்.

சகாய ஸ்தானத்தில் சூரியன், வியாழன், சனி, கேது ஆகிய 4 கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. இதனால் தொழில் முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். வி.ஐ.பிக்களின் ஒத்துழைப்போடு உங்கள் விருப்பங்கள் அனைத்தையும் நிறைவேற்றிக் கொள்வீர்கள். குறிப்பாக வீடு, வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். 'கட்டிய வீட்டை பழுதுபார்க்க முடியவில்லையே, கடன் சுமை கூடிக் கொண்டே போகிறதே' என்றெல்லாம் கவலைப்பட்டவர்களுக்கு, இந்த மாதத்தில் நல்ல தகவல் இல்லம் தேடி வரும். தாய் வழி ஆதரவு கிடைக்கும்.

பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமாக நீண்ட நாட்களாக நடைபெற்ற பஞ்சாயத்துக்கள் இப்பொழுது சாதகமாக முடியும். உங்களுக்கு வரவேண்டிய பங்கு உரிய விதத்தில் கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்க, நீங்கள் எடுத்த புது முயற்சியில் வெற்றி கிடைக்கும். இராசிநாதன் 4 இல் சஞ்சரித்து, அதன் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். நாகரிக பொருட்கள் வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள்.

இம்மாதம் 'இறைவன் படிஅளக்கும் திருநாள்' வருகிறது. அன்றைய தினம் சிவாலய வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். அனுமன் ஜெயந்தி அன்று ஆஞ்சநேயரையும் ஆருத்ரா தரிசனம் அன்று நடராஜப் பெருமானையும் வைகுண்ட ஏகாதசி அன்று வைகுண்ட வாசனையும் நினைத்து உள்ளன்போடு வழிபட்டால் உங்கள் எதிர்பார்ப்புகள் அனைத்தும் எளிதில் நிறைவேறும்.

பொன்னான புதனின் பெயர்ச்சி

டிசெம்பர் 21 ஆம் திகதி தனுசு இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு 9, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சகாய ஸ்தானத்திற்கு செல்லும் இந்த நேரம் ஒரு யோகமான நேரம். குறிப்பாக சகோதர வழியில் உங்களுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும். ஜனவரி 7 ஆம் திகதி மகர இராசிக்கு புதன் செல்கிறார். இந்த மகர புதனின் சஞ்சாரத்தால் விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து இணைவர். வெளிநாட்டு சம்பந்தமான அழைப்புகள் வரலாம்.

விருச்சிக செவ்வாய் சஞ்சாரம்

டிசெம்பர் 28 ஆம் திகதி செவ்வாய், தனது சொந்த வீடான விருச்சிகத்திற்கு வருகிறார். இக்காலம் ஒரு இனிய காலமாகும். தன ஸ்தானம் வலுவடைவதால், பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும். கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். 'தொழிலை விரிவுபடுத்த போதிய மூலதனம் இல்லையே' என்று கவலைப்பட்டவர்களுக்கு, அதற்கான வாய்ப்புகள் உருவாகும். தடைகள் தானாக விலகும். மங்கள நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும்.

சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

ஜனவரி 10 ஆம் திகதி கும்ப இராசிக்கு




சுக்கிரன் செல்கிறார். உங்கள் இராசிநாதனாகவும் அஷ்டமாதிபதியாகவும் விளங்கும் சுக்கிரன், பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது சென்ற மாதத்தில் ஏற்பட்ட இழப்புகளை ஈடுசெய்ய புதிய வாய்ப்புகள் வந்து சேரும்.

பிள்ளைகளால் பெருமை உண்டு. அவர்களின் கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

இல்லத்தில் நடைபெறவிருக்கும் மங்கள நிகழ்ச்சிகளை முன்னிட்டு, விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் விருப்பம் செலுத்துவீர்கள்.

ஆறு கிரகங்களின் சேர்க்கை

25.12.2019 மாலை 5.10 மணி முதல் 27.12.2019 இரவு வரை தனுசு இராசியில் 6 கிரகங்களின் (சூரியன், சந்திரன், குரு, புதன், கேது, சனி) சேர்க்கை உருவாகிறது. இந்த கிரகங்கள் ஒரே இராசியில் இருக்கும் பொழுது மிக மிக கவனத்தோடு செயற்பட வேண்டும்.

குறிப்பாக வழக்குகளால் கவலை ஏற்படும். தொழிலில் இழப்புகள் உருவாகலாம். உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படலாம்.

இம்மாதம் வெள்ளிக்கிழமை தோறும் விரதமிருந்து தெற்கு நோக்கிய அம்பிகையை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இம்மாதம் பொருளாதார பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் பலவற்றைக் காணப்போகிறீர்கள். தொழில் வளர்ச்சி சிறப்பாகவே இருக்கும்.

எதிர்கால முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சி வெற்றியாக முடியும். கணவன்-மனைவி உறவு பலப்படும். தாய் வழியில் எதிர்பார்த்த நற்பலன்கள் மாதத்தின் தொடக்கத்திலேயே கிடைக்கலாம். உடன்பிறப்புகளும் உங்களுக்கு உறுதுணையாக இருப்பர்.

தன்னம்பிக்கையும் தைரியமும் உள்ளத்தில் குடிகொள்வதால், தன்னிச்சையாக இயங்க முற்படுவீர்கள். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு கிட்டும்.

வீட்டிற்குத் தேவையான விலைஉயர்ந்த பொருட்கள் மற்றும் ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு உத்தியோக உயர்வும் ஊதிய உயர்வும் வந்து சேரலாம். 6 கிரக சேர்க்கை காலத்தில் மட்டும் முன் எச்சரிக்கையோடு இருப்பது நல்லது. சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபடுவது நல்லது.

### தொழில் வளர்ச்சி கூடும் நேரம்



விகாரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் இலாபாதிபதி புதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கிறார். தன ஸ்தானத்தில் சூரியனோடு, குரு, சனி, கேது இணைந்து சஞ்சரிக்கிறார்கள். எனவே பொருளாதாரத்தில் மிகுந்த முன்னேற்றம் ஏற்படும். கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகும். வளர்ச்சி பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும்.

உங்கள் இராசிக்கு தன பஞ்சமாதிபதியான குரு பகவான், தன் சொந்த வீட்டில் இருந்தபடி மாதத் தொடக்கத்தில் சந்திரனை பார்க்கிறார். இதனால் 'குரு -சந்திர யோகம்' உருவாகிறது. தனுசு இராசியில் புதன் வந்து சேரும் பொழுது, புத - ஆதித்ய யோகம் செயற்படும். மேலும் மாதத் தொடக்கத்தில் கூட்டுக்கிரக யோகமும் இருக்கிறது. இத்தனை யோகமும் செயற்படும் இந்த மாதத்தில் தொட்ட காரியங்களில் எல்லாம் வெற்றி கிடைக்கும்.

உங்கள் இராசிநாதன் செவ்வாய் 12 ஆம் இடமான விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே மாதத் தொடக்கத்திலேயே உங்களுக்கு விரயங்கள் ஏற்படத் தொடங்கும். இருப்பினும் எதையும் சமாளிக்கும் ஆற்றலும், மனப்பக்குவமும் உங்களுக்கு உண்டு. எனவே கட்டடம் கட்டும் முயற்சி, கட்டடம் வாங்கும் முயற்சி, கட்டிய கட்டடத்தை பழுது பார்க்கும் முயற்சி, வாகனங்கள் வாங்குவது என சுப விரயங்களைச் செய்ய முன்வரலாம்.

இம்மாதம் 'இறைவன் படியளக்கும் திருநாள்' வருகிறது. அன்றைய தினம் சிறிது அரிசி எடுத்து, சிவாலயத்தில் இறைவன் சன்னிதியில் வைத்து வணங்கிவிட்டு, அதைக் கொண்டு வந்து வீட்டில் சமைத்து சாப்பிட்டால் எந்த நாளும் பசியின்றி வாழ வழிபிறக்கும். மேலும் ஆருத்ரா தரிசனத்தன்று நடராஜர் சன்னிதியில் சிவபுராணம் பாடி வழிபடுங்கள். அனுமன் ஜெயந்தி அன்று அனுமன் வழிபாட்டையும் வைகுண்ட ஏகாதசியன்று திருமகள் சமேத விஷ்ணு வழிபாட்டையும் முறையாக மேற்கொண்டால், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கலாம்.

பொன்னான புதன் பெயர்ச்சி

உங்கள் இராசிக்கு 8, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். இலாபாதிபதியான புதன், டிசெம்பர் 21 ஆம் திகதி தன ஸ்தானத்திற்கு வருகிறார். அங்கிருக்கும் கிரகங்களோடு அவர் இணைவதால் கூட்டுக் கிரக சஞ்சாரம் அமைகிறது. இதன் விளைவாக குடும்ப முன்னேற்றம் கூடும். புதிய நண்பர்களின் அறிமுகத்தால் பொருளாதார முன்னேற்றம் காண்பீர்கள். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு இக்காலம் ஒரு பொற்காலமாகும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். ஆதாயம் தரும் தகவல்கள் வந்து கொண்டே இருக்கும். ஜனவரி 7 திகதி மகரத்திற்கு புதன் செல்கிறார். அங்குள்ள சுக்கிரனோடு இணைந்து புத - சுக்கிர யோகத்தை உருவாக்குகிறார். எனவே பெண் குழந்தைகளால் பெருமை வந்து சேரும். தங்கம், வெள்ளி வாங்குவதில் தனி கவனம் செலுத்துவீர்கள்.

விருச்சிக செவ்வாய் சஞ்சாரம்

டிசெம்பர் 28 ஆம் திகதி விருச்சிக இராசிக்கு செவ்வாய் வருகிறார். இக்காலம் ஒரு பொற்காலமாகும். இராசிநாதன் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கும் பொழுது திட்டமிடாத காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். வாங்கிய சொத்தை விற்பதன் மூலம் கணிசமான தொகை உங்கள் கரங்க




ளில் புரளும். தேங்கிய காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். திடீர் திடீரென தனலாபம் வந்து கொண்டே இருக்கும். நாகரிக பொருட்கள் வாங்குவதில் நாட்டம் செலுத்துவீர்கள்.

சுகம் தரும் சுக்கிரப் பெயர்ச்சி

இதுவரை உங்கள் இராசிக்கு மூன்றாம் இடத்தில் சஞ்சரித்து வந்த சுக்கிரன் ஜனவரி 10 ஆம் திகதி 4 ஆம் இடத்திற்கு செல்கிறார். 4 ஆம் இடம் என்பது சுக ஸ்தானம் மற்றும் தாய் ஸ்தானம் மற்றும் வாகன ஸ்தானமாகும். எனவே அவை எல்லாவற்றிலும் நல்ல மாறுதல்கள் ஏற்படும். நினைக்க இயலாத இராஜயோகத்தை ஒருவர் பெற வேண்டுமானால், கிரகநிலைகள் சாதகமாக இருக்க வேண்டும். சுக்கிரனின் பார்வை 10 ஆம் இடத்தில் பதிவதால் தொழில் வளம் சிறப்பாக இருக்கும். இலாபம் எதிர்பார்த்தபடி வந்து சேரும். புதிய ஒப்பந்தங்களும் அடுக்கடுக்காக வரும் நேரம் இது.

ஆறு கிரகங்களின் சேர்க்கை

25.12.2019 மாலை 5.10 மணி முதல் 27.12.2019 இரவு 12.19 மணிவரை தனுசு இராசியில் 6 கிரகங்களின் (சூரியன், சந்திரன், புதன், குரு, சனி, கேது) சேர்க்கை உருவாகிறது. இத்தனை கிரகங்கள் ஒரே இராசியில் அமையும் பொழுது, கூடுதல் கவனத்துடன் செயற்பட வேண்டும். எதிர்பாராத விதத்தில் உறவினர் வழியில் விரயங்கள் ஏற்படலாம். பிடிவாத குணத்தை தளர்த்திக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலும். பொறுப்பு சொல்வதை தவிர்க்க வேண்டிய நேரம் இது.


இந்த வாரம் சதுர்த்தி விரதம் இருந்து விநாயகப்பெருமானை வழிபடுவது நல்லது.

பெண்களுக்கான சிறப்பு பலன்கள்

எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிறைவேறும் மாதமாகும். வசதி வாய்ப்புகள் பெருகும். வருமானம் திருப்தி தரும். கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் பெருகும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். இந்த நேரத்தில் ஆலய வழிபாட்டிலும் கவனம் செலுத்துவீர்கள். விரதங்களிலும்வழிபாடுகளிலும் முழு நம்பிக்கை வைத்திருக்கும் உங்களுக்கு கூட்டுக்கிரக யோகம் மற்றும் புத-சுக்கிர யோகமும் ஏற்படுவதால் சந்தர்ப்பங்கள் அனைத்தும் சாதகமாக அமையும். பெற்றோர் மற்றும் உடன்பிறப்புகளின் பாச மழையில் நனைவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, வெளிநாட்டு முயற்சி, விவாகம் நினைத்தபடியே நிறைவேறும். ஆரோக்கிய தொல்லைகளில் இருந்து விடுபடுவீர்கள். குறிப்பாக பணிபுரியும் பெண்களுக்கு பளிச்சிடும் திறமையின் காரணமாக பதவி உயர்வும் ஊதிய உயர்வும் கிடைக்கலாம். ஆனைமுகப் பெருமான் வழிபாடும், ஆறுமுகப் பெருமான் வழிபாடும் ஆனந்தமான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும். (தொடரும்)

# தலைவர் பிரபாகரன் காலத்திலேயே பெண்களின் வகிபாகம் சிறப்பாக இருந்தது

## சிறீதரன் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

**தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் காலத்திலேயே பெண்களின் வகிபாகம் சிறப்பாக இருந்தது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.**

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட மகளிரணித்தெரிவு நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் பெண்களை அரசியல் ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் தலைவர் பிரபாகரன்



பல்பரிணாமத்துடன் வளர்த்தவர்.

இந்த மண்ணிலே சகோதரி இசைப்பிரியா மற்றும் இன்னும் பல சகோதரிகளுக்கு என்ன நடந்தது என்பதை இந்த உலகம் நன்கு அறியும். அத்துடன் இலங்கை அரசின் புலனாய்வு எவ்வாறு செயற்படும் என்பதை தமிழ் பெண்களுக்கு நிகழ்ந்த உதாரணங்களை விட தற்போது சுவிஸ் தூதரக பணியாளருக்கு நிகழ்ந்திருப்பதனூடாக சிங்கள சகோதரர்களும் தற்போது அறிந்திருப்பர்.

தமிழ் மக்களுக்கான எந்த அதிகாரப்பகிர்வும் கொடுக்க முடியாது எனக்கூறும் ஜனாதிபதியோடு இணைந்து சிலர் பயணிக்கின்றனர்.

இவ்வாறு சிங்கள பௌத்த வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள சிங்கள மக்கள். விரும்புவவையையே கொடுப்பேன் என்று கூறியவருக்கு ஆதரவளித்து எம் இனத்தை மீள சிதைக்கவும் மீண்டும் எமது மக்களுக்கு கொலை அச்சுறுத்தல்களையும் வழங்கத் தயாராகி இருக்கிறது.

எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் அடிபணியாது நாம் பயணிப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ)

## முல்லைத்தீவு படைத்தலைமையகத்தின் நத்தார் கரோல் நிகழ்வு இன்று

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகத்தின் நத்தார் கரோல் நிகழ்வு இன்று 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கவுள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்புப் படைத் தலைமையகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட நத்தார் கரோல் நிகழ்வு இன்று மாலை 6 மணியளவில் புதுக்குடியிருப்பு யோசப் தேவாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்பு படைத்தலைமையகத்தின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜயந்த செனவிரத்தின மற்றும் மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ளவுள்ளதாகவும், புதுக்குடியிருப்பு யோசப் தேவாலயம் மற்றும் ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு தேவாலயங்களில் படையினரின் நத்தார் இசைக்குழுக்கள் நடைபெறவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட படைத்தலைமையகம் மேலும் அறிவித்துள்ளது. (ஜ-281)

## வவுனியாவில் இளைஞன் மீது கட்சி ஆதரவாளர்கள் தாக்குதல்

(நெளுக்குளம்)

வவுனியா கனகராயன்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இளைஞன் மீது கட்சியின் ஆதரவாளர்கள் தாக்கியதில் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

வவுனியா பூந்தோட்டம் பெரியார்குளம் பகுதியைச் சேர்ந்த இந்திரலிங்கம் தீபன் 37வயது சீ.சீ.ரி.வி.கமரா பொருத்தும் பணியை மேற்கொள்வதற்காக கனகராயன்குளம் பகுதியில் அமைக்கப்பட்ட புதிய வீடு ஒன்றிற்கு சென்றபோது அத்துமீறி உட்பிரவேசித்த கட்சி ஒன்றின் ஆதரவாளர்கள் என்ற பெயரைப் பயன்படுத்தி தன் மீது தாக்குதல் நடத்தியதாக பொலிஸாரின் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த இளைஞன் தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் ஊடக செயற்பாடுகள் தேர்தல் அறிக்கையில் பிரிவில் பணியாற்றி வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-299)

## பௌத்த மதகுரு மீது தாக்குதல்

### மூவர் கைது

(கொழும்பு)

பௌத்த மதகுரு ஒருவர் மூன்று பேர் கொண்ட குழுவால் தாக்கப்பட்டு வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக சிங்கள இளைஞர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு எல்லையிலுள்ள ஓமாடியாமடு கிராமத்தில் உள்ள சுதுகல ஆரன்ய சேனாச்சனிய விகாரையின் பௌத்த மதகுருவான சுபத்தாலங்காரம கிமி என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

குறித்த மூன்று இளைஞர்களும் நேற்று முன்தினம் இரவு மது அருந்திவிட்டு விகாரைக்குள் பிரவேசித்துள்ளனர். அவர்களை தடுத்து நிறுத்தியமையாலேயே குறித்த மதகுரு மீது பொலால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த மதகுரு நடமாட முடியாத நிலையில், பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், மதகுருவை மீட்டு, வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஜ)

## இளைஞன் மீது போத்தல் குத்து; பிரதான சந்தேக நபர் கைது

(கரணவாய்)

போத்தலால் குத்தி இளைஞன் ஒருவரைப் படுகாயங்களுக்குட்படுத்திய பிரதான சந்தேக நபரைக் கைது செய்ததாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் அச்சுவேலி, ஆவரங்கால் பகுதியில் இளைஞன் ஒருவர் மீது போத்தல் குத்துத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதில் படுகாயமடைந்த குறித்த இளைஞர் அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வந்த அச்சுவேலி பொலிஸார் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரைக் கைது செய்தனர். (இ-60)

## கண்ணிவெடி வெடித்ததில் சிறுவன் படுகாயம்

(கொடிகாமம்)

கிளாலியில் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கண்ணிவெடி வெடித்ததில் சிறுவன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் மிருசுவில் வடக்கைச் சேர்ந்த விஜயகுமார் நிருசன் (வயது 17) என்பவரே வலது காலில் படுகாயமடைந்தவராவார்

கிளாலி காட்டுப் பகுதியில் ஆள் நடமாட்டமற்ற பகுதிக்குள் மேய்ச்சலுக்கு கொண்டு சென்ற வேளையில் கண்ணிவெடி வெடித்துச் சிதறியதில் பீஸ்பட்டு வலதுகாலில் படுகாயமடைந்ததாக தெரிய வருகிறது.

சிறுவனை மிருசுவில் பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பினர்.

சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக குறித்த சிறுவன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (இ-114)

தீமை நமக்குத் தீங்கிழைப்பது.நன்மை அநேகமாய்ப் பிறருக்குத் தீங்கிழைப்பது.

– பால் ரிச்சர்டு

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பௌத்த அடையாளங்களை நிர்மாணித்து சுமுகமான நிலைமையைக் குழப்பாதீர்கள்

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாக பௌத்த அடையாளங்களை நிர்மாணிக்க முற்பட்ட செயலானது திட்டமிட்ட பௌத்த ஆக்கிரமிப்பின் ஒரு கட்டமா என்று எண்ணத் தோன்றுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் வித்தியாசமானதாக – தமிழ் மக்களின் மனங்களை வெல்லுகின்ற செயற்பாடுகளை உடையதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

அதாவது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்ற கையோடு வரி விதிப்புக்களை குறைப்புச் செய்தமை, ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் ஆகியோரின் புகைப்படங்களை அலுவலகங்களில் காட்சிப்படுத்தத் தேவையில்லை என்று உத்தரவிட்டமை, இராஜாங்க அமைச்சர்களுக்கு அதிகாரத்தை வழங்குங்கள் எனக் கேட்டுக் கொண்டமை, கடோபகரமான நிகழ்வுகளைத் தவிருங்கள் எனக் கூறியமை போன்ற நடவடிக்கைகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக்காலம் வித்தியாசமானதாக இருக்குமென நம்புகின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது.

எனினும் இந்த நம்பிக்கை நீடிக்காத வகையில் 13ஆவது திருத்தச்சட்டமூலத்தை அப்படியே அமுல்படுத்த முடியாது என்ற கருத்தும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையம் விதித்த நிபந்தனைகளை நிறைவேற்ற மாட்டோம் என்ற அதிரடிப் பாய்ச்சலும் அமைந்துள்ளது.

சரி, தமிழ் மக்கள் தனக்கு வாக்களிக்காத நிலையில் ஆத்திரமேலீட்டினால் இவ்வாறான கருத்துக்களை ஜனாதிபதி முன்வைப்பதாகவும் இவை சுயஆற்றுப்படுத்தலின் வெளிப்பாடேயன்றி வேறில்லை என்றும் நம்பப்பட்டது.

ஆனால் யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்கு முன்பாக பௌத்த அடையாளச் சின்னங்களை நிர்மாணிக்க முற்பட்ட சம்பவமானது தமிழ் மக்களிடையே குழப்பங்களை ஏற்படுத்தி அதனூடாக அவர்களைப் பழிதீர்க்கின்ற செயற்பாடாக உள்ளதோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இதற்கு மேலாக ஜனாதிபதியின் அனுமதியுடன் பௌத்த அடையாளங்களை நிர்மாணிக்கின்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா? அல்லது சிறைச்சாலை அதிகாரிகள் தாமாகவே பௌத்த அடையாளங்களை அமைக்க முற்பட்டனரா? என்பதுதான் இங்கு கணிப்பில் எடுக்கப்பட வேண்டிய விடயம்.

யாழ்.சிறைச்சாலைக்கு முன்பாக பௌத்த அடையாளங்களை நிர்மாணிக்கின்ற நடவடிக்கைகளை சிறைச்சாலை அதிகாரிகள் முன்னெடுத்தனர் என்பதாக இருந்தால்,

அங்கு ஒரு தவறான கருத்தியல் உருவாக்கப்பட்டுள்ளது என்றே பொருள் கொள்ள வேண்டும்.

அதாவது பௌத்த மதத்துக்கென தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஜனாதிபதி கோட்டாபய ஏற்றுக் கொள்வார் என்றும் எனவே பௌத்தத்தின் பேரால், தாம் எதுவும் செய்ய முடியும் என்பதுமான கருத்தியல் சிங்கள அதிகார வர்க்கத்திடம் ஏற்பட்டு விட்டது என்ற முடிவுக்கு நாம் வருவதில் தவறில்லை.

ஆக, இத்தகைய நிலைமைகள் ஆர்ப்பாட்டம், பேரணி என்ற போராட்டங்களை ஏற்படுத்த அதுவே ஒரு பிரளயமாக ஆக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

எனவே பௌத்த அடையாளங்களை காட்சிப்படுத்துகின்ற நடவடிக்கைகளை சட்டரீதியான அனுமதியின்றி மேற்கொள்ளக்கூடாது என்ற இறுக்கமான உத்தரவை ஜனாதிபதி கோட்டாபய பிறப்பிக்க வேண்டும்.

இல்லையேல் தமிழர் பகுதிகளில் வாரத்துக்கொரு பௌத்த சிலையை நிர்மாணிக்கின்ற செயற்பாடுகள் இடம்பெற; மீண்டும் அச்சமான சூழ்நிலை தோற்றம் பெறும்.

இது இலங்கை நாட்டின் எதிர்கால இன ஒற்றுமைக்கு பங்கமாக அமையும் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

# யாழ்.சிறைச்சாலை பௌத்த சின்னம் தொடர்பில் வடக்கு ஆளுநருடன் பேசவுள்ளோம் –மாவை எம்.பி

யாழ் சிறைச்சாலையில் பௌத்த சின்னங்கள் நிறுவ மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பில் வடக்கு ஆளுநர், சிறைச்சாலை ஆணையாளர், நீதியமைச்சருடன் பேச்சு நடத்தவுள்ளதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பௌத்த சின்னங்கள் சிறைச்சாலைக்குள் வைக்க வேண்டிய தேவையில்லை. யாருக்கும் தெரியாமல் சிறைச்சாலை நிர்வாகம் அதை செய்திருந்தால் அது பிழையானது.எதிர்க்கப்பட வேண்டியது.தடுக்கப்பட வேண்டியது.

அந்தந்த பிரதேசத்தில் இருந்தவர்களும், பத்திரிகையாளர்களும் அதை பகிரங்கப்படுத்தியுள்ளனர். எங்களின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளனர். அதற்கு நன்றி.

சிறைச்சாலைக்குள் மட்டுமல்ல, இராணுவ முகாம் இருந்த, இருக்கின்ற இடங்களில் 30 ஆண்டுகளில் நடந்து வந்திருக்கிறது. இந்த ஆட்சி மாற்றத்தின் பின்னரும், யாழ் சிறைச்சாலையில் பௌத்த சின்னம், குவேனி தொடர்பான நினைவுச்சின்னம் அந்த சிறைச்சாலைக்குள் வைக்க முயன்றதாக தகவல் கிடைத்துள்ளது. பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்படவிருந்ததாகவும், அப்படியில்லையென்றும் இன்னொரு தகவல் எங்களிற்கு கிடைத்துள்ளது.

இது தொடர்பாக சிறைச்சாலை ஆணையாளருடனும், சிறைச்சாலைக்கு பொறுப்பான அமைச்சர், வடக்கு ஆளுநருடன் திங்கட்கிழமை பேசவுள்ளோம். சிறைச்சாலை ஆணையாளருடனும் பேச முயற்சிக்கிறேன் என்றார். (ம-3)

# யாழ்.சிறைச்சாலையில் சிறைக்கைதிகளை பயன்படுத்தி சட்டவிரோத செயற்பாடுகள்

## மாநகரசபை உறுப்பினர் பார்த்தீபன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளைப் பயன்படுத்தி பௌத்த மத செயற்பாடுகளை மேற்கொள்வது சட்ட விரோதமான செயல் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாநகர உறுப்பினர் வ.பார்த்தீபன் குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ் சிறைச்சாலை வளாகத்துக்கு முன்னால் உரிய தரப்பினர்களின் அனுமதி ஏதும் பெறப்படாமல் பௌத்த மதம் சார்ந்த செயற்பாடுகளை விரிவுபடுத்துவது ஏனைய இனத்தவர்களின் மனங்களைப் புண்படுத்துவதாக அமைகிறது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூன்று தடவைகள் தமது எல்லைப் பகுதியில் சிறைச்சாலையின் கட்டுமாணங்கள் இடம்பெறுவதாக தெரியப்படுத்தியும் சிறைச்சாலை நிர்வாகம் தமது செயற்பாடுகளை நிறுத்தாமல் மேற்கொண்டது.

இந் நிலையில் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை மீள சமூகத்துடன் இணைக்கும் விதமாக சிறைக்காலம் வழங்கப்படுகின்ற நிலையில் சிறைச்சாலையினால் மேற்கொள்ளப்படும் சட்ட முரணான செயற்பாடுகளுக்கு சிறைக் கைதிகள் பயன்படுத்தப்படுவது விசித்திரமாக உள்ளது.

ஒரு இனத்தின் வரலாற்றை கீறுவதோ அல்லது உருவச் சிலைகளால் வடிவமைப்பது அவர்களின் அடுத்த சந்ததியினருக்குச் செய்தியைக் கொண்டு செல்லும் ஓர் செயற்பாடாகும்.

அவ்வாறான நிலையில் முற்று முழுதாக தமிழ் பூர்வீகத் தாயகமான யாழ்ப்பாணத்தில் பௌத்த மத அடையாளங்களைத் திணிக்க முயல்வது தமிழர்களின் தனித்துவத்தை இழக்க செய்வதற்காகவே எனக் கருதுகிறோம்.

காங்கேசன்துறையில் குவேனி வந்தார் எனக் காட்டியவர்கள் நாளை விஜயன் யாழ்ப்பாணத்துக் கடலினால் வெளியேறினார் எனக் காட்ட முயற்சிப்பார்கள்.

ஆகவே சிங்கள வரலாற்றுக்களை கூறுவதை நாம் எதிர்க்கவில்லை அதே நேரம் வீரம் செறிந்த யாழ்ப்பாணத்தின் வரலாறுகளை எதிர்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்லும் விதமாக யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் இடம் ஒதுக்கித் தரவேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-3,10)

# இலவச கண் பரிசோதனையும் மூக்குக் கண்ணாடி வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய்ப் பிரதேச தேசோதய சபையால் இன்று ஞாயிற்றுக்கிழமை நீர்வேலி கரந்தன் மேற்கில் இலவச கண் பரிசோதனையும் மூக்குக்கண்ணாடி வழங்கலும் இடம்பெறும்.

கோப்பாய் தேசோதயத் தலைவர் இ.மயில்வாகனம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வின் விருந்தினராக யாழ்.மாவட்ட தேசோதய இணைப்பாளர் எஸ்.யுகேந்திரா கலந்து கொள்வார்.

மூக்குக் கண்ணாடிக்கான அனுசரணையை உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த கனடா வாழ் அன்பர் ஆ. மேகன் வழங்கியுள்ளார். (ம-134,10)

# நாட்டு மக்களுக்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது –மகிந்த

(கொழும்பு)

நாட்டு மக்களுக்காக தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படும் போது எதிர்த் தரப்பினர் அரசாங்கத்தைக் குறைகூறுவதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்க காலத்தில் மக்களுக்கான தேவைகள் நிறைவேற்றப்படவில்லையெனவும், அநீதியும், முறைகேடுகளும் சிம்மாசனம் ஏறியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது முதல் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் போது இல்லாத பொல்லாததைக் கூறி, சதி முயற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் பிரதமர் எதிர்த் தரப்பினரைக் குற்றம் சாட்டியுள்ளார்.

நாட்டு மக்களின் அதிர்ஷ்டத்தின் காரணமாக, எதிர்த் தரப்பினருடைய சதிகள் எல்லாம் செல்லாக் காசாக மாறி வருகின்றன. மட்டுமல்லாது, எதிர்த் தரப்பினர் இன்னும் இன்னும் மக்களை விட்டும் தூர விலகிச் சென்று கொண்டு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கி வந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்.-ஆபிரகாம் லிங்கன்

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



- இளைஞர் சோர்வுற்றுக் களைப்படைவர். வாலிபர் நிலைதடுமாறி வீழ்வர். இறைவன் மீது நம்பிக்கை வைத்திருப்பவர்களோ புதிய ஆற்றல் பெறுவர்.
- உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்து போனால், அவர்களுக்கு உதவி செய். அவர்கள் அந்நியர் போலும் விருந்தினர் போலும் உன்னோடு வாழட்டும்.
- மனவலிமை கொண்டவர்களாகிய நாம் வலுவற்றவர்களின் குறைபாடுகளைத் தாங்கிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறோம்.
- தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். அவர் இறை மக்களுக்கான ஒளிமயமான உரிமைப்பேற்றில் பங்குபெற உங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியுள்ளார்.
- நீ செய்ய நினைக்கும் செயல் எதுவோ அதைச் செய் அதையும் உனக்கு ஆற்றல் இருக்கும் போதே செய்துவிடு.
- கடவுளுக்காக நீங்கள் உழைப்பது வீண் போகாது என்பதை அறிந்து, ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்.
- பிறப்பிலிருந்து நான் உம்மைச் சார்ந்துள்ளேன். தாய் வயிற்றிலிருந்து நீர் என்னைப் பிரித்தெடுத்தீர்.உம்மையே நான் எப்பொழுதும் புகழ்ந்து போற்றுவேன் .

தர்மத்தின் குரலாய் ஒலிக்கும்
# வலம்புரி 20 ஆவது ஆண்டு நிறைவு மலர்

## வலம்புரியே வாழ்க!

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளில் இன்று வலம்புரி முதன்மையான இடத்தைப் பிடித்துள்ளது. இருபது வருடங்கள் பூர்த்தியானது யாவர்க்கும் மட்டற்ற மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. ஆன்மீகம், இந்து சமய தத்துவங்கள், மகான்களின் அறிவுரைகள், அனைத்து மதகுருமார்களின் ஆசிகள், விளையாட்டுச் செய்திகள், உள்நாட்டு, வெளிநாட்டுப் புதினங்கள், அதைவிட சுவாரசியமான உண்மையோடு கூடிய ஆலடி மாநாடு, நீத்தார் மாண்பு, கல்வியை ஊக்குவிக்கும் செய்திகள், இன்னும் எத்தனையோ எத்தனையோ எழுத்தில் வடிக்க முடியாது நாட்டு மக்களுக்கும் சமூகத்திற்கும் நல்ல பணிகளை வலம்புரி ஆற்றுகின்றது. இதை யாரும் மறுக்க முடியாது. மறக்கவும் முடியாது. இப்பத்திரிகை தர்மத்தை பேணிக்காக்கும் வலம்புரியின் சொந்தக்காரர், ஆசிரியகுழாம், ஊடகவியலாளர்கள், ஊழியர்கள் அனைவரும் பல்லாண்டுகாலம் வாழ்ந்து இப்பணியை ஆற்ற வேண்டும் என எல்லாம் வல்ல கலட்டி ஸ்ரீ வீரகத்தி பிள்ளையாரை வேண்டிக் கொண்டு வாழ்த்தி நல் ஆசியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

"வாழ்க வலம்புரி"

**சிவஸ்ரீ.து.விவேகானந்தக் குருக்கள்**
**பிரதம குருவும் ஆதீன கர்த்தாவும்.**

## வாழ்க! "வலம்புரி", வந்து நலம்புரி

மாயவன் கையிற் கொண்டான்
வலம்புரிச் சங்கை, எங்கள்
தாயக மாந்தர் கண்டார்
தரு "வலம்புரியை", நாளும்
நாயகனாக வந்து
நடுவுறும் செய்தி நல்கி
வாய்மையே போற்றும் ஏடு
"வலம்புரி" வளர்ந்தே வாழ்க!

இருபத்து ஆண்டில் இங்கே
இங்கிதப் பருவ மெய்தி
தருவென நின்று எல்லாத்
தகுதியும் தனதாய்க் கொண்டு
அருமருந் தானா யுந்தன்
அளப்பெரு சேவை மேலும்
விருட்சமாய்ச் செழித்து வோங்கி
விரிந்திட வென்றும் வாழ்க!

நக்கீரன், சிவனார் முன்னே
நவின்றிடு வார்த்தை போலும்
தக்கதோர் நிலையில் நின்று
தகுந்ததோர் நெறியைக் கூறும்
மிக்க "ஆ சிரியர்" மேன்மை
மிளிர்ந்திடும் எழுத்தே காட்டும்
பக்கச் சார்பற்ற பண்பும்
பகர் "வலம் புரி"யே வாழ்க!

இலக்கியம் இலங்குஞ் சான்று
இனிதுற உவமை சேர்த்துக்
கலக்கு "மா சிரியர்" ஆற்றும்
கவினுறு தலையங் கங்கள்
நிலைக்குமா றுள்ளந் தன்னில்
நித்திலங் கொழிக்கு மென்றும்
விலையில்லாக் கலைகள் பல்கும்
"வலம்புரியே" வளமாய் வாழ்க!

பற்பல துறைகள் காட்டும்
பயனுறு விடய மெல்லாம்
நற்பயன் நல்கும் வண்ணம்
நம்மவர் நயக்கக் காட்டிக்
கற்றிடும் அறிவை யூட்டிக்
கனத்தினை விதைத்து மேலாம்
விற்பனம் சுரக்கும் ஊற்றே
"வலம்புரியே" வாழ்க! வாழ்க!

**கலாபூஷணம் சந்தக்கவிஞர் நவ.பாலகோபால்**

## வாழ்த்துச் செய்தி

தமிழ் நிலத்தில் தர்மம் நிலைப்பதற்காக வலம்புரி பத்திரிகை அர்த்தமுள்ள ஆக்கங்களை வெளியிட்டு வருகிறது. இப்பத்திரிகை பல்வேறு சவால்களுக்கு மத்தியில் கடந்த இருபது ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

மதச்சார்பின்மை என்ற மகோன்னதமான கோட்பாட்டை எக்காலத் தொனியில் பேசுபவர்கள் ஒரு மதத்தின் சுதந்திரத்தில் தலையிடாதிருக்க தம்மை ஆக்கிக்கொள்வதே இன்றைய அவசிய தேவையாக இருக்கின்றது. இலங்கை திருநாட்டில் இந்து மதம் பௌத்த அடிப்படைவாதிகளுக்கு மட்டுமல்ல கிறிஸ்தவ-முஸ்லிம் அடிப்படை வாதிகளின் மத வெறிச் செயல்களுக்கும் இலக்காக வேண்டியுள்ளது. இவ்விதம் இந்துமதம் எதிர் கொள்கின்ற வேளையில் துணிந்து குரல் கொடுக்கும் பத்திரிகையாக வெளிவருவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

இப்பத்திரிகையின் நிர்வாக இயக்குநர் சிவஞானம் வெற்றி வேலாயுதம் அவர்கள் சிவ பக்தராக திகழ்வது எமக்கு கிடைத்த வரப்பிரசாதம் ஆகும். இப்பத்திரிகையின் ஆசிரியர்கள் நல்லையா விஜயசுந்தரம், கணேசன் திருமாலழகன் ஆகியோர் தமது அறிவாற்றலினால் பொருத்தமான நேரத்தில் அரிய ஆக்கங்களை ஆக்கியும் தொகுத்தும் வெளியிடுவதனால் மக்கள் மத்தியில் பெரும் பாராட்டை பெற்று சிறந்த முன்னுதாரணமான பத்திரிகையாக இப்பத்திரிகையை திகழச் செய்வது பாராட்டுக்குரியதாகும்.

இன்றைய நாளில் வலம்புரி பத்திரிகையின் சேவைகள் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு தொடர எமது வழிபடு தெய்வமாகிய ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத ஸ்ரீ மத் நடராஜப் பெருமானை திரிகரண சித்தியோடு பிரார்த்திக்கின்றோம்.

"நமச்சிவாய வாழ்க"

**ஈசான.சிவசக்திகிரீவன்**
**தலைவர்**
**(இந்துசமயப்பேரவை-யாழ்ப்பாணம்)**

## வாழ்த்துகின்றோம்




தமிழ் நாளேடான வலம்புரி தனது சேவையில் 21 ஆவது ஆண்டில் தடம்பதிப்பதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றோம். பத்திரிகை தர்மத்தை பேணிவரும் நாளேடுகளில் வலம்புரி தனித்துவமும் மேன்மையும் கொண்டு விளங்குவது தமிழ் கூறும் நல்லுலகிற்கு தெரிந்ததோர் விடயமாகும்.

வலம்புரி செய்திகளை உடனுக்குடன் கவர்ச்சிகரமாகவும் தெளிவாகவும் முன்வைத்து விளங்க வைக்கும் ஆற்றல், செய்திகளில் உண்மை, நேர்மை, நடுநிலைமை ஆகியவற்றை பேணுவதிலும் மக்களுக்குச் சேவையை வழங்குவதில் உள்ள தன் ஆர்வம், செய்திகளிலும் கட்டுரைகளிலும் அரசியல், பொருளாதாரம், சமயம், சமூகம், சர்வதேச சிந்தனை ஆகிய அனைத்துக்கும் சமமாக பங்கு கொடுக்கும் தனிச்சிறப்பு என்பவை கடந்த இரு தசாப்தங்களில் தமிழ் மக்களின் உள்ளங்களை கொள்ளை கொள்பவையாக அமைந்திருந்தன.

இத்தகைய சிறப்பும் செம்மையும் கொண்ட வலம்புரி 21 ஆம் ஆண்டில் கால் பதிக்கும் வேளை அவற்றின் அனைத்துச்செயற்பாடுகளும் திறம்பட அமைய திருவருளையும் குருவருளையும் வேண்டி வாழ்த்துகின்றோம்.

**அறங்காவலர், நிர்வாக சபை,**
**உறுப்பினர்கள், மகாதேவ ஆச்சிரமம்,**
**கிளிநொச்சி.**

## நிலத்தை தமிழை நீதியை கலையை நீ காக்க எழுக வலம்புரியே




நாளை நமதே! என்ற தனித்
துவ குரலாக
நடுவுநிலைதவறாநன்னெறி
காக்கும் நாளேடாக
வாழும் உரிமையை தமிழ
ருக்கு சொல்லும் வரலாறாக...
வடக்கில் வாஞ்சையோடு
நாம் வணங்கும் நீதித்தமிழ்
உளம் மகிழ்ந்தே உனை போற்ற மறவாத தமிழர்
நெஞ்சம்
உரிமையோடு இருபது ஆண்டுகள்
உழைத்து நிறைந்த சங்குநாதம்
நிலத்தை தமிழை நீதியை கலையை நீ காக்க வேண்டும்
நிஜத்தை எழுது ஈழத்தமிழர் உரிமை பெற்று வாழ

ஆளும் உரிமையை தமிழருக்கு சொல்ல
எழுந்த தமிழிதழ்
ஆதிக்க வெறித்தனத்தை அகற்ற அவனிக்கு
வந்த நாளேடு
மாளும் தமிழர் கலாசாரத்தை மண்ணில்
நிமிர்த்த எழுந்த வலம்புரி
மறத்தமிழர் மாண்புகளை தேசத்தில்
அறிவிக்கும் ஆதவன்
நீள நினைத்து நெஞ்சில் கொலுவிருத்தி
வணங்கும் வடக்கின் குரல்
நிரந்தர உரிமைக்காக தமிழர் வாழ்வில் நீதி சொல்ல
எழுந்த நாளிதழ்
காலத்தால் அழியாத வரலாறாக காவல் செய்ய
எழுந்த வலம்புரியே
கால்நூற்றாண்டை அண்மிக்கும் காவலனே வாழி வாழி!

**வர்ணனைக் கலாநிதி செந்நாப்புலவர்**
**மதுரகவி. காரை எம்.பி.அருளானந்தன்**
**M.A.,J.P, ஆசிரியர், பணிப்பாளர்,**
**சைவத்தமிழ் பண்பாட்டு பேரவை,**
**(DAN T.V, ஓம் T.V பிரதம நேர்முக**
**வர்ணனையாளர்)**

## "வலம்புரி" நாளிதழே வளமுடன் வாழியவே!



யாழ்நகரிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளில் எங்களது அபிமானம் பெற்ற சிறந்த பத்திரிகையாக விளங்குவது வலம்புரியே! நாட்டில் நடக்கும் அனைத்து நிகழ்வுகளையும் அவ்வப்போது சுவையாகத் தருவதில் வலம்புரிக்கு நிகர் வலம்புரியேதான்.

இன்றைய அவசர யுகத்தில் மக்களின் தேவையை அறிந்து அதற்கேற்றாற் போல விடயங்களை தெளிவான் முறையில் அழகாகத் தருகின்ற வலம்புரிக்கு இன்று இருபத்தோராவது அகவை ஆரம்பமாகின்றது என்பதை எண்ணும்போது மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்.

இருபதாவது ஆண்டு பூர்த்தியாகி இருபத்தோராவது ஆண்டில் காலடி பதிக்கும் வலம்புரி பத்திரிகையானது நல்ல முறையில் அழகாக வெளிவந்து மக்களுக்குச் சேவையாற்ற வேண்டுமென்று உள்ளப் பூரிப்புடன் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துபவர்:**
**லயன்கலாநிதி திரு.கனகசபை சுந்தரலிங்கம்**
**-காரைமணி கண்டன்-**
**சமாதான நீதவான்களுக்கான அமைப்பின்**
**பிரதேச சபை அமைப்பாளர், காரைநகர்.**

## மணல் கொள்ளை..

திரமான முறையில் சூறையாடப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மண் வளத்தை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் இந்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டங்கள் மாவட்டத்தின் அனைத்து இடங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

இன்று காலை 9 மணியளவில் வடமராட்சி கிழக்கில் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பமாகி பின்பு தென்மராட்சி, தீவகம் - மண்கும்பான்பகுதிகளிலும்இடம்பெறும்என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-3.60)

## கஞ்சா கடத்திய...

தெரிவித்தனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

யாழிலிருந்து வவுனியா நோக்கி சென்ற பேருந்தில் பயணித்த நபரொருவர் வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் இறங்கிச் சென்றுள்ளார்,

குறித்த நபர் மீது சந்தேகம் கொண்ட வவுனியா பொலிஸ் நிலைய போதை தடுப்பு பிரிவினர் அவர் மீது சோதனைகளை மேற்கொண்டபோது அவரது உடைமையில் கேரள கஞ்சா இருப்பதனை அவதானித்தனர்.

அவரை கைது செய்த பொலிஸார் அவரிடமிருந்து 2 கிலோகிராம் நிறையுடைய கஞ்சாவினை மீட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் அநுராதபுரம் பகுதியை சேர்ந்தவர் என்றும் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-3,299)

## தமிழ் மொழி...

இருப்பது கவலையான விடயம் என அவர் இதன்போது கூறினார்.

இந்நிகழ்வில் தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

சுதந்திரத்திற்குப் பின்னர் 72 ஆண்டுகள் அரசியல் வரலாற்றைக் கொண்டிருக்கும் நாங்கள் இன்னமும் ஒருவருக்கொருவர் சகஜமாக பேசமுடியாமல் இருப்பது வெட்கப்பட வேண்டியிருக்கிறது.

மொழிப்பயன்பாட்டின் போது வேறு மொழி பேசுபவர் வருத்தம் கொள்ளும் அளவிற்கு நாட்டில் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. சினிமா, கலாசாரம், இலக்கியம் போன்று அனைத்திலும் இதேபோன்றதொரு நிலைமை இருக்கிறது. இது மாற வேண்டுமாயின் பாடத்திட்டங்களில் மாற்றம் செய்யப்பட வேண்டும்.

சிறுபான்மையினர், வேறு மதத்தவர்கள் என்னும் சொற்பிரயோகங்களை அனுமதிக்க முடியாது. 45 இலட்சத்திற்கும் அதிகளவான சிறுவர்கள் நாட்டில் இருக்கிறார்கள். வயது முதிர்ந்தவர்களின் மனநிலையில் மாற்றங்களைக் கொண்டுவர முடியாது.

ஆனால் அடுத்த தலைமுறையினரிடையே மாற்றத்தைக் கொண்டுவர முடியும். அதற்காக இரு மொழிக் கொள்கையில் நாம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.

இலங்கையில் 21 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்டிருக்கிறோம். இரு மொழிகளைக் பேசுகிறோம். ஆனால் தமிழ் பேசுபவருக்கு சிங்களம் தெரியாது, சிங்களம் பேசுபவருக்கு தமிழ் தெரியாது. இது வெட்கப்பட வேண்டிய விடயமாக இருக்கிறது. இதில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

உலகில் மற்றைய நாடுகள் வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வதற்கான ரகசியம் என்னவெனில், அவர்கள் ஒரு தேசம் என்னும் கொள்கையில் பயணிக்கிறார்கள். அதேபோன்றதொரு நிலை ஏற்படுமாயின் எங்கள் தேசமும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கும் என்றார். (ம-3)

## மணல் கடத்தல்...

றுள்ளது.

வடமராட்சி கிழக்கு, குடத்தனை வடக்கில் சட்டத்துக்கு புறம்பாக அதிகளவு டிப்பர்களில் மணல் கடத்தல்கள் கடந்த ஒரு வாரமாக இடம்பெற்று வந்தது.

பொலிஸாருக்கு அறிவித்து நடவடிக்கை எடுக்கப்படாத நில்லயில் குடத்தனை மக்கள் நேற்று அங்கு திரண்டனர்.

மணல் அகழ்வில் ஈடுபட்டு டிப்பர் வாகனங்களில் கடத்த முற்பட்டவர்களை மக்கள் விரட்டியடித்தனர். (ம-3)

## குடும்பப் பெண்...

தைச் சேர்ந்த இராசதுரை மல்லிகாதேவி (வயது-60) என்ற குடும்பப் பெண்ணே மரணமடைந்தவராவார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## விடுதலைப் புலி...

வகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்ட பின்னர் உரையாற்றியபோது அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

'உலகின் மிக இரக்கமற்ற பயங்கரவாதக் குழுவை இலங்கை இராணுவத்தால் தோற்கடிக்க முடிந்தது.

உலகில் உள்ள படைகளுக்கு இலங்கை இராணுவத்தின் மீது மிகுந்த மரியாதை உள்ளது.

எனினும், இலங்கை போரை முடிவுக்குக் கொண்டு வந்ததையிட்டு சில நாடுகள் மகிழ்ச்சியடையவில்லை.

ஆனால், அரசியல்வாதிகள் என்ன சொன்னாலும் அந்த நாடுகளில் உள்ள இராணுவம் இலங்கை இராணுவத்தைக் குறித்து சாதகமான கருத்தைக் கொண்டுள்ளது." என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## மன்னாரில்...

கொண்ட ரோந்து நடவடிக்கைகளின்போதே மேற்படி நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு குறித்த சந்தேகநபர்களிடமிருந்து 3 மீன்பிடி படகு மற்றும் 984 கடலட்டைகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட ஏழு சந்தேகநபர்களையும் மன்னார் மாவட்ட மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைத் தமிழ..

தானில் இருந்த வந்து குடியேறிய மக்களுக்கு குடியுரிமை வழங்க அனுமதி அளிக்கப்படும் நிலையில், இலங்கையில் இருந்து வந்து இந்தியாவில் குடியேறிய தமிழர்களுக்கு குடியுரிமை மறுக்கப்படுவது ஏன்? என்று அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும், நாட்டில் தற்போது நிலவும் மிக முக்கிய பிரச்சினைகளில் இருந்து மக்களை திசை திருப்பவே குடியுரிமைத் திருத்தச் சட்டம் மற்றும் என்.ஆர்.சி போன்ற விடயங்களை மத்திய அரசு நடைமுறைப்படுத்துவதாகவும் சரத் பவார் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்திய மத்திய அரசு கொண்டு வந்துள்ள குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக இந்தியா முழுவதும் போராட்டங்கள் தீவிரமடைந்துள்ள நிலையில், தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான சரத் பவார் இந்தக் கேள்வியை எழுப்பியுள்ளார். (ம-3)

## கோட்டா, மகிந்த...

பெற்ற அதேவேளை, பிரதமருடனான சந்திப்பு அலரிமாளிகையில் நடைபெற்றது.

சந்திப்பில் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் பொதுவான சின்னத்தில் போட்டியிடுவது பற்றி ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அதுதொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை இன்னும் சில தினங்களுக்குப் பின்னர் மீண்டும் அவர்கள் மூவரும் சந்தித்துப் பேச்சு நடத்த இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன. (ம-3)

## யாழ்.சிறைச்...

சின்னங்கள் அமைக்கப்படுவதற்கு எதிராக யாழ் மாநகர பிரதி முதல்வரினால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பண்ணை சிறைச்சாலைக்கு முன்பாக, பௌத்த இதிகாச ஓவியங்களும், சின்னங்களும் வரையப்பட்டுள்ளன. விஜயனின் இலங்கை வருகை பற்றிய சின்ன்ங்களும் அமைக்க முயற்சிக்கப்பட்டது. எனி னும், நேற்று கடும் எதிர்ப்பு வெளியிட்டதையடுத்து அந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்நிலையில், பிரதி முதல்வர் து.ஈசன், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டு இருக்கும் படங்களை அகற்றக்கோரி முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (ம-3)

## இலங்கைத் தமிழ..

இதனைத் தெரிவித்ததாக 'த ஹிந்து' செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு நடந்த இந்த சந்திப்பின்போது அமித் ஷா இது குறித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழ் ஏதிலிகளுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது குறித்து கடந்த மூன்று வருடங்களாக அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் வலியுறுத்தி வந்ததாக எடப்பாடி பழனிசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

இரட்டை குடியுரிமை வழங்கப்பட்டால், எந்தவிதமான பிரச்சினைகளும் இன்றி அவர்களினால் நிரந்தரமாக இந்தியாவில் பணியாற்றுவதற்கோ அல்லது வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ முடியுமெனவும் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி இந்த சந்திப்பின்போது வலியுறுத்தியுள்ளார் என 'த ஹிந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (ம-3)

## இது சிங்கள...

மற்றும் கலாசார அறிவும் அவருக்கு இல்லை. இன்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முன்பே இலங்கையில் சிங்களம் பேசும் மக்கள் வாழ்ந்து வந்தார்கள். உலகத்தில் ஏனைய இனத்தவர் ஆடை அணிவதற்கு முன்னரே இலங்கை சிங்களவர்கள் ஆடையை அணிந்தனர்.

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்கள் தான் எமது பழைய உறவினர்கள். தமிழர்கள் இலங்கையை ஆக்கிரமித்தவர்கள். ஆக்கிரமித்து, கொன்று குவித்தவர்கள். விரட்டியடித்தார்கள் அதேபோல் நமது நாட்டின் மன்னர்கள் முன் மண்டியிட்டவர்களை இங்கு வைத்துக் கொண்டார்கள்.

சிலர் இந்தியாவிலிருந்து அடிமைகளாக தொழில் செய்ய வந்தவர்கள், நான் கூறுவது மலையகத்தில் தேயிலை பறிக்கும் சகோதரர்களை அல்ல. அவர்கள் எமது நாட் டின் அபிவிருத்திக்கு முதுகெலும்பாக இருந்து பாடுபடுபவர்கள். அவர்களை நான் எனது தலைக்கு மேல் கைகூப்பி வணங்குகிறேன். அவ்வளவு புனிதமானவர்கள் அந்த மக்கள்.

எனவே விக்னேஸ்வரன் கூறுவது போல இலங்கையை பூர்விகமாக கொண்ட தமிழர்கள் யாரும் இல்லை. அனைவரும் வழியில் இருந்து வந்தார்கள். முஸ்லிம் களும் இருக்கவில்லை. சிங்கள பௌத்தர்கள் மட்டுமே இங்கு வாழ்ந்தார்கள்.

இருந்தாலும் நாம் பௌத்த தர்மத்தின் அடிப்படையில் இந்த நாட்டில் இருக்கும் எல்லா இனத்தவரையும் காப்பாற்ற நடவடிக்கை எடுப்போம். நான் எந்த இனத்தையும் மதத்தையும் எதிர்க்கவில்லை. அவர்களுக்கு எதிராக நாம் எந்தவிதமான இன்னல்களையும் கொடுக்கவில்லை.

ஆனால் இவர்கள் எமக்கு பிரச்சினையை ஏற்படுத்தி இன்னல்களை கொடுப்பார்களாக இருந்தால், நான் இந்நாட்டிலுள்ள அனைத்து சிங்கள பௌத்த மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன், அன்று துட்டகைமுனு மன்னன் கைகளில் எடுத்த வாளை நீங்களும் கைகளில் எடுத்து துரத்தியடிக்க தயங்காதீர்கள். நாம் அப்படியும் தயார். அப்படி செய்யாமல் இருக்க முடியாது என்றார். (ம-3)


செவண
திகதி 2019/12/21
சீட்டிழுப்பு இலக்கம் 246
U 14 31 48 54

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2019/12/21
சீட்டிழுப்பு இலக்கம் 1488
05 18 31 45 55 25 57

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 21-12-2019
சீட்டிழுப்பு இலக்கம் 2337
H 11 46 56 66

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21.12.2019
சீட்டிழுப்பு இலக்கம் 1002
G 5 6 8 7 0 6

ராசி அதிர்ஷ்டம்
திகதி 21/12/2019 வெற்றி வாரம் 2714 வர்ணம் இளம் நீலம்
வெற்றி இலக்கங்கள் கும்பம் 10 35 37 46
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3,322,184
2019/12/22 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1095
சீட்டிழுப்பு திகதி 21.12.2019 சனிக்கிழமை
C 13 20 41 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,293,160

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 828
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.12.21
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 75,971,080/-
வெற்றி இலக்கங்கள் 11 18 67 68 V

சனிக்கிழமை அதிர்ஷ்டம் சனிதா வசனா
சீட்டிழுப்பு இல.: 3277 திகதி: 2019.12.21
பச்சை சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 05 25 46 47 C
9180
33,427,270/-

JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

# யாழ்ப்பாணக்கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி அமைச்சின் துறை திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படும் பயிற்சிநெறிகள்

## எமது நிறுவனத்தில் தை 2020 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

- இயந்திரவியல் (Machinist) - NVQ Level 3
- அலுமினியம் பொருத்துதல், இணைத்தலும் (Aluminum Fabricator) - NVQ Level 3

- இப்பயிற்சி நெறிக்கான கட்டணம் இலவசம்.
- ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்
- சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட (NVQ) பாடத்திட்டம் பின்பற்றப்படும்.
- பயிற்சி நிறைவில் மாணவர்களுக்கு தொழில் வாய்ப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்கட்கு :- இயக்குனர், தொழில்நுட்ப நிறுவனம், வட்டுக்கோட்டை.
Tel. Phone : 021 321 3139 / 021 225 0975
Email : ejcit@sltnet.lk

(C-8561)

# Techno World

(பெருமாள் கோவில் வீதி, யாழ்ப்பாணம்)

A/L - 2022 தொழில்நுட்பபிரிவு புதிய பிரிவு ஆரம்பம்

23.12.2019 காலை 9.15 am

- பொறியியல் தொழில்நுட்பவியல்
- உயிர் முறைமைகள் தொழில்நுட்பவியல்
- தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம், விவசாய விஞ்ஞானம், புவியியல், சித்திரம்.

நவீன ஆய்வுகூட வசதிகளுடன்

தொடர்புகளுக்கு : 077 017 5346, 077 170 3549

(C-8610)

## விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு

UK - 550 /=Kg
கனடா - 950 /=Kg
ஜேர்மனி - 650 /=Kg
நெதர்லாந்து- 700 /=Kg
இத்தாலி- 700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

0768226240

V2 TRAVELS

யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • கொடிகாமம் • வல்வெட்டித்துறை • பருத்தித்துறை • மானிப்பாய் • திருகோணமலை • சாவகச்சேரி • சுன்னாகம் • மருதங்கேணி

(C-8115)

## வெளிநாடு-உள்நாடுகளுக்கான விரைவுப் பொதிகள் சேவை

WESTERN UNION 070 330 5500 WESTERN UNION

அண்ணா பொதிகள் சேவை

976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி

021 221 5656 யாழ்ப்பாணம் 077 888 9388

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிடவும் எம்மை நாடுங்கள்.

3 - 6 நாட்களுக்குள் உங்கள் கைகளில்

வேலணை – அரியாலை – சங்கானை – சுன்னாகம்
கரணவாய் –மீசாலை–கிளிநொச்சி–கனகராயன்குளம்
முல்லைத்தீவு–மன்னார்–வவுனியா–திருகோணமலை

(C-8559)

## நெல்லியடியில்...

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

லண்டன் - 540/=
ஜேர்மனி - 640/=
இத்தாலி - 690/=
கனடா - 950/=
நெதர்லாந்து - 690/=

சலுகை அட்டை (Discount Card) பெற வேண்டும் எனும் நிபந்தனை இல்லை.

076 443 1576

அருள்

பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.

(C-8397)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

# KINGS ELECTRONICS (PVT) LTD

CHRISTMAS & NEW YEAR SPECIAL OFFERS

LIMITED SPECIAL OFFER

ELECTRONICS / FURNITURES / BABAY CARE / TOYS / LIGHTS

## மாபெரும் மலிவு விற்பனை JANUARY 10 வரை

மின் உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் குழந்தைகளுக்கான பொருட்கள்

10% - 40% OFF

SOFA 1+1+3 FULL SET RS.32,900



5 YEAR WARRANTY

LED TELEVISIONS



3 YEAR WARRANTY

MEGA SEASON SALE LIMITED TIME OFFER

LHD-677 LG RS.33,900

LG Washing Machine RS.58,900

MX-L90 PARTY SPEAKER RS.23,400

LG-LHD457 RS.26,900

| | |
|---|---|
| Samsung 32" | -28900/= |
| Hisense 32" | -20900/= |
| Sony 32" | -29900/= |
| Video con 32" | -19900/= |
| Panasonic 32" | -22900/= |
| Maxmo 32" | -17990/= |
| Innovex 32" | -19250/= |
| Innovex 40" | -39900/= |
| Maxmo 40" | -39500/= |
| Hisense 50" | -91900/= |

SINGER SWM-SAR6 RS.23,500

Hisense 55 4K SMART RS.129,900 ONLY

HITACHI 43" FULL HD RS.49,500 ONLY

SAMSUNG 43" 4K SMART RS.95,000 ONLY

SAMSUNG RT28K REFRIGERATOR RS.73,900 INVERTER

INVERTER LG REFRIGERATOR RS.69,900

REFRIGERATOR RS.40,900 SAMSUNG R19

ஞாயிற்றுக்கிழமையிலும் திறந்திருக்கும்

(C-8584)

076-3594665 KINGS JAFFNA 12,Point Petro Road,Jaffna


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விலை : 30.00

Registered as a Newspaper in Srilanka

வாரமலர்

# வலம்புரி

சங்குநாதம்

நாதம் 247

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2050 22.12.2019 தொலைபேசி : 021 222 3378




உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு



## நகரை அழகுபடுத்தும் இளைஞர்களைப் பாராட்டுவோம்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

யாழ்ப்பாண நகரத்தை அழகுபடுத்துகிற பணியில எங்கட இளைஞர்கள் ஈடுபட்டிருக்கினம். யாழ். நகரில உள்ள கட்டடங்களில சுவரோவியங்களை வரைந்து அழகுபடுத்துவது உண்மையிலேயே பாராட்டப்படவேண்டிய விடயம். இவ்வாறு பண்டிதர் பரமலிங்கம் கூற, ஆலடி மாநாட்டில அந்த இளைஞர்களுக்குப் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**கங்காணி:** உண்மையிலே இளைஞர்களின் முயற்சி சமூக அக்கறை கொண்டது. இதுபோல ஒவ்வொரு ஊரிலும் இருக்கிற இளைஞர்களும் பொது அமைப்புக்களும் ஒன்றுபட்டுச் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்தால் எங்கட ஊர்கள் தூய்மையானதாக மாறிவிடும்.

**மூப்பர்:** என்ன கங்காணியார் சொல்லுறியள்.

**கங்காணி:** எங்கட இடங்களில இப்ப இருக்கிற பெரிய பிரச்சினை கழிவகற்றல் தான். பொலித்தீன் புறம்பு, உக்கும் குப்பைகள் புறம்பு, இல்லையெண்டால் கழிவகற்ற மாட்டம் என்ற நிபந்தனை வந்த பிறகு சனங்கள் பொலித்தீன் குப்பைகளை மூட்டைகட்டி வீதி ஓரத்தில போட்டிட்டுப் போகினம். இதுகளைத் தடுக்கிறதுக்கு எங்கட இளைஞர்கள் முயற்சி எடுத்தால் உண்மையாய்ச் சொல்லுறன் எங்கட ஒவ்வொரு ஊரும் மிகத் தூய்மையாகிவிடும்.

**விதானையார்:** கங்காணியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. பம்பஸ் உட்பட கழிவுப் பொருட்களை மூட்டைகட்டி வீதியில போட்டுவிட தெரு நாய்கள் கடித்துக்குதறி அந்த வீதி முழுக்க கழிவாக்கி விடுகுதுகள். இதை எல்லாம் தடுக்க வேணும். கங்காணியார் சொல்லுறது போல எங்கட இளைஞர்கள் இது விடயத்தில் ஒற்றுமைப்பட்டுக் கண்காணிப்புச் செய்தால் எல்லாம் ஒழுங்காக வரும்.

**சாத்திரியார்:** விதானையார் சொல்லத்தான் எனக்கும் ஞாபகம் வருகுது. முன்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வீதிப் போக்குவரத்துப் பணியில தொண்டர்களை நியமித்து வீதி விபத்துக்கள் ஏற்படாமல் வாகனங்களை ஒழுங்குபடுத்துகிற ஒரு வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். அந்த வேலைத் திட்டம் சிலபல காரணங்களால் நிண்டு போயிற்று.

என்னைப் பொறுத்தவரை வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பில திரும்பவும் தொண்டர் சேவையை அமுல்படுத்தினால், எங்கட இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். விபத்தில தினசரி ஏற்படுகிற உயிரிழப்புக்களையும் தடுக்க முடியும்.

**சிறாப்பர்:** இது நல்ல யோசனைதான். வடக்கு மாகாணம் முழுவதிலும் வீதிப் போக்குவரத்துக் கண்காணிப்பில தொண்டர் படையை ஈடுபடுத்தினால் கணிசமான விபத்துக்களும் உயிரிழப்புக்களும் தடுக்கப்படும் என்பதால அந்தத் திட்டத்தை அமுலாக்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முயற்சி செய்ய வேணும் என்றொரு தீர்மானத்தை ஆலடியில நிறைவேற்றுவம். இவ்வாறு சிறாப்பர் கூற, ஆலடி மாநாடு இந்தத் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

தீர்மானம் நிறைவேற்றிய கையோடு ஆலடி மாநாட்டில் சிறிதுநேரம் அமைதி நிலவ, அந்த அமைதியைக் குலைப்பதாக விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** டெங்குத் தாக்கத்தால பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சுரக்ஷ காப்புறுதிக் கொடுப்பனவு கிடைக்கும் என்பதால் ஒவ்வொரு பாடசாலை நிர்வாகமும் டெங்குக் காய்ச்சலால பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு சுரக்ஷ காப்புறுதிக்கு விண்ணப்பிக்க வேணும் என்பதை ஞாபகப்படுத்துறது நல்லதெண்டு நினைக்கிறன்.

**வாத்தியார்:** விதானையார் சொன்ன விடயம் மிகவும் முக்கியமானது. ஒட்டுமொத்த இலங்கையில வடபகுதி தானாம் சுரக்ஷ காப்புறுதிக் கொடுப்பனவை எடுக்கிறது குறைவு எண்டு சொல்லுகினம். ஆகையால எங்கட அதிபர்கள் இதுவிடயத்தில கவனம் செலுத்தி டெங்குப் பாதிப்புத் தொடர்பில கிடைக்கக்கூடிய சுரக்ஷ காப்புறுதிக் கொடுப்பனவுக்கு விண்ணப்பிக்க வேணும் எண்டு தயவாகக் கேட்டுக் கொள்கிறோம்.

**பண்டிதர்:** மாணவர் ஒருவர் வைத்தியசாலையில ஒருநாள் அனுமதிக்கப்பட்டிருந்தால் ஐயாயிரம் ரூபா படி கொடுப்பனவு கிடைக்கும். எனவே இது விடயத்தில பெற்றோர்களும் அதிபர் ஆசிரியர்களோட கதைத்து சுரக்ஷ காப்புறுதிக்கு விண்ணப்பித்தால் ஏதோ ஒரு சிறு கொடுப்பனவெண்டாலும் கிடைக்கும் தானே.

**சாத்திரியார்:** எங்கட மக்களுக்கு தகவல்களை வழங்கிறதிலும் விழிப்புணர்வை ஏற்படுத்திறதிலும் ஊடகங்கள் முழுக்கவனம் செலுத்தினால் எத்தனையோ நன்மை கிடைக்கும்.

**மூப்பர்:** ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்ல அது சம்பந்தப்பட்டவர்களுக்குக் கோபத்தையல்லோ தருகுது.

**சிறாப்பர்:** என்ன மூப்பர் சொல்லுறியள்.

**மூப்பர்:** யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கி மெட்ரோ கிளைக்கு முன்னால உள்ள மின்சார நிலைய வீதியை ஒருக்காப் பாருங்க. வாகன நெரிசலில அந்த இடம் திக்குமுக்காடுது. இருந்தும் அதுபற்றி எவரும் கவனிப்பதாக இல்லை.

**விதானையார்:** ஏலவே சிறாம்பியடி லேன்ல (பருத்தித்துறை வீதியையும் ஸ்ரான்லி வீதியையும் இணைக்கும் ஒழுங்கை) போய்வரமுடியல்ல. ஆட்டோ, மினிவான், வடி போன்ற வாகனங்களுக்கு அந்த ஒழுங்கையை ஒருவழிப் பாதையாக ஆக்க வேணும் எண்டு ஏற்கனவே ஆலடியில கதைத்தனாங்கள். இருந்தும் அதுபற்றி எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

இப்ப மின்சார நிலைய வீதியை ஒருவழிப் பாதையாக்குங்கள் எண்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆலடி மாநாட்டில கடும் கோபம் வரும்.

**வாத்தியார்:** ஆலடி மாநாட்டைப் பொறுத்தவரை நல்ல விடயங்களை எடுத்துச் சொல்லுறதுதான் அதின்ர பணி. நாங்கள் அதுபற்றி திரும்பத் திரும்பச் சொல்லுவம். கவனம் எடுக்கிறவர்கள் எடுக்கட்டும். எங்களைப் பொறுத்தவரை மக்களுக்கு நல்லது செய்ய வேணும் என்பதுதான் நோக்கம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

**ஆதித்தன்**








## வலம்புரி 20 ஆண்டை நிறைவு கண்டு விட்டதே?

## காதல் சுகமானதா? சுமையானதா?

## எனக்கொரு காதலி இருக்கிறாள். அதே போல உங்களுக்கும்...?

**சிவன் — யாழ்ப்பாணம்**

**நாவடக்கம் முக்கியம் என்கிறார்களே அது எப்படி?**

நாக்கிற்கும், பல்லிற்கும் சண்டை வந்து விட்டது. நாக்கு சொன்னது நான் தான் பெரியவன் என்று. பல்லு சொன்னது இல்லை இல்லை எனக்குள்தான் நீ அடங்கி இருக்கிறாய் என்று.

நாக்கிற்குக் கோபம் வந்து விட முன்னுக்கு நின்றவரைக் கண்டபாட்டில் திட்ட ஆரம்பித்தது.

எதிரில் நின்ற மனிதன் எட்டி முகத்தில் விட்டான் ஒரு குத்து. இரண்டு பல்லு கழன்று விழ நாக்குச் சிரித்துக் கொண்டே சொன்ன.து இப்போது புரிகிறதா நான் எப்பேற்பட்டவன் என்று. நா அடக்கம் நல்லது அடங்காவிட்டால் மற்றைய உறுப்புகளுக்கே சேதம்.

**அன்பு — வடமராட்சி**

**வலம்புரி 20 ஆண்டை நிறைவு கண்டு விட்டதே?**

வலம்புரியின் இந்த 20 ஆண்டு பயணம் சாதாரணமானது அல்ல.

அது எத்தனையோ எதிர்ப்புக்கள், குழிபறிப்புக்கள், மிரட்டல்கள், சதிகள், சாயம் பூசல்கள், தடுப்புகள், தடுக்கி விடுதல்கள், புறம்பேசுதல் என பல தடைகளைத் தாண்டி இன்று உங்கள் முன் உங்களால் நிமிர்ந்து நிற்கிறது.

இவ்விடத்தில் நாம் ஒன்றை மட்டும் குறிப்பிடுகின்றோம். ஒருவன் தர்மத்தின் வழி நின்றால் அவனுக்கு அழிவென்பது இல்லை.

அந்த பார்த்தசாரதியின் கையில் இருக்கும் தர்மத்தின் குரலாய் என்றும் வலம்புரி ஒலித்துக் கொண்டே இருக்கும்.

எந்தச் சலசலப்புக்கும் அஞ்சாமல் தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டே இருக்கும். இது சத்தியம்.

**சுதன் — குப்பிளான்**

**காணாமற் போனவர்களின் நிலை என்ன வியாசரே?**

தந்தையாய், தாயாய், கணவனாய், மனைவியாய், பிள்ளையாய், நண்பனாய், நண்பியாய், அதன் வலி புரிகின்றது.

என்ன செய்ய எமக்கு என்ன எழுதப்பட்டதோ அதே நடக்கும்.

இதைவிட இவ்விடத்தில் நாம் எதையும் கூறி விட முடியாது.

**தர்ணிகா — கௌந்தில்**

**சமஷ்டியே இல்லையாம் இனியாவது தமிழ் ஆட்கள் ஒன்றுபடுவார்களா?**

மற்றக் கட்சிகளை அறுத்துக் கழுவி தன்னை நிலை நிறுத்திக் கொண்டிருக்கிறது ஒரு பிரதான கட்சி.

இதைப் புரிந்து கொள்ளாமல் அதன் வாலைப் பிடித்து இழுபட்டுக் கொண்டிருக்கின்றன மற்றைய கட்சிகள்.

என்ன செய்ய, எதையும் மிகச் சாதாரணமாய் எடுத்துக் கொள்ளும் தமிழினத்துக்கு தலைவராக வாய்த்துவிட்டார்களே.

அது அவர்களின் அதிர்ஷ்டம் என்றே கூற வேண்டும்.

ஏதோ கடவுள் தமிழரைக் காப்பாற்றினால் சரி. இப்போதைக்கு அதையே கூற வேண்டும்.

**உங்கள் எண்ணத்தில் தோன்றும் கேள்விகளை வியாசரிடம் கேளுங்கள்**
**021 567 1532**
**என்ற இலக்கத்துக்கோ SMS அனுப்புங்கள்**

**நீலாம்பரி — விஸ்வமடு**

**காதல் சுகமானதா? சுமையானதா?**

எல்லாப் படத்திலும் காதல் என்றால் கஷ்டப்படுத்தானே காட்டுகிறார்கள்.

இரண்டு பேரும் காதலிப்பினம். பெட்டையின்ர தகப்பனுக்குத் தெரிஞ்சு பெட்டையை வீட்டுக்க பூட்டிவைக்க அந்த பூட்ட உடைச்சு பொடியன் கூட்டிக்கொண்டு போக வணக்கம் வரும். காதல் சுகமானதா எண்டு காதலித்து கலியாணம் செய்தவரிட்ட போய் கேளும் பாப்பம். செருப்பால தான் அடிச்சு கலைப்பான்கள்.

**கவி — நெல்லியடி**

**தமிழன் ஒருவன் ஜனாதிபதியாகும் காலம் வருமா?**

ஐடியா.. இன்று இரவு அதற்குரிய சந்தர்ப்பங்கள் இருக்கிறது.

செய்முறை: இரவு உணவு முடிக்கவும். ஒரு டம்ளர் பாலை இளம் சூட்டுடன் குடிக்கவும். குடித்து முடித்ததும் இரண்டு தூக்க மாத்திரைகளை விழுங்கவும். தாமதிக்காமல் பஞ்சு மெத்தையில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கவும்.

உங்கள் கனவில் ஒரு தமிழர் இந்த நாட்டின் ஜனாதிபதியாய் வருவார். அவரை ஜனாதிபதி சிம்மாசனத்தில் இருத்தி அழகு பாருங்கள்

**நிஷாந்தன் — யாழ்ப்பாணம்**

**நல்லாப் படிக்க ஏதும் ரிப்ஸ் சொல்லுங்க வியாசரே?**

இது தெரிஞ்சிருந்தா நான் ஏன் உங்கட கேள்விக்கு பதில் எழுதிக் கொண்டிருக்கிறேன்.

**திகழன் — யாக்கரு**

**இருதேசம் ஒரு நாடு என்பதை இந்தியா ஏற்றுள்ளதா?**

முதலில் ஒரு நாடு இருதேசம், சுயாட்சி, அதிகாரப்பகிர்வு, 13 ஆவது திருத்தச் சட்டம், அரசியலமைப்பு இது போன்ற சொற்பதங்களில் மக்களுக்கு பூரண தெளிவு இருக்கிறதா என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

அதன் பின் இந்த விடயங்களைப் பற்றிப் பேசலாமே?

**கௌதமி — பலாலி**

**அழுகிற ஆணையும், சிரிக்கிற பெண்ணையும் நம்பலாமா?**

அழுகை வந்தால் அழவும் சிரிப்பு வந்தால் சிரிப்பதும் தானே மனித குணம்.

இதில் என்ன நம்பாமை இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை.


**சனா — வதிரி**

**எனக்கொரு காதலி இருக்கிறாள். அதே போல உங்களுக்கும்...?**

எனக்கும் ஒரு காதலி இருக்கிறாள். அவள் ஏழு எட்டு முறைகளில் அடிக்கின்றாள். வெருட்டல் அவளது மொழியாகும். வெழுத்து வாங்கல் அவளது முறையாகும்.

**உங்கள் கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்துக்கு SMS அனுப்புங்கள்**


# வலம்புரியின் 20ஆவது











# ஏப்.1971 இலிருந்து ஏப்.2019 வரையான ஆயுதக் கிளர்ச்சிகள்

## ஒரு நோக்கு

எமது நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் 1971 ஏப்ரல் மாதமே முதலாவது ஆயுதக் கிளர்ச்சி வெடித்தது. இதனை 1965 மே மாதம் 14 ஆம் திகதி உருவான மக்கள் விடுதலை முன்னணி எனப்படுகின்ற இளைஞர் அமைப்பே மேற்கொண்டது. நகரங்களில் கைத்தொழில், பொருளாதாரம் வரை கிராமங்களில் வறுமை, பாடசாலைகள் தேசியமயமாக்கப்பட்டு தாய்மொழிக் கல்வி அமுலாக்கப்பட்ட போதும் நகரப் பாடசாலைகளில் தரமான விஞ்ஞான, ஆங்கிலக் கல்வி வழங்கப்பட்டது. ஆனால் கிராமப் பாடசாலைகளில் அவை கிடைக்கவில்லை மற்றும் படித்த இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பின்மை, சாதி ஒடுக்கு முறை என்பனவும் நிலவின.

இவைபோன்ற காரணங்களால் மக்கள் விடுதலை முன்னணித் தலைவர்கள் "சோசலிசம்" என்ற இலட்சியவாதத்தின் கீழ் ஆறு அரசியல் தலைப்புக்களில் விரிவுரைகளை நடத்தி இளைஞர்களை ஆயுதக் கிளர்ச்சிக்கு அணி திரட்டினார்கள். இவர்கள் ஆளும் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக 1971 ஏப்ரல் மாதம் ஆயுதத் தாக்குதலை மேற்கொண்டு இரண்டு வாரங்கள் பல பொலிஸ் நிலையங்களைக் கைப்பற்றி தம் அதிகாரத்தில் வைத்திருந்தனர். ஐக்கிய முன்னணி அரசாங்கம் இந்தியா, சீனா ஆகிய நாடுகளின் இராணுவ உதவியுடன் அடக்கியொடுக்கியது. இதில் 18 ஆயிரம் இளைஞர்கள் கொல்லப்பட்டதோடு கிளார்ச்சி முடிவுக்கு வந்தது.

1977 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில்' ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்ததும் சரணடைந்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், விடுதலை செய்யப்பட்டார்கள். பின்னர் 1983 இனக் கலவரத்தையடுத்து தலைமறைவாகிய மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் 1988, 1989களில் இலங்கை- இந்திய ஒப்பந்தத்தை எதிர்த்து ஆயுதக் கிளர்ச்சியை தொடங்கினார்கள். ஒப்பந்தத்தை ஆதரித்த அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், இராணுவத்தினர், குடும்பத்தினர் எனப் பலரை படுகொலை செய்தார்கள்.

இவ்வாறாக ஜனாதிபதி ஆர்.பிரேமதாஸவின் காலத்தில் வடக்கு- கிழக்கில் விடுதலைப்புலிகள் இந்திய இராணுவத்துடன் போரிட தெற்கில் இலங்கை இராணுவம், மக்கள் விடுதலை முன்னணியின் போராளிகள், ஆதரவாளர்கள் என 60 ஆயிரம் பேரைக் கொன்று குவித்து கிளர்ச்சியை ஒடுக்கியது. பரந்துபட்ட வெகுசனங்களின் ஆதரவின்மை , புரட்சிக்கான சித்தாந்தத் தெளிவின்மை, ஏனைய சிறுபான்மை இனத்தவர்களை இணைக்காமை, அவசர நிலைப்பாடு, பயங்கரவாதச் செயற்பாடுகள் போன்றவற்றை அதன் தோல்விக்கான காரணங்களாகக் குறிப்பிடலாம்.

அடுத்து இனரீதியான கிளர்ச்சியைப் பார்க்கின்றபோது தமிழனைப் பொறுத்த வரை சுதந்திரத்திற்குப் பின்னர் முதன் முதலில் 1949 இல் மலையகத் தமிழ் மக்களின் வாக்குரிமை, பிரஜாவுரிமை பாதிக்கப்படல், 1957 இல்சிங்களம் மாத்திரம் சட்டம், பண்டா- செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்படல், கல்லோயா- சேருவில குடியேற்றத் திட்டங்கள், மொழிவாரித் தரப்படுத்தல், 1981 நூலக எரிப்பு போன்ற காரணங்க ளால் 1975களில் "தமிழ் ஈழ" இலட்சிய த்திற்காக இளைஞர் இயக்கங்கள் உருவாகின.

இவற்றில் முக்கிய அமைப்பாகிய தமிழீழ விடுதலைப்புலிகள் ஆலோசகர்" தென்னிலங்கையில் மக்கள் விடுதலை முன்னணியின் 1971 ஏப்ரல் கிளர்ச்சி தோல்வியடைந்தமைக்கான காரண-காரியங்களை ஆராய்ந்து கொரில்லாப் போர் முறையையே பின்பற்றுவதாகத் தீர்மானித்தார்கள். இப்போராட்டம் வடக்கு- கிழக்கில் ஏறத்தாழ 30 வருடங்கள் நீடித்தது.

இப்போராட்டத்தை நான் என்ற தன் முனைப்புடன் விடுதலைப்புலிகளே முன்னெடுத்தார்கள். இப்போராட்டம் அயல் நாடான இந்தியாவின் தலையீட்டிற்கு வழி வகுத்ததோடு 1987 இல் இந்திய- இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. இந்திய அமைதி காக்கும் படையும் வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் நிலைகொண்டன. இந் நிலையில் தியாகி திலீபனின் 1987 செப்டெம்பர் 15 இல் ஆரம்பமான சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டமும் செப்டெம்பர் 26 இல் அவரின் மரணமும் ஒக்டோபர் 5 இல் கடலில் கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் முக்கிய போராளிகள் 12 பேர் சயனைட் உட்கொண்டு சாவடைந்தமை போன்ற உணர்வுபூர்வமான காரணங்களால் விடுதலைப்புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்கும் இடையே ஒக்டோபர் 10 இல் யுத்தம் ஆரம்பமானது.

இதன்மூலம் ஒப்பந்தம் செய்த ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நோக்கங்களில் ஒன்று நிறைவேறியது. பின்னர் ஜனாதிபதியாக வந்த ஆர்.பிரேமதாஸவும் விடுதலைப்புலிகளும் சேர்ந்து இந்திய இராணுவத்தை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கான தந்திரோபாயங்களை மேற்கொண்டனர். இந்திய இராணுவமும் 1990 தைமாதம் வெளியேறியது. சிறிது கால அமைதிக்குப் பின்னர் மீண்டும் உக்கிரமான போர் ஆரம்பமானது. 1994 இல் சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியானதும் 1995 இல் சமாதானப் பேச்சுவார்த்தை தை மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகி முறிவடைந்ததும் உக்கிரமான போர் ஆரம்பமாகி 1995 கடைசியில் அரச இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டைக் கைப்பற்றியது.

1996 தொடக்கம் வன்னிப் பெரு நிலப்பரப்பிற்கு தமது வளங்கள் பலவற்றையும் திசைதிருப்பிய விடுதலைப்புலிகள் 2002 மாசி 22 இல் அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்து நோர்வே அனுசரணையுடன் பேச்சுவார்த்தையொன்றை நடத்தினர். 2005 இல் அதுவும் தோல்வியில் முடிவுற மீண்டும் யுத்தம் உக்கிரம் பெற்று 2009 உடன் ஆயுதப் போர் முடிவுக்கு வந்தது.

"தமிழீழ இலட்சியத்திற்கான இந்தப் போர் தோல்வியடைந்தமைக்கான காரணங்களாக கொரில்லாப் போர்முறை வெகுசனப் போராட்டமாக மாறாமை, பிராந்தியத்தையே அச்சுறுத்தும் மிகையான தொழில் நுட்பம், தென்னிலங்கையில் சாதாரண சிங்கள மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள், மனித வலுப் போதாமை, பயங்கரவாதம் மீதான சர்வதேச நாடுகளின் எதிர்ப்பு, முக்கியமான சில பேச்சுவார்த்தைகளைக் கூட சாதகமாகப் பயன்படுத்தத் தவறியமை, போராட்டக் குழுக்கள் மத்தியில் குறைந்த பட்ச ஒற்றுமைதானும் இல்லாமை, போராட்டத்திற்கு தார்மீக ஆதரவாக ஒருநாடேனும் இல்லாமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்போராட்டம் தோல்வியுற்றபோதும் அதன் குணாம்சங்களாக இறுக்கமான கட்டமைப்புக்கள், நிதிவளம், நுட்பமான உளவுத்துறை, இராணுவ விஞ்ஞாபனப் பகுப்பாய்வுப் பிரயோகம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

இனி முஸ்லிம் கிளர்ச்சிவாத அமைப்புக்களை ஆராய்வோம். விடுதலைப்புலிகள் அமைப்பில் ஆரம்ப காலங்களில் சில முஸ்லிம் இளைஞர்கள் போராளிகளாக இருந்தனர். 1991 இல் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் முழுமையாக வெளியேற்றப்பட்டமை முரண்பாட்டிற்கு வித்திட்டது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு அடுத்தாற்போல் முஸ்லிம் மக்களே பெரும்பான்மையாகவுள்ளார்கள். விடுதலைப் போராட்டம் எனும் போது அங்கு வாழும் ஏனைய சிறுபான்மை இனத்தோரையும் வென்றெடுக்கவேண்டியது போராளிகளின் தலையாய கடமையாகும். ஆனால் அது பெரிதாக நிறைவேறவில்லை.



மாறாக காட்டிக்கொடுப்புக்களும் கொலைகளுமே இடம்பெற்றன. அரசாங்கமும் முஸ்லிம் மிதவாதத் தலைவர்களுடன் சேர்ந்து அவர்களைத் தம்பக்கம் வென்றெடுப்பதற்கான திட்டங்களைத் தீட்டினார்கள். விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தலிலிருந்து தம் மக்களைப் பாதுகாப்பதற்காக இளைஞர்கள் "ஜிகாத் இயக்கம்" என அணி திரண்டார்கள். அவர்களுக்கு அரச ஆயுதங்களை வழங்கியதோடு இராணுவப் புலனாய்வுப் பிரிவிலும் பலர் உள்வாங்கப்பட்டனர்.

2009 இல் போர் முடிவுக்கு வந்தவுடன் இந்த ஜிகாத் போன்ற முஸ்லிம் இளைஞர் இயக்கங்கள் காத்தான்குடியில் இராணுவத்திடம் ஆயுதங்களைக் கையளித்தார்கள். விடுதலைப்புலிகளின் முப்பது வருட போராட்டக் காலத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், அரச ஊழியர்கள், புத்திஜீவிகள் எனப்பலரும் புலம்பெயர்ந்தார்கள். இதனால் இருமொழித் தேர்ச்சியுடைய முஸ்லிம் இளைஞர்கள் அரச திணைக்களங்களில் கூடுதலான வேலைவாய்ப்புக்களைப் பெற்றார்கள். முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் கட்சிகளும் காலத்திற்குக் காலம் அரசாங்கங்களுடன் சேர்ந்து மந்திரிப் பதவிகளைப் பெற்று தம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெருமளவில் பெற்றுக்கொடுத்தார்கள்.

எமது நாட்டில் வர்த்தகத் துறையில் 1983 ஜூலைக்கலவரம் வரை தமிழர்கள் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தார்கள். இவர்கள் 1983 இல் தம் வர்த்தக நிறுவனங்கள், மூலதனங்களை இழந்து புலம்பெயர, ஏற்கனவே வர்த்தகத் துறையில் பிரகாசித்துக்கொண்டிருந்த முஸ்லிம்கள் உச்சநிலைக்கு தம்மை வளர்த்துக் கொண்டார்கள். அத்தோடு சவுதி அரேபியாவில் இருந்தான மூலதனம், இஸ்லாமிய புனித வாகாப்பிஸம் போன்றவை கிழக்கிலங்கை கிராமங்களை நோக்கிப் பாய்ந்தன. 2014 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் கிழக்கு மாகாண முதலமைச்சராக இஸ்லாமியர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டு 5 ஆண்டுகளைப் பூர்த்தி செய்தார். இக்காலப் பகுதியில் தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கம், புனித வாகாப்பிஸம் எனப்படும் "ஒரு மதம், ஒரு கடவுள்" கோட்பாட்டை இஸ்லாமிய இராச்சியம் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தீவிரமாகப் பரப்பினார்கள்.

இஸ்லாமியர்களின் பொருளாதார எழுச்சி, தேசிய தௌஹீத் ஜமாத்தின் வாகாப்பிஸ போராட்ட முன்னெடுப்புக்கள், இஸ்லாம் மக்களின் சனத்தொகை அதிகரிப்பு, நாடு பூரான குழுப்பரம்பல் என்பன அப்போதைய மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்திற்கும் சிங்கள- பௌத்த அடிப்படைவாத அமைப்புக்களுக்கும் சவாலாகின. தீவிரவாத அமைப்புக்களின் தூண்டுதலின் பேரில் அளுத்கம பகுதியில் முஸ்லிம் மக்களுக்கு எதிரான பாரிய கலவரம் ஏற்படுத்தப்பட்டது. பின்னர் கிழக்கு மாகாணத்தில் அம்பாறையிலும் மத்திய மாகாணத்தில் கண்டி- திகனவிலும் முஸ்லிம் மக்களுக்கு எதிரான கலவரங்கள் ஏற்பட்டன.

அத்தோடு பள்ளிவாசல்கள் மற்றும் முஸ்லிம் வியாபார நிறுவனங்கள் மீதும் இனந்தெரியாத நபர்களினால் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் அச்சமடைந்த முஸ்லிம் சமூகம் பள்ளிவாசல்கள் மூலம் தமது பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். மேலும் கலவரங்களால் பாதிப்படைந்த அல்லது தூண்டப்பட்ட இளைஞர்கள் பலர் தேசிய தௌஹீத் ஜமாத் இயக்கத்தில் இணைந்து பயிற்சியும் பெற்றார்கள். இவர்கள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புடனும் தொடர்புகளை வைத்துக் கொண்டதாக தகவல்கள், அறிக்கைகள் கூறுகின்றன. இவர்களே கடந்த ஏப்ரல் 21 இல் கத்தோலிக்க தேவாலயங்களிலும் பிரபல நட்சத்திர விடுதிகளிலும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டு 300 அப்பாவிகளைப் படுகொலை செய்து 500 இற்கு மேற்பட்டோரைக் காயமடைய வைத்தார்கள். இப்பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். சாதாரண மக்களும் மிதவாத முஸ்லிம் தலைவர்களுமே இதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

தொகுத்துப் பார்க்கின்ற போது 1971, 1989 ஆகிய இரு கிளர்ச்சிகளில் ஈடுபட்ட மக்கள் விடுதலை முன்னணி இன்று நாட்டில் மூன்றாவது நிலையிலுள்ள அரசியல் கட்சியாகவுள்ளது. ஆனால் அவ்வமைப்பு 51 வருட அனுபவத்தைக் கொண்டிருந்த போதும் போராட்டப் பாதையிலோ ஜனநாயக வழிமுறையிலோ சராசரி அல்லது மேம்பட்ட நிலையை அடையாமை விமர்சனத்திற்குரியதே. தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்பாடுகளால் உருவான விடுதலைப்புலிகள் 30 வருட தொடர்ச்சியான போராட்டத்தின் பின் மௌனிக்கப்பட்டு மீண்டும் அந்த இடத்தை பாரம்பரிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிரப்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எனவே விடுதலைப்புலிகள் அமைப்பின் தோற்றம், வளர்ச்சி, முடிவு தொடர்பான தெளிவான விஞ்ஞானபூர்வ ஆய்வே தமிழ்மக்களின் எதிர்கால அரசியல் செல்நெறியை தீர்மானிக்கும் எனலாம். தேசிய தௌஹீத் ஜமாத் தூய மதவாத அமைப்பாகவுள்ளதால் நீர்த்துப் போகவாய்ப்புள்ளது.

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்

# அவள் கல்லானாள்

மா.சிவசோதி, கரவெட்டி மேற்கு




அஸ்தமனத்தின் பின்
இறுகிக் கிடக்கும்
மேற்கு வானமாய்
பருவத்தின்
பொக்கிசங்களை
பறிகொடுத்துவிட்டு
இருண்டு கிடக்கிறது
அவள் மனமும் உடலும்

பருவத்தின்
ஆர்ப்பரிப்புக்கள்
ஆள ஆளாய் ஒருவன்
நாணேற்றி
வில் வளைத்தான்
கைக்குள் அடங்கியது கயிறு

காலம் ஒரு சக்கரம் போல்
சுழன்று கொண்டிருக்கிறது
கால வெள்ளம் அவனையும்
கவர்ந்திருந்தது

இல்லாள்
நல்லாள்
இலம் விட்டேகாள்
இருந்தும் என்ன?

வயிற்றினுள் வாழ்ந்து
ஏப்பமிடும் பசி
தனிமையில் அவள்

ஒரு வார்த்தை
இரு வார்த்தை
உஷ்ண அம்புகளாய்
தைத்து அவளை
வேசி என்றன

வாழ்க்கைச் சுமை
துரத்திக் கொண்டிருந்தது
வேலை என்றார் பலர்
வேலை தரக் கூலி என்றார்

கொடுத்தாள்
கொடுத்தாள்
அவள் வீட்டு அடுப்பு
எரியத் தொடங்கியது
இவள் உடல் எரிந்த போது

அவள் கல்லாய் ஆனாள்
அந்தக் கல்லைத்
தொட்டவர் எல்லாம்
தன்னை மனிதர் என்றார்

# எங்கள் அடுப்புகளில் இனி எப்போது விறகு எரியும்

வாழ்ந்த வீடும்
நடந்த தெருவும்
ஓடிய பள்ளியும்
வெள்ளத்தில்...

யாரிடம்
சொல்லியழ...
எங்கள் அடுப்புகளில்
இனி எப்போது
விறகு எரியும்

எப்போது
எங்கள் முற்றத்தில்
பேளை அடிப்போம்

அன்று யுத்தத்துள்
எரிந்தோம்
இன்று மழையால்
கரைகின்றோம்

அழகான தாய்நிலம்
சிதைவடைந்து
போவது தான் ஏனோ...

ஒரு கோப்பை கஞ்சிக்கும்
அரைத்துண்டு பாணுக்கும்
அலைகின்ற
அகதிவாழ்வு முடியாதா...

வெள்ளத்தில் கிளிநொச்சி
மிதக்கின்றது
முல்லைமண் அழுகின்றது
ஏன் இந்த கோரம்...

இடப்பெயர்வா
எமக்கு நிரந்தரம்

வெள்ளமே வற்றிவிடு
ஊர்சுற்றி ஓடும்
மழைநீரே ஓடிவிடு

கடதாசியில்
கப்பல் செய்து விட
மழை கேட்போம்
ஆனால் நீ இன்று எம்மை
படகினிலே இடம்பெயர
செய்துவிட்டாய்

பச்சை நிறத்து அண்ணா
அக்காக்கள்
இருந்திருந்தால்
மீட்பர்களாய் வந்திருப்பர்
வானமே இனிமேல்
கறுக்காதே
பகலவனை காட்டிவிடு
சந்தோசமாய்
நாம் வாழ்ந்துவிட...

ஆ.முல்லைதிவ்யன்

## தமிழன்

கலைவாணி தந்த கலையே
எனக்கு கவி தந்த தமிழே
ஒய்யார தமிழாக தாயின் வடிவாக
என் உள்ளத்தில் நீயிருக்க- நானும்
உன் புகழ் உரைக்க மறப்பேனா

ஓடும் நதிக்கும் இரட்டைக்கிழவியில்
அர்த்தங்கள் தந்தாய்
உள்ளெடுக்கும்
மூச்சிலும் ஓம் எனும்
பிரணவம் சொன்னாய்

அடுத்து அடுத்து வருகையிலே
அடுக்கு. மொழியானாய்
அதற்கிடையில்
புதிதாய் ஒன்று சேர்கையிலே
அடுக்கிடுக்குத் தொடரானாய்


எதுகை மோனையிலே
உன்னை நான்
விளம்பையிலே
எனக்குள்ளே பேரின்பம்
செந்தமிழும் செவியோரம்
அணுகையிலே
காதுக்குள் கச்சேரியே கேட்கும்

உன்னை சொல்ல
சொல்ல தேனூறி
உன் உள் நாக்கும் தித்திக்கும்
இரத்தத்தின் சிவப்பணுவும் வாழ்க
வண்டமிழ் என்றே உரைக்கும்

இறக்கும் நொடியிலும்
என் தாய்மொழி
தமிழ் எனச் சொல்வேன்
எமனிடம் கூட
பெருமிதம் கொண்டு ஆதியிலே
வந்த தமிழன் நான்
என்று உரைப்பேன்

த.லக்ஸ்மன், நல்லூர்

## மௌனத்தின் தேடல்- 477



## தடுப்பதற்கு முடிந்ததுவா

உயிர் காக்க உணவுமில
உடுப்பதற்குத் துணியுமில
படுப்பதற்கு வீடு மிலாப்
பாசமான உறியுமிலாது
தடுப்பதற்கு முடிந்ததுவா
தமிழினத்தின் அழிவிற்கு
கெடுவிடுத்த அரசிற்கு
கொடுத்த மிண்டு ஐநாவின்
கோணலான அங்கீகாரமிதோ

கந்தன் மைந்தன்
காவலூர்

## மீதியொரு கண்ணொடு

ஏதிலியாய் ஏழையாய்
எதிர்காலம் சூனியமாய்
நீதியிலாப் போரினாலே
நிர்மூலமாய் அழிந்த இனம்
மீதியொரு கண்ணோடு
மேதினியில் வாழ்விருக்கா

சிவமணி
சுருவில்

## தாயின் குரல்

தோல் சுருங்கி ஆதரிக்க
யாரும் இன்றி தவிக்கும்
தாயின் குரல் உன்மனதை
தட்டி எழுப்பவில்லையா?
மானிடா உன் மனமும்
கல்லாகி போனதோ?

சி.பிரியங்கா
மட்டுவில்

## அநீதியான அரசிற்கு

ஒரு கண்ணில் நீரும்
மறுகண்ணில் செந்நீரும்
பெருக்கெடுக்க போரின்
பிரளயமா தாயுனக்கு
அருமருந்த கண்பறித்த
அநீதியான அரசிற்கு
அறமிருக்கா நின்
வேதனையை உணருமதோ
விடிவுகாலம் வாராதோ.

த.சிவகாமி
நல்லூர்

## இதுவே வாழ்க்கை நியதி

நரை திரை மூப்பு இதுவே–எம்
வாழ்க்கை போக்கு
ஓடி ஆடித்திரிந்த
கால்கள் –காலம் அதன்
நியதியானால்
தொலைந்து போன காலங்கள்
போனதை மீளப் பெறமுடியுமா?
இவ் வையகத்தே
சொல்லொணா துன்பங்களையும்
எண்ணில் அடங்காது
துயரங்களையும்
நெஞ்சில் சுமந்து
வாழ வேண்டிய இவ்
இயற்கையாக அமைத்த
வாழ்க்கை நியதிதனை
துயர் துடைத்து
உறுதி பூண்டு
இனிதே வென்றிடுவோம்

வர்சிகா
சங்கானை

## உறவுகளைத் தேடி

வயோதிபத்தாய் நான் இன்று
உரிமைகளைக் கேட்டு
கண்ணீர் வடிக்கவில்லை
போரின் முடிவில் இராணுவத்திடம்
சரணடைந்த என் அன்பு
உறவுகளையே தேடி
வேண்டி நிற்கின்றேன்
அது ஒன்றே போதும்
என் வாழ்வின் துன்பம் தீரும்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## மௌனத்தின் தேடல் –478



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## கலங்காதிரு தாயே

எத்தனை பிள்ளைகள் பெற்று
அத்தனையும் ஆளாக்கினாய்
ஏழ்மை நிலையிலும்
அகால சூழ்நிலையால்
அத்தனையும் அழிந்து போக
ஆதரிப்பார் யாருமின்றி
அல்லல்படுகின்றாய் தாயே
பிள்ளைகளைப் பெற்றாய்
துள்ளிஓடும்
அழகினை பார்த்தாய்
கள்ளமில்லா உள்ளங்கண்டு
கொள்ளை இன்பம்கொண்டாய்
இதுபோதும் தாயே
கலங்காதிரு

துரை, தென்மட்டுவில்

## எப்போதுதான் தீருமோ?

கண்ணை மூடுவதற்குள்ளே
நான் பெற்ற பிள்ளையின்
முகத்தை நான் காண்பேனோ
என்று காலந்தோறும் ஏங்கி
தவிக்கும் இத்தாயின் ஏக்கம்
எப்போது தான் தீருமோ?

ச.பிரநிதன், மட்டுவில்

## கண்ணீருக்கு காரணம்

தவறே நினைக்காத தாய்க்கு
வந்த சோதனை என்ன
கண்ணீருக்கு காரணம் என்ன
பிள்ளைகளின் பிரிவோ
வாட்டி வதைக்கும்
வறுமையோ என்ன சொல்ல?

வி.டிலக்ஸன்
யா/ தும்பளை.ம.வி.



அரியாலையூர் குணரத்தினம் பிரதீபன்

# வலம்புரிச்சங்கு

புல்வெளியெங்கும் பனித்துளி தூங்கிக் இன்பம் காண இனிய தென்றல் வீச மனதைமயக்கும் அந்த அதிகாலைப் பொழுதில் வழமைபோல் எம்மையெல்லாம் காக்கும் நல்லூ ரானின் திருப்பள்ளி எழுச்சி பார்ப்பதற்காக துவிச்சக்கரவண்டியை மெல்ல மிதித்து மனதினுள் சஷ்டியை நோக்க ...என்ற கவசத்தின் அடியைப் பாடியவராக, நெற்றிநிறை பட்டையும், வெள்ளை வேட்டியும் வெள்ளைச் சேட்டும் என இந்த தள்ளாடும் வயசிலும் கம்பீரத் தோற்றத்துடன் புறப்பட்டார் பொன்னம்பலத்தார். இவருக்கு இன்று வாழ்வில் மிக மிக முக்கிய நாள் “இவரின் பிறந்த நாளோ கல்யாண நாளோ என்று உங்களுக்கு எண்ணத் தோன்றும் அது இரண்டுமே இல்லை அப்படியென்றால் இன்று என்னதான் விஷேசம் என்று பார்ப்பம்...

பொன்னம்பலத்தார் இன்று ஊரிலேயே பெரிய பணக்காரர் எல்லாம் இந்த வலம்புரி செய்த வேலைதான். பொன்னம்பலத்தாரின் வாழ்வில் வலம்புரி கைகொடுத்தது போல் ஒன்றும் கைகொடுக்கவில்லை. என்னதான் காசு பணம் வந்தாலும் இந்த மனுசன் பழச மறக்காதவர். மனுசனுக்கு ஒரு காலத்தில கஷ்டம் என்றால் கஷ்டம். அது வர்ணிக்க முடியாத அளவுக்கு இருந்தது. தொன்னூற்றைந்தில இடம்பெயர்ந்து வன்னிக்குப் போகும் போது நான்கு பெட்டைப் பிள்ளையுடனும் ஒரு பொடிப்பயலுடனும் போனவர். அங்கு நாய் படாப்பாடுபட்டு வாழ்ந்தவர். முத்த மூவரையும் காப்பாற்றுவதற்காக இளவயதிலேயே கல்யாணமும் கட்டி வைத்தவர். எது எப்படித்தான் இருப்பினும் சொந்த ஊரில வாழ்வது போல வராது என்றெண்ணியவர் சொந்த ஊருக்கு போவம் என்று வன்னியிலிருந்து புறப்பட்டு ஊருக்கு வரும் போது மூத்தமகளையும் மருமகனையும் சந்தேகத்தில பிடித்து தடுப்பில் வைத்து விட்டார்கள். மற்றவர்களுடன் யாழ்ப்பாணம் வந்து வாழத் தொடங்கின மனுசன் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டும் என்று கிடந்த சொத்துப் பத்துக்களில் பெரும் பகுதியை விற்று இரண்டாவது மற்றும் மகளையும் அவர்களது மருமகளையும் வள்ளத்தால இந்தியா அனுப்பிட்டு மனுசியும் ஒத்த ஆணையும் கடைசி பெண்ணையும் தன்னுடன் வைத்திருந்தார்.

கடைக்குட்டி செல்லம் ராணி அவளுக்கு இருண்டது விடிஞ்சது ஒன்றும் தெரியாது. உயர்தரம் படித்துக் கொண்டிருந்தாள். படிக்கும் போது காதல் கத்தரிக்காய் என்று நாட்களைக் கழித்து வந்தாள். வீட்டுக் கஷ்டத்தை எள்ளளவும் நினைக்காது தன்னை அழகுபடுத்தி பூசி மொழுகிக் கொண்டு திரிந்தாள். ஆனால் பொடியன் சுதனோ கிடைக்கிற ஏதாவது வேலைக்குப் போய் வருவான். சிலசமயங்களில் தகப்பனுடனும் தொழிலுக்குப் போவது வழக்கம்.

பொன்னம்பலத்தார் தன் குடும்பத்தைக்கொண்டு நடத்துவம் என்றால் வருமானம் போதியளவு இல்லை. இந்த நேரம் பார்த்து பொடியனுக்கும் நாட்டில இருப்பது சிக்கல் என்பதை நன்கு உணர்ந்தவர் மனுசி தந்த சீதன வீட்டையும் தாலிக் கொடியையும் விற்று மகனை வெளிநாடு அனுப்பிவைத்தார். மனைவி இரத்தினம் மஞ்சள் நூலில் தாலியைக் கோர்த்து போட்டு “ஒருநாள் விடியும்” என்ற நம்பிக்கையில் காத்திருந்தாள்.

சுதன் வெளிநாடு போனாலும் அங்க வீசா இல்லாததால் ஒழித்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டதால் வேலைக்குப் போவதிலும் சிரமப்பட்டான். கள்ளமாக சிலசமயங்களில் வேலைக்குப் போவான். அந்தச் சம்பளமும் அவனது வாழ்க்கைச் சீவியத்தைக் கொண்டு போகத்தான் போதுமானதாக இருந்தது. இப்படி இடியப்பச் சிக்கலாகப் போய்க் கொண்டிருந்த பொன்னம்பலத்தாரின் வாழ்வு. “ஏதோ மூன்று நேரமும் உணவு உண்பதற்கான வருமானம் கிடைக்கும் ஒரு வேலை கிடைக்க இறைவன் வழி செய்ய மாட்டானா?” என்று தினமும் நல்லூரான் வாசலில் நின்று புலம்புவார்..

தன் பக்தர்களுக்கு அருளும் முருகன் காலவோட்டத்தில் கண்திறந்தான். அன்று ஒரு மார்கழித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் கோவிலுக்குப் போய்விட்டு வழக்கம் போல் ஆனந்தன் கடையில் ஒரு தேநீர் அருந்துவம் என்று உட்கார்ந்த போது...கடையில் தொங்கிய புதிய புதினத்தாள் ஒன்றில் “காவலாளி தேவை” என்ற விளம்பரம் இருந்தது. பத்திரிகையில் செய்தியைப் பார்த்ததும் முதல் ஆளாய் பொன்னம்பலத்தார் முண்டியடித்து மார்கழித் திங்கள் இருபதாம் நாள் தனது உத்தியோகபூர்வபத்திரிகைப்பணியை ஆரம்பித்த வலம்புரிப்பத்திரிகை அமைந்திருந்த வெள்ளாந் தெருவுக்குப் போய் அலுவலக வாசலில் காத்து நின்றார். அங்குமிங்கும் சுற்றிப்பார்த்தார்.உள்ளே மூன்று இளைஞர்கள் மட்டும் உட்கார்ந்திருந்தனர். ஒருவர் மேசையில் முகாமையாளர் என பேனாவால் எழுதப்பட்ட பெயர்ப்பலகை ஒன்று இருந்தது. யாரை கூப்பிட்டுக் கேட்பது என்றெண்ணியவர்,

ஆழ்மனதில் “இரவு வேலை என்றாலே பயம் அதிலும் புதுப் பத்திரிகை!, பத்திரிகை அலுவலகம் என்றால் எவரும் வேலைக்கு வராத இந்தக் காலம், பயம் மட்டுமே குடிகொண்டு ஐந்து ஆறு மணிக்கே ஊர் அடங்கிடும். எப்படி மனுசியையும் வயதுக்கு வந்த பிள்ளையையும் விட்டிட்டு வேலைக்குப் வாறது... மனுசியின் தங்கை வீட்டில ஒருமாதிரி கெஞ்சிக் கூத்தாடி மனுசியையும் மகளையும் இரவில் தங்கவிடுவம்” என்று பலதையும் பத்தையும் எண்ணியவாறு மீண்டும் சலனம் கொண்டார் “யாரைக் கேட்பது” எப்படிக் கேட்பது எதற்கும் கேட்பம் என்று அலுவலகத்தில் இருந்த நபரைப்பார்த்து “ஐயா வணக்கம் வேலைக்கு ஆள் வேணும் என்டு உங்கட பத்திரிகையில் கிடந்தது” என வாய்விட்டார் பொன்னம்பலத்தார்.

“ஐயா நீங்கள் வேலை தந்தால் தான் என்ர வீட்ட அடுப்பு எரியும், வயசுக்கு வந்த குமர் வேற இருக்கு, அவளின்ட படிப்புச் செலவுக்கும் காசு வேண்டும் என்று இடைவிடாது கதைத்தார்.

பட்டம் பெற்று வேலை இல்லாத் திண்டாட்டத்தில் இருக்கும் இந்த இளைஞர்களுக்கு புரிந்தது பொன்னம்பலத்தாரின் வேதனையின் விளிம்பு. அதனால் பொன்னம்பலத்தாரை வேலைக்கு அமர்த்தினர்கள் அந்த இளைஞர் படையணி. பொன்னம்பலத்தாரும் இரவு பத்திரிகை அலுவலகத்தில் காவலாளியாக வேலை செய்வது, காலை கடைகளுக்குப் பத்திரிகை போடுவது, பின்னேரத்தில மீதிப்பத்திரிகைகளையும் காசையும் சேகரித்துக் கொண்டுவந்து கொடுப்பது என்று விசுவாசத்தின் மறைபொருளாய் அர்ப்பணிப்புடன் வேலை செய்தார். ஆரம்பத்தில் போட்டி நிறுவனங்களின் அச்சுறுத்தல்களுடனும், கழுத்தறுப்புப் போட்டியுடனும் உயிராபத்துக்களை எதிர்நோக்க வேண்டியிருந்த போது ஆமை வேகத்தில் நகர்ந்தாலும் காலப் போக்கில் அனைத்துச் சிரமங்களையும் தடைகளையும் தாண்டி சிகரம் தொட்டது இந்தப் பத்திரிகை. இளைய எழுத்தாளனின் ஆசிரியர் தலையங்கம் படித்த சமூகத்தைக் கவர அதிகளவு பத்திரிகை விற்பனையாகத் தொடங்கியது பொன்னம்பலத்தாருக்கும் சம்பளம் கூடிக் கொண்டு சென்றது. பொன்னம்பலத்தாரும் குடும்பத்தில் மகிழ்வுடன் வாழ ஆரம்பித்தார்.

அந்த நேரம் பார்த்து மகள் ராணிக்கு உயர்தரப்படிப்பு முடிந்தது. அவள் “ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருந்ததால்” ராணிக்குச் சிறந்த பெறுபேறு கிடைத்து பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. இந்த நேரம் பார்த்து மகன் சுதனுக்கும் வீசாவும் கிடைத்து அவன் நல்ல வேலைக்குப் போய் சம்பாதிக்க ஆரம்பித்து வீட்டுக்கு மெல்ல மெல்ல காசு அனுப்பத் தொடங்கினான். பொன்னம்பலத்தார் வீட்டில் மீண்டும் பொன் விளைய ஆரம்பித்தது. “எப்படா மகன் உழைப்பான் அவன் சம்பாத்தியத்தில் வாழ்வோம்” என்று எண்ணாது தனது தள்ளாடும் வயதில் கூட துவிச்சக்கர வண்டியை மிதித்து வலம்புரிக்கு வேலைக்கு வந்தார். கிடைக்கும் சம்பள த்தில் தனக்கும் தன் மனைவி இரத்தினம்மாவிற்கும் தேவையானவற்றை வாங்கி மகிழ்ந்தார்.சொந்த உழைப்பில் வாழும் சந்தோசம் போல வருமா என்று அடிக்கடி தன்னுள் பெருமைப்பட்டுக் கொள்வார்.

காலம் விரைந்தோடியது ராணிக்கும் பல்கலைக்கழக கல்வி நிறைவு பெற்றது. தன் சொந்தத்திற்கேயே நல்ல பொடியனாய் பார்த்து கட்டி வைப்போம் என்றெண்ணிய போது தான் ராணியின் காதல் விவகாரம் தெரிய வந்தது. என்ன செய்வது பெத்த பாவத்திற்காக மாப்பிள்ள வீட்டுப்படியேறினார் பொன்னம்பலம். மாப்பிளையின் தந்தை பெரும் செல்வந்தன் தாரதரம், சாதி பார்ப்பவன் பொன்னம்பலத்தாரும் அவரும் ஒரே சாதி இருந்தாலும் தராதரத்ததில் வேறுபட்டதால் சம்மந்தம் செய்ய மறுத்துவிட்டார். எவ்வளவு கெஞ்சி மன்றாடிக் கேட்டும் சரிவரவில்லை. விடயத்தை ராணிக்கு எடுத்துச் சொல்லி புரிய வைத்தார் “இஞ்ச பார் ராணி நாங்கள் எல்லாம் மனிதர்கள். சாதி வெறியோ மத வெறியோ தராதரம் தம்பட்டமோ எம் வாழ்வை சூறையாடக் கூடாது. அந்த மனுசனு க்கு ஒன்றும் புரியல இப்பவும் தராசில் போட்டு நெறுத்துப் பார்க்குது! நீ சிறப்பாக வாழ வேண்டும் உன் காதலனோ தந்தையின் காலில் பெட்டிப்பாம்பாக சுற்றி கிடக்கிறான்... நாளைக்கு கல்யாணம்கட்டிய பிறகு தந்தை சொல்லைக் கேட்டு உன்னை கைவிடமாட்டான்என்று என்ன நம்பிக்கை எனக் கூறி சமாதானப்படுத்தினார்.

ராணிக்கு எல்லாம்புரிந்தது: “முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்” என்பதை உணர்ந்தவளாய் தான் தனது அழகாலும் இளமையாலும் தான் செய்த தவறை உணர்ந்து தற்போது வருத்தப்பட்டாள். தனது பெற்றோரைச் சந்தோசப்படுத்துவதற்காக தனது சொந்தக்காரப் பையனுக்கு வாழ்க்கைப் பட்டாள். அவளது வாழ்க்கையும் சந்தோசமாக ஓடிக் கொண்டிருந்தது. நாட்டில் எல்லாம் சுமுகமானது தடுப்புக்காவலில் இருந்த மூத்தமகளும் மருமகனும் விடுவிக்கப்பட்டனர். உடனே பொன்னம்பலத்தார் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது மகள் குடும்பத்தினை இந்தியாவிலிருந்து வரவழைத்தார். மகனை வெளிநாட்டிலிருந்து வரவழைத்து ஊரிலேயே மிகவும் கஷ்டப்பட்ட பெண்ணாக பார்த்து மிகவும் சிறப்பான முறையில் திருமணம் செய்து வைத்து மகனையும் மருமகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்தார். இப்படி இன்று மிகவும் சந்தோசமாக வாழ்ந்தாலும் அவருக்கு வாழ்வு தந்த வலம்புரி தான் அவர் வாழ்க்கையில் கிடைத்த பொக்கிசம்.எப்படி ஒரு வலம்புரிச் சங்கு கோடி விலைக்கு சந்தையில் போகுமோ அப்படி இவருக்கு வாழ்க்கையில் ஒளி கொடுத்தது இந்தப்பத்திரிகைக் கவாலாளித் தொழில் தான்...

இன்று அதன் இருபதாம் ஆண்டில் காலடி வைக்கிறது. அது தான் இவ்வளவு சந்தோசம் பொன்னம்பலத்தாருக்கு. கடந்த பதினெட்டு வருடங்களாக வேலை செய்து கடந்த வருடம் மகனின் கட்டாயத்தின் பெயரில் ஓய்வு பெற்றாலும் இன்றும் அவரின் வாழ்வு முழுவதும் பத்திரிகையுடன் தான்...

வாங்கோ ஐயா என்ற முகாமையாளரின் குரல் பொன்னம்பலத்தாருக்கு ஒரு தெம்பைக் கொடுத்தது. மனமகிழ்வுடன் உள்ளே சென்றார் இருபதாவது பிறந்ததினக் கொண்டாட்ட ஆரம்ப நிகழ்வுகளுக்காக...





# சபரிமலை

கேரளா காட்டு மையப் பகுதியில் வேடுவகுலம் முற்காலத்தில் வாழ்ந்து வந்தது. அவர்களிடையே வித்தியாசமான பழக்க வழக்கங்கள் இருந்து வந்தது.

அக்கிராமத்தில் ஒரு இளைஞன் 18 வயது அடைந்ததும் காட்டில் கள்ளி வேட்டைக்கு பெரியவர்களுடன் செல்வான். அவன் கையால் வேட்டையாடப்பட்ட மிருகங்களை கொண்டு வந்து அன்று இரவு சமையல் செய்து உண்டு மகிழ்ந்து கொண்டாடி அன்றைய தினமே அப்பையனுக்கு கிராமத்தில் உனள்ள பெண்ணை திருமணம் செய்து வைப்பார்கள். அந்த வகையில் அக்கிராமத்தில் வசித்த சபரி என்ற பெண்ணிற்கு திருமணம் செய்ய தீர்மானித்தார்கள். ஆனால் சபரிக்கு இதில் உடன்பாடு இல்லை. அவள் வீட்டிற்கு தெரியாமல் வீட்டை விட்டு காட்டிற்கு ஏகினாள்.

பகல் முழுவதும் நடந்து நடுக்காட்டிற்கு வந்து விட்டாள். இரவு இருள் சூழ்ந்ததும் அவளுக்கு பயம் ஏற்பட்டது. ஒரு மரத்தின் மேல் ஏறி எங்காவது வெளிச்சம் தெரிகின்றதா என பார்த்தா என பார்த்தாள். அப்போது அண்மையில் ஒரு சிறு குடிசையில் இருந்து சிறு வெளிச்சம் தென்பட்டது. அது அவளுக்கு ஆறுதல் தர மரத்தின் கிளையில் ஓய்வு எடுத்தாள். காலை அக்குடிசைக்கு வந்து பார்க்கும் போது யாரோ ஒரு துறவி பூஜை செய்த அடையாளங்கள் இருந்தன். அவர் நீராட



கங்கைக்கு சென்றிருப்பார் என நினைத்தவள் அவ்விடத்தை சுத்தம் செய்துவிட்டு திரும்பவும் மரத்தில் சென்று உட்கார்ந்தார். அடுத்தநாள் காலை துறவியானவர் நீராடச் சென்றவர் இடையில் திரும்பிவந்தார். அப்போது இப்பெண் சபரி தனது கதையைக் கூறியவுடன் இவர் ஆச்சிரமத்தில் தங்க இடம்கொடுத்து உபதே ம் செய்து வைத்தார்.


ஆச்சிரமத்தில் அமைதியான சந்தோசமான சூழலில் சபரி தானும் யாகம், பூசை முதலியனவற்றை கற்று குருவானவருக்கு உதவியாக இருந்தார். ஒருநாள் குருவானவர் தனது உடலை உருக்கும் காலம் வந்தபோது சபரிக்கு தீட்ச்சையளித்து இராமர் சீதையைத்தேடி இவ்வழியே வருவர். அப்போது உனக்கு வைகுந்தபேறு கிடைக்கும் எனக்கூறி அமரத்துவமடைந்தார்.

பின்பு சபரி நித்தம் பூஜைமுடித்து பழங்கள் எடுத்து வந்து இராமரின் வருகைக்காக தவம் இயற்றினார். இராமர் சீதையைத் தேடி வரும்போது இவ் ஆச்சிரமத்தை கண்டு அங்கு வந்து ஓய்வெடுத்தார். சபரி மகிழ்ந்து பாதபூஜை செய்து இராமரை 18 தரம் சுற்றி வந்து வணங்கினான். அப்போது இராமர் நிர் தெளித்து அம்மா நீ வைகுந்தம் ஏகுவாயாக எனக் கூறி நீர் என்னை எதிர்பார்த்து இவ்விடத்தில் யாகம் செய்தபடியால் நான் இந்த இடத்தில் வந்து இருந்து மக்களை இரட்ச்சிப்பேன் எனக் கூறிச் சென்றார்.

எனவே தான் மோகினியாகிய திருமாலுக்கம் சிவனுக்கும் கிடைத்த குழந்தை ஐயப்பனை அரசப்பட்டம் கட்டுவிக்க நினைத்த பந்தன தகாராஜனுக்கு நான் அரசனாகமாட்டேன். தம்பிக்கு பட்டம் சூட்டும்படி கூறி நான் புறப்படுகின்றேன் எனக்கு எனது அம்பு விழும் இடத்தில் கோவில் கட்டித்தரும்படி வேண்டி அம்பை எய்தார். அது சபரிமலையில் வீழ்ந்தது எனவே பந்தன மகாராஜனட அவ்விடத்தில் கோவில் கட்டி ஐயப்பனை அனுப்பி வைத்தார். அவரது பட்டம் சூட்டும் விழாவிற்கு செய்த பொன் ஆபரணங்களை பெற மறுத்த ஐயப்பன் ஒவ்வொரு தை முதலாம் திகதி தனக்கு இவ் ஆபரணங்களை சூடி அழகு பாருங்கள் நான் உங்களுக்கு காட்சி கொடுப்பேன் என உறுதியளித்தார். அதன்படி இன்றுவரை சபரிமலையில் மகர ஒளியைக் கண்டு மகிழ்ந்து ஐயப்பனை சேவிக்கின்றார்கள்.

-சிவனடியான்-

# MERRY CHRISTMAS



**I only want one christmas gift. It's the only christmas wish I've wished. I just went to know all the names of the girls on the naughty list...!**

**P.Royal Sharon,**
**J/Kalviyankadu H.T.M.School, 3[B], SOS children Villages, Sathyam House.**



ஜோய் எவ்றோம்,
8சி, பு/ப/க, SOS சிறுவர் கிராமம், சதயம் இல்லம்.

## பழமொழிகள்

- தடியெடுத்தவன் தண்டக்காரன்.
- தம்பியுள்ளான் படைக்கஞ்சான்.
- தன் வினை தன்னைச் சுடும்.
- தனிமரம் தோப்பாகாது.
- தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு.
- தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை.
- தலைக்கு மேலே வெள்ளம் போனால் சாணென்ன முழமென்ன.
- தினை விதைத்தவன் தினையறுப்பான் வினை விதைத்தவன் வினையறுப்பான்.
- தெய்வம் வரங் கொடுத்தாலும் பூசாரி விடாதது போல்.
- நக்கிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன?
- நடுக்கடலுக்குப் போனாலும் நாய்க்கு நக்குத் தண்ணீர்தான்.

## விடுகதைகள்

- ஒரு குற்றத்தை செய்ய முயற்சித்தால் தண்டனை உண்டு. ஆனால் குற்றத்தை செய்தால் தண்டிக்க முடியாது. அக் குற்றம் என்ன?

  தற்கொலை

- எப்போதும் காதருகில் ரகசியம் பேசிக் கொண்டிருப்பவள். அவள் யார்?

  செல்போன்

- ஓவென்று உயர்ந்த மலை. நடுவே உடன் பிறப்பு இருவர் ! ஒருவரை மற்றவர் பார்ப்பதுமில்லை பேசுவதும் இல்லை. அவர்கள் யார்?

  கண், மூக்கு

- மீன் பிடிக்கத் தெரியாதாம் ஆனால் வலை பின்னுவானாம் அவன் யார்?

  சிலந்தி



ஏ.விதுஷன்,
SOS சிறுவர் கிராமம்,5, சதயம் இல்லம்.

# சரிந்தது முஷாரப்பின் சாம்ராஜ்ஜியம்!

## முடக்கிய விநோத நோய்... கதற வைத்த தூக்குத் தண்டனை

சர்வாதிகாரிகளின் வாழ்வு சாதாரணமாக முடிவதில்லை. தூக்குக் கயிற்றிலோ அல்லது தோட்டாக்களிலோ தான் முற்றுப் பெறுகின்றன. அண்மைய உதாரணம், பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப்புக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனை!

இருபது ஆண்டுகள் பின்னோக்கிப் பார்த்





தால்... பாகிஸ்தானில் சர்வ வல்லமை படைத்த சக்தியாக இருந்தார் முஷாரப். கார்கில் போருக்குக் காரணமும் அவரே. 1999 ஆம் ஆண்டு கார்கிலில் பாகிஸ்தானுடன் இந்தியா போரிட்டுக் கொண்டிருந்தபோது முஷாரப்தான் பாகிஸ்தானின் இராணுவத்தளபதி. போரின் முடிவில் பாகிஸ்தான் வீரர்கள் இந்திய எல்லையிலிருந்து விரட்டியடிக்கப்பட்டார்கள். இதை முன்வைத்து அப்போதைய பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப், முஷாரப்பை கடுமையாகக் கடிந்து கொண்டார். அவர்களுக்குள் தொடர்ந்த மோதல்களால் சில மாதங்களிலேயே நவாஸ் ஷெரீப்பின் ஆட்சியைக் கவிழ்த்தார் முஷாரப்.

1999, ஒக்டோபர் 13 ஆம் திகதி தொலைக்காட்சியில் தோன்றிய முஷாரப், "நாட்டில் எமர்ஜென்சி அறிவிக்கப்பட்டுள்ளது. நவாஸ்ஷெரீப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பாகிஸ்தானில் இனி இராணுவ ஆட்சிதான்" என்று அதிரடியாக அறிவித்தார். 2001 ஆம் ஆண்டு ஜூன் 20 ஆம் திகதி பாகிஸ்தான் ஜனாதிபதியாக தனக்குத்தானே முடி சூட்டிக்கொண்டார் முஷாரப். அடுத்த எட்டு ஆண்டுகள் பாகிஸ்தானின் ஒற்றை அதிகார மையமாக மாறினார் முஷாரப். அதன் பிறகும் அவர் அடங்கவில்லை.

நவம்பர் 3 ஆம் திகதி இரண்டாவது முறையாக எமர்ஜென்சியை அறிவித்தார். இந்தமுறை அரசியலமைப்புச் சட்டத்தையும் முடக்கினார். உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி இஃப்திகார் சௌத்ரி உள்ளிட்ட 61 நீதிபதிகள் சிறையில் தள்ளப்பட்டனர். தனியார் தொலைக்காட்சிகளின் ஒளிபரப்பு முடக்கப்பட்டது.

2007, நவம்பர் 28 ஆம் திகதி தனது ஜெனரல் பதவியை அஷ்பக் பர்வேஸ் கயானியிடம் ஒப்படைத்துவிட்டு முழுநேர அரசியல்வாதி அவதாரம் எடுத்தார் முஷாரப். அடுத்த நாளே ஜனாதிபதியாகப் பதவியேற்றார். எமர்ஜென்சி விலக்கப்பட்டது. ஆனால், ஆட்சி நீடிக்கவில்லை.

கடும் அரசியல் நெருக்கடிகள் காரணமாக, 2008 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 18 ஆம் திகதி பாகிஸ்தான் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக முஷாரப் அறிவித்தார். தன்னுடைய எமர்ஜென்சி நடவடிக்கைகளுக்காக தன் உயிர் பறிக்கப்படலாம் என்ற அச்சத்தில் தொடர்ந்து தன்னை அரசியல் தலைவராகவே பிம்பப்படுத்திக் கொண்டார். அப்படி அவர் ஆரம்பித்த கட்சி தான், பாகிஸ்தான் முஸ்லிம் லீக். 2013 ஆம் ஆண்டு நடந்த பாகிஸ்தான் பொதுத்தேர்தலில் முஷாரப் கட்சி படுதோல்வியடைந்தது. வழக்குகள் காரணமாக தேர்தலில் நிற்க தடை விதிக்கப்பட்டிருந்ததால், முஷாரப் தேர்தலில் போட்டியிடவில்லை.

'அரசியல் எதிரிகளை திட்டமிட்டு கொலை செய்தார்' என்பது முஷாரப் மீதான முக்கிய குற்றச்சாட்டு. பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ கொல்லப்பட்டதில் முஷாரப்புக்கு தொடர்பு இருப்பதாக ராவல்பிண்டி நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது. எமர்ஜென்சியை அமுல்படுத்தியதற்கு விளக்கம் கேட்டு அவருக்கு நோட்டீஸ் அனுப்பியது பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம். அதற்கு பதில் அளிக்காமலேயே பிரிட்டனுக்குப் பறந்தார். 2013 ஆம் ஆண்டில் நவாஸ் ஷெரீப் மீண்டும் ஆட்சியைப் பிடித்தார். சாட்டை, நவாஸ் வசம் வந்தது.

அரசியலமைப்புச் சட்டத்தை முடக்கியது உட்பட முஷாரப் மீது ஐந்து தேசத்துரோக வழக்குகள் பாய்ந்தன. அதை விசாரிப்பதற்காகவே பெஷாவரில் தனி நீதிமன்றம் அமைக்கப்பட்டது. 18 சம்மன்களுக்கு நீதிமன்றத்தில் அவர் ஆஜராகவே இல்லை. இதற்கிடையே முஷாரப்பின் உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் சிகிச்சைக்காக டுபாய் செல்ல நீதிமன்றம் அவருக்கு அனுமதி வழங்கியது. 'சிகிச்சை முடிந்ததும் உடனடியாக தாய்நாடு திரும்புவேன்' என்று கூறிச் சென்றவர், இன்னும் பாகிஸ்தான் திரும்பவே இல்லை.

முஷாரப்பை 'தலைமறைவுக் குற்றவாளி' என்று உச்ச நீதிமன்றம் அறிவித்தது. டுபாயில் இருந்தே பாகிஸ்தானில் அரசியல் செய்தார் அவர். 23 கட்சிகளை ஒருங்கிணைத்து மெகா கூட்டணி அமைத்தார். முஷாரப்பின் அரசியல் ஆசையை வைத்து அவரை தாய் நாட்டுக்கு வரவைக்கலாம் என நினைத்த பாகிஸ்தான் உச்ச நீதிமன்றம், 'தேசத்துரோக வழக்கில் நேரில் ஆஜரானால், முஷாரப் தேர்தலில் போட்டியிட விதிக்கப்பட்ட தடை நீக்கப்படும்' என்றது. 'என்னை கைதுசெய்ய தடை விதித்தால் மட்டுமே பாகிஸ்தான் வருவேன்' என்றார் முஷாரப். அவர் ஆஜராகாமலேயே விசாரணை நடந்தது. இப்போது தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. டுபாயிலிருந்து முஷாரப்பை நாடு கடத்துவதில் மும்முரமாகியிருக்கிறது பாகிஸ்தான் அரசு.

முஷாரப்பை 'அமிலாய்டோசிஸ்' என்ற விநோதமான நோய் தாக்கியுள்ளது. அவரால் நிற்கவோ நடக்கவோ முடியாது. படுத்த படுக்கையில் இருக்கிறார். தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது குறித்த செய்தியை தொலைக்காட்சியில் பார்த்த போது, மனம் உடைந்து அழுதாராம் முஷாரப்.


அதிகார துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு முஷாரப்பின் வாழ்க்கை ஒரு பாடம்.

### 40 கப்பல்கள், 20 விமானங்களுக்கு நடந்த கதியென்ன?

கப்பல், விமானங்களை கபளீகரம் செய்து வரும் பெர்முடா முக்கோண கடல் பரப்பின் மர்மங்களை அவிழ்ப்பதற்கு விஞ்ஞானிகள் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அதில் உண்மையான காரணம் என்று எதையும் சொல்ல முடியாமல் வெறும் கூற்றாகவே கூறி வருகின்றனர்.

பெர்முடா முக்கோண கடல் பகுதியில் செல்லும் கப்பல், விமானங்கள் காணாமல் போவதற்கு கடந்த மார்ச் மாதம் புதிய கூற்று ஒன்றை விஞ்ஞானிகள் முன்வைத்தனர். இதனால் அந்த மர்ம பிரதேசத்தின் முடிச்சு அவிழ்க்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்பட்டன.

கடந்த மார்ச் மாதம் பெர்முடா முக்கோண கடல் பகுதியின் அடியில் இராட்சத பள்ளங்கள் இருப்பதாக நோர்வே நாட்சோ சேர்ந்த ஆர்டிக் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். சில பள்ளங்கள் 800 மீற்றர் நீளமும் 150 அடி ஆழமும் கொண்டதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.




இந்தப் பகுதியில் அபரிமிதமான மீதேன் படிமங்கள் நிறைந்துள்ளன. இந்த நிலையில், பெர்முடா முக்கோண கடற்பகுதியில் இருக்கும் இராட்சத பள்ளங்கள் வழியாக அந்த மீதேன் வாயு கசிவு ஏற்படுவதாகவும் அந்த கசிவின் போது பள்ளங்களில் பெரிய வெடிப்புகள் ஏற்படுகின்றன என்றும் அவர்கள் கூறினர்.

மேலும், அந்த வாயு கடல் நீரின் அடர்த்தியைக் குறைத்து கப்பல்கள் மிதக்க முடியாத நிலையை ஏற்பட செய்வதாகவும் அவர்கள் கூறுகின்றனர். மேலும், இந்த பள்ளங்களிலிருந்து வெளிப்படும் மீதேன் வாயு காரணமாகவும் அபரிமிதமான வெப்பம் காரணமாகவும் அந்த பகுதியில் செல்லும் விமானங்களும் கப்பல்களும் விபத்தில் சிக்குவதாக அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்த இராட்சத பள்ளங்களிலிருந்து வெளியேறும் மீதேன் வாயு காரணமாக கப்பல்கள் பாதிக்கப்படுவதை ஒப்புக் கொண்டாலும் விமானங்கள் மாயமாவது குறித்த குழப்பம் நீடித்தது. இந்த நிலையில், கப்பல் மற்றும் விமானங்கள் மாயமாவதற்கான புதிய காரணத்தை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து கொலராடோ பல்கலைக்கழகத்தின் வானியல் செயற்கைக்கோள் ஆய்வாளரான ஸ்டீவ் மில்லர் கூறுகையில் "பொதுவாக மேகங்கள் சீரற்ற வடிவத்திலேயே படர்ந்திருக்கும். ஆனால், பெர்முடா முக்கோண பகுதியில் விந்தையான வடிவத்தில் மேகங்கள் காணப்படுகின்றன. அறுங்கோண வடிவத்தில் காணப்படும் இந்த மேகங்கள் பெர்முடா முக்கோண பகுதியின் மேற்குப் பகுதியில் படர்ந்துள்ளன. 30 கி.மீ. முதல் 90 கி.மீ.பரப்பளவில் இந்த மேகங்கள் காணப்படுகின்றன.

இந்த அறுங்கோண வடிவ மேகங்களுக்குக் கீழே கடல் பகுதியில் மணிக்கு 170 மைல், அதாவது மணிக்கு 273 கி.மீ. வேகத்தில் தீவிர சூறாவளிகள் ஏற்படுகின்றன. இந்த சூறாவளி காற்றானது சீராக இல்லாமல், கடல் மட்டத்திலிருந்து காற்றுப் பந்துகள் போன்று உருவாகி அந்த பகுதியில் தீவிரமாக வீசுகின்றது.

இந்த காற்று பந்துகள் கடல் மட்டத்திலிருந்து மேல் எழும்பி மீண்டும் கீழ் நோக்கித் திரும்புகின்றன. அப்போது 45 அடி வரை பெரும் நீர் சுழற்சி ஏற்பட்டு இராட்சத கடல் அலைகள் உருவாகின்றன. மேலும், அந்த காற்றுப் பந்துகள் வெடிகுண்டுகள் போல உருவாகுவதால், அந்த பகுதியில் செல்லும் கப்பல் மற்றும் விமானங்கள் நிலைகுலைந்து கடலில் வீழ்ந்து விடுகின்றன.

இது உண்மையான காரணமா? அல்லது இதுவும் நூற்றாண்டு காலமாக பெர்முடா முக்கோணத்தின் மீது வைக்கப்படும் வெற்று கூற்றாக மாறிவிடுமா? என்பதை உறுதிப்படுத்த அடுத்த கூற்று வரும் வரை காத்திருக்க வேண்டியதுதான். இந்த் கடல் பகுதியை கடந்து செல்லும் போது இதுவரையில் 40 கப்பல்களும் 20 விமானங்களும் மர்மமான முறையில் காணாமல் போயுள்ளன. எனவே, இதனை சாத்தானின் முக்கோணம் என்று அழைக்கின்றனர்.

வரலாற்றில் பெர்முடா முக்கோணத்தில் பதிவான முதல் விபத்து 1908 ஆம் ஆண்டு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. 1918 ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்கு சொந்தமாக யு.எஸ்.எஸ்.சைக்கிளோப்ஸ் என்ற கப்பல் இந்த பகுதியில் காணாமல் போனது. இந்த கப்பலில் பயணித்த 306 பேரின் கதி என்ன என்று இன்றுவரை தெரியவில்லை. 1950இல் இருந்து 1975 ஆம் ஆண்டு வரை 428 கப்பல்களும் படகுகளும் இந்த பகுதியில் மாயமாகி விட்டதாக ஒரு தகவல் கூறுகிறது. பெர்முடா முக்கோணத்தின் வழியாக சென்ற சிலர், அந்தப் பகுதியில் திடீர் ஒளிக்கீற்றுகள் தென்பட்டதாகவும், திசைக்காட்டி கருவிகள் செயல் இழந்து போவதாகவும் கூறியிருக்கின்றனர். இது விஞ்ஞானிகளுக்கு மேலும் குழப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்ததே தவிர, உருப்படியான முடிவுக்கு வர முடியவில்லை.










தமிழ் சினிமாவில் நடிக்க வந்த சில வருடங்களிலேயே உச்சத்திற்கு சென்ற ஹீரோ சிவகார்த்திகேயன். பல சுப்பர் ஹீரோக்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளி முன்னேறிய இவரின் திரைப்பயணத்தில் பெரும் சறுக்கலை சந்தித்து தற்போது நம்ம வீட்டு பிள்ளையில் மீண்டும் எழுந்துள்ளார். சுப்பர் ஹீரோக்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிய இவர் முதன் முறையாக ஒரு சுப்பர் ஹீரோவாகவே நடித்துள்ள படம் தான் ஹீரோ. இதிலும் இவர் வெற்றி பெற்றாரா? பார்ப்போம்.

**கதைக்களம்**

ஒவ்வொரு மாணவனும் தான் வாழ்க்கையில் டாக்டர் ஆகவேண்டும், வக்கீல் ஆக வேண்டும் என்று இருக்க, சிவகார்த்திகேயன் மட்டும் சக்திமான் போல் சுப்பர் ஹீரோவாக ஆக வேண்டும் என்று நினைக்கின்றார்.

இதனாலேயே இவரை உலகம் கொஞ்சம் விலக்கியே பார்க்க, சொந்த அப்பாவே நீ என் கண்முன் நிற்காதே என்று ஒரு கட்டத்தில் சொல்லும் நிலைக்கு வருகின்றார். அதனால், ப்ராடு செய்தால் போதும் நமக்கு தேவை பணம் மட்டும் தான் என்று முடிவெடுத்து போலி சான்றிதழ் அடித்து இலட்சம் இலட்சமாக சம்பாதிக்கின்றார் சிவகார்த்திகேயன்.

ஊரில் யாருக்கும் தெரியாத இடத்தில் அர்ஜுன் பெயில் ஆன மாணவர்களை திரட்டி அவர்களுக்குள் இருக்கும் திறமையை வெளிக்கொண்டு வர, அதில் ஒரு மாணவி இவானாவிற்கு ஏரோநாட்டிகல் படிக்கவேண்டும் என்று விருப்பம், அதை சிவகார்த்திகேயன் அர்ஜுனுக்கு தெரியாமல் நிறைவேற்ற, இவானா கண்டுப்பிடிப்பு வெளி உலகிற்கு தெரிகின்றது.

ஆனால், அந்த கண்டு பிடிப்பு வெளிவருவதன் மூலம் கார்ப்ரேட் கம்பனிகள் பிஸினஸ் பாதிக்கும் என்பதால் வில்லன் அபி தியோல், இவானாவை குற்றம் செய்தவர் என நிரூபிக்க, இவானாவும் தற்கொலை செய்து கொள்கின்றார், அதன் பிறகு இவர்கள் யார், எதற்காக அர்ஜுன் இப்படி மறைந்து வாழ்கின்றார் என பல முடிச்சுக்கள் அவிழ, ஒரு வழியாக சிவகார்த்திகேயன் சுப்பர் ஹீரோவாக மாறி என்ன செய்கிறார் என்பதே மீதிக்கதை.

**படத்தை பற்றிய அலசல்**

சிவகார்த்திகேயன் கமர்ஷியல் படம் என்றாலே அல்வா சாப்பிடுவது போல், ஆனால், வேலைக்காரன் போல் ஒரு சமுதாய கருத்துக்கொண்ட கமர்ஷியல் படம் என்றால் அவருக்கு கத்தி மேல் நடப்பது போல், அதிலும் பல ஹீரோக்கள் தயங்கும் சுப்பர் ஹீரோ கதைக்களத்தை கையில் எடுத்து, அதில் மெசெஜ் சொல்ல வேண்டும் என்றால், கத்தி மேல் நடப்பது இல்லை, படுத்து உருள்வது போல், அதையும் சிவகார்த்திகேயன் திறம்பட செய்துள்ளார் என்பதே சிறப்பு.

படத்திற்கு எப்போது ஹீரோ என்று டைட்டில் வைத்தார்கள் என்று தெரியவில்லை, படத்தில் சிவகார்த்திகேயன் தாண்டி அர்ஜுனும் ஹீரோ தான், சொல்லப்போனால், முதல்பாதியில் எல்லாம் சிவகார்த்திகேயனை மிஞ்சும் மாஸ் காட்சிகள் இவருக்கு உள்ளது, ஒரு மனிதனை அழித்தாலும் அவனுடைய ஐடியாலஜியை ஒரு போதும் அழிக்க முடியாது என்று அவர் எடுக்கும் முயற்சிகள் ரசிக்க வைக்கின்றது.

கல்யாணிக்கு பெரிய கதாபாத்திரம் இல்லை என்றாலும் டீசண்ட் அறிமுகம், உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் மாணவர்கள் பல கண்டுபிடிப்புக்களை கண்டுப்பிடிக்கின்றனர், ஆனால், உலகில் அதிக இளைஞர்கள் இருக்கும் இந்தியாவில் பெரிய அளவில் கண்டுப்பிடிப்பு இல்லை, அப்படியே ஏதும் கண்டுபிடித்தாலும் கார்ப்ரேட் பிஸினஸ்மைண்ட் அவர்களை எப்படி அழிக்கின்றது என்பதை காட்டிய விதம் அருமை.

அதிலும் இந்தியாவில் மட்டும் தான் தன் கனவுகளை பெற்றோர்களிடம் சொல்லவே பிள்ளைகள் அஞ்சுகிறார்கள் என்பது போன்ற வசனங்கள் கைத்தட்டல் பறக்கின்றது, அதே நேரத்தில் சுப்பர் ஹீரோ படம் என்றாலும், இரண்டாம்பாதியில் எல்லாம் லாஜிக் கிலோ என்ன விலை என்று தான் கேட்க வேண்டும்.

வேறு வழியில் ஒரு பாட்டில் சுப்பர் ஹீரோ ஆக வேண்டும் என்றாலும், அதற்குள் சுப்பர் ஹீரோவாக மாறுவது அண்ணாமலையில் ரஜினி ஒரே பாடலில் பணக்காரன் ஆவது போல் தான், அதை ஆரம்பத்திலிருந்தே அவர் ஏதும் செய்வது போல் காட்டியிருக்கலாம், குழந்தை பருவத்தை காட்டிவிட்டு அப்படியே சிவகார்த்திகேயன் வெறும் போலி சான்றிதழ் மட்டுமே அடிக்கின்றார் என்பது பிறகு உடனே சுப்பர் ஹீரோவாக மாறுவது மட்டும் கொஞ்சம் எல்லை மீறல்.

மேலும், படம் அட இது என்ன ஷங்கரின் ஜெண்டில் மேன் போலவே உள்ளது என்று நினைத்தால், அர்ஜுன் கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தி, அவர் சொல்லும் ப்ளாஷ் பேக், இனி ஜெண்டில்மேன் தேவையில்லை, ஹீரோ வேண்டும் என அவரே சொல்வது, மித்ரன் சபாஷ் வாங்குகின்றார்.

படத்தின் மூன்று முக்கியமான ஹீரோக்கள், ஜார்ஜ் ஒளிப்பதிவு, ரூபன் எடிட்டிங், யுவனின் இசை, இத்தனை அழகாக காட்சிகள் படம்பிடித்ததற்கு ஜார்ஜுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம், அதேபோல் யுவன் பின்னணியில் மிரட்டியுள்ளார், அபிதியோலுக்கு வரும் பிஜிஎம் முதல் அர்ஜுன், சிவகார்த்திகேயன் என அனைவருக்கும் பட்டாசு கிளப்பியுள்ளார், பாடல் சுமார் ரகம் தான்.

**க்ளாப்ஸ்**

எடுத்துக்கொண்ட கதைக்களம், சொல்ல வந்த கருத்து, அதை கிளைமேக்ஸில் ஏவி மூலம் காட்டிய விதம் சுப்பர்.

இசை, ஒளிப்பதிவு, எடிட்டிங் என டெக்னிக்கல் விடயங்கள் அனைத்தும் டாப்.

அர்ஜுன் கதாபாத்திரம் அழகாக வடிவமைத்தது, அவர் பேசும் வசனங்கள்.

**பல்ப்ஸ்**

இரண்டாம் பாதியில் கொஞ்சம் லாஜிக் கவனித்திருக்கலாம், இஷ்டத்திற்கு சில காட்சிகள் நீள்கின்றது.

மொத்தத்தில் தமிழ் சினிமாவின் முதல் வெற்றி பெறும் சுப்பர் ஹீரோவாக சிவகார்த்திகேயன் இருப்பார் என்பது உறுதியாகியுள்ளது.

# தம்பி- ஹீரோ திரைப்படங்களின் முதல் நாள் வசூல் விபரம்

தம்பி, ஹீரோ படங்களின் முதல் நாள் வசூல்- முன்னிலையில் எந்த படம்?

தமிழ் சினிமாவில் கடந்த வெள்ளிக்கிழமை அதாவது நேற்று முன்தினம் இரண்டு படங்கள் வெளி யாகின.

அதில் ஒன்று பாலிவுட்டின் டாப் நாயகன் சல்மான் கான் நடித்த தபங் 3 தமிழில் ரீமேக் ஆகி வெளியானது.

சிவகார்த்திகேயன் வித்தியாசமான கதைக்களத்தில் நடித்த ஹீரோ படமும், ஜோதிகா-கார்த்தி முதன் முறையாக இணைந்து நடித்த தம்பி படமும் வெளியாகி இருந்தது.

தற்போது இப்படங்கள் சென்னையில் முதல் நாள் முடிவில் எவ்வளவு வசூல் என்பதை பார்ப்போம்.

ஹீரோ- ரூ. 54 இலட்சம்
தம்பி- ரூ. 33 இலட்சம்



# ‘பாவிகளை மன்னிப்பீராக!’




(17.12.2019 தொடர்ச்சி...)

**குறிப்பாக கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த சில மதத்தலைவர்களும், அம்மதத்தைப் பின்பற்றுவோர் சிலரும், நம் பிரதேசத்தில் சிறுபான்மையினராக இருந்து கொண்டு, பெரும்பான்மை பலம் பெற்ற இந்து மதத்தவர்களை, வெளிப்படையாக வெறுக்கவும் விமர்சிக்கவும் செய்வதோடு, அம்மதத்தாரை அடக்கியாளவும் முயன்று வருகின்றனர். தமது உலகளாவிய பலம்கொண்டு இப்பிரதேசங்களில், பகிரங்கமாக இந்து மதத்தவர்களை மதமாற்றம் செய்யும், இவர்களது செயற்பாடுகள் அருவருக்கத்தக்கன. இது தவறு என்று யாரும் விரல் நீட்டினால், தம் மதத்திற்குள் இருக்கும் பிரிவுகளை எடுத்துக்காட்டி, நான் இல்லை அவர்தான், அவரில்லை இவர்தான் என்று, இவர்கள் செய்யும் விளையாட்டு வேடிக்கையானது. இவர்களுள் எத்தனை பிரிவுகள் இருந்தாலும் அத்தனை பிரிவுகளும், மதமாற்ற முயற்சியைப் பகிரங்கமாகச் செய்வது வெளிப்படை. அதுபற்றிய ஒரு வேடிக்கையான விடயத்தை அடுத்தவாரம் சொல்கிறேன்.**

உலகம் எவ்வளவு வேடிக்கையானது என்பதற்கு, நான் சொல்லப்போகும் நிகழ்வு சாட்சி பகரும். ஒருநாள், நல்லூர்க் கோயிலுக்கு அருகில் உள்ள, எங்களது கம்பன்கோட்டத்தின் வாசலில் நான் நின்று கொண்டிருக்கிறேன். எனது நெற்றி நிறைய விபூதி. நெற்றியின் நடுவில் பெரிய குங்குமப் பொட்டு. வழமையான எனது காவிநிறத்து உடை. ஏதோ வேலையாய் மேற தோற்றத்தோடு வாசலில் நின்ற என்னை நோக்கி, இளம் வயதுடைய ஓர் ஆணும் பெண்ணும் வந்தனர். எனக்கு அறிமுகம் இல்லாதவர்கள். என்னோடு சிறிது பேசவேண்டும் என்றார்கள். நம் பண்பாட்டின்படி உள்ளே அழைத்துச் சென்றேன்.

உள்ளே வந்து அவர்கள் அமர்ந்ததும் தான், அவர்களின் கையில் இருந்த பைபிள் நூலும், செபமாலையும் என் கண்ணில் பட்டன. உடனே அவர்கள் வந்தநோக்கம் எனக்குப் புரிந்தது. என்றாலும் என்ன பேசப்போகிறார்கள் என்று அறிய, “வந்தவிடயம் என்ன?” என்று அவர்களைப் பார்த்து அப்பாவியாய்க் கேட்டேன். உடனே அவர்கள் தங்கள் மதமாற்றப் பிரசாரத்தை வீச்சாகத் தொடங்கினார்கள். நான் தொடர்ந்தும் என் அப்பாவி வேடத்தைக் கடைப்பிடித்து, அவர்களின் பேச்சை ஆர்வமாய்க் கேட்பதாய் சிறிது நடித்தேன். அவர்கள் ஊக்கம் மிகைப்பட்டது. கொஞ்சம் கொஞ்சமாக தங்களின் கடவுளே கடவுள் என்றும், மற்றைக் கடவுள்கள் எல்லாம் பேய்களின் வடிவங்கள் என்றும், துணிவாகச் சொல்லத் தொடங்கினார்கள். “இனி பொறுப்பதில்லை” என்ற நிலைக்கு நான் வந்தேன்.

பேசிக் கொண்டிருந்த அவர்களைக் கைகாட்டி நிறுத்தினேன். “உங்கள் விடயங்கள் எல்லாம் சொல்லிவிட்டீர்களா?” என்று கேட்டேன். “ஆம்” என்றார்கள். “நான் மதம் மாறவேண்டும் என்பதுதானே உங்கள் விருப்பம்.” என்று தொடர்ந்து கேட்டேன். அதற்கும் “ஆம்” என்றார்கள். “நல்லது உங்கள் கருத்துக்களைச் சொல்லிவிட்டீர்கள். இனி என் சமயக் கருத்துக்களை உங்களுக்குச் சொல்லப்போகிறேன். நீங்களும் என்னைப்போலப் பொறுமையாக இருந்து கேட்கவேண்டும்” என்றேன். அவர்களுக்குள் சிறிய பதற்றம் உண்டானது. “இல்லை இல்லை நாங்கள் இயேசுவின் விசுவாசிகள், மற்றச் சமயச் செய்திகளைக் கேட்கமாட்டோம்” என்றார்கள்.

நான் சற்றுக் குரலை உயர்த்தினேன். “என் நெற்றியில் இருந்த விபூதி, குங்குமம் ஆகியவற்றைப் பார்த்து, நான் சைவன் என்று தெரிந்த பின்னும், உங்கள் சமயச் செய்திகளை வீட்டுக்குள் வந்து சொன்னீர்களல்லவா? அதுமட்டும் எப்படி உங்களால் முடிந்தது?” என்றேன். மெல்ல முழியைப் பிரட்டத் தொடங்கினார்கள். “இப்பொழுது நான் எனது சமயச் செய்திகளைச் சொல்லப்போகிறேன். நீங்கள் கேட்டுத்தான் ஆகவேண்டும். இறுதியில் யார் சமயம் மாறுவது என்று முடிவு செய்வோம்.” என்று சொல்லி கதவை இழுத்துப் பூட்டிவைத்து, வேண்டுமென்றே எங்கள் சைவசமயச் செய்திகளை, அவர்கள் வெறுக்க வெறுக்க எடுத்துச் சொன்னேன். நிறைவில் அழாக்குறையாக விட்டாற்போதும் என்று ஓடிவிட்டார்கள்.

சைவக்கோயிலின் அருகில் சைவ சின்னங்களோடு நின்ற என்னையே, மதம்மாற்ற நினைக்கிறார்கள் என்றால், அவர்களின் துணிவை என்ன சொல்வது? இளையர்களான இவர்கள் இரண்டிரண்டுபேர்களாக, நாள்முழுக்க இதே வேலையாக ஊர் முழுக்கத் திரிகிறார்கள் என்றால், அவர்களின் வாழ்வாதாரத்திற்கான வழிதான் என்ன? யாரோ சம்பளம் கொடுக்காமலா அவர்கள் இந்த வேலையைச் செய்கிறார்கள். அப்படி அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பவர்கள் யார்? கேள்விகளூடு விடயத்தின் வேரை அணுகினால், பலரும் வெட்கப்படவேண்டிவரும் என்பது நிச்சயம்.

இந்த அனுபவம் கொழும்பு வந்த பிறகும் எனக்கு ஏற்பட்டது. உலகளாவிய செல்வ வளமும், பலமும் இருக்கும் காரணத்தால், மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்களை, வசதிகளைக் காட்டி தம்பக்கம் இழுப்பதென்பது எப்படி நியாயமாகும்? இதுதான் இயேசுநாதர் காட்டிய வழியா? இல்லவே இல்லை! முப்பத்திரண்டு வெள்ளிக்காசுகளைக் காட்டி, “யூதாஸை” மனமாற்றி இயேசுபிரானைக் காட்டிக் கொடுக்கவைத்து, அவரைச் சிலுவையில் அறைந்து மகிழ்ந்த. துரோகிகளின் வழியல்லவா இது. ஒரு மகானின் வழி நிற்பதாய்ச் சொல்லிக்கொண்டு, ஒரு துரோகக் கும்பல் காட்டிய பாதையில் வழி நடப்பது எப்படி நியாயமாகும்?

சமயத்துறை சார்ந்த என்னையே துணிந்து தம்பக்கம் ஈர்க்க முற்படுபவர்களிடம், சாதாரண மனப்பலயீனமும், வறுமையும் உற்ற மக்கள் அகப்பட்டால், அவர்கள் கதி என்னாகும்? இது தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் மட்டும் நடக்கும் விடயமன்று. நாடுபூராகவும் இது நடக்கிறது. அதனால்தான் பௌத்த மதத்தவர்களும், மதமாற்றத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரவேண்டுமென்று, இடையில் கொதித்தெழுந்தார்கள்.

வடக்கிலும் கிழக்கிலும் பெரும்பான்மை பலம் பெற்றிருந்தும், மாற்று மதத்தவர்களை அணைத்து நடக்கும், இந்து மதத்தவர்களின் பெருந்தன்மையை, அவர்களின் பலவீனமாய் நினைந்து, அவர்களைச் சீண்டிப் பார்க்கும் வேலையை, மேற்படி “மத” மனிதர்கள் தொடங்கியிருப்பது, மிகமிக வேதனையான விடயமாம்.

இந்நாட்டின் பேரினத்தாருள் மொழியால் அங்கம் வகிப்பதாலும், உலகளாவி விரிந்த தம் மதத்தின் நிர்வாக பலத்தாலுமே, இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் தாம் சிற்றினமாய் இருந்து கொண்டு, பேரினமாய் அங்கு வாழும் இந்துக்களை விலைக்கு வாங்கவும், மிரட்டி வாழவும் இவர்களால் முடிகிறது.

இவ்விடயத்தில் நம் இந்துமதத்தாரின் சில குறைகளையும், நாம் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். உலகெங்கும் விரிந்திருந்தாலும் மதத்தை ஓர் அடையாளமாய்க் கொண்டு, ஒன்றுபடும் சக்தியை நம் இந்துமதத்தார் இன்னும் பெறவில்லை. அதுதான் நமது பலவீனத்தின் அடிப்படையாய் இருக்கிறது.

ஆனால் அதனையும் பிழையென்று சொல்லமுடியவில்லை. என்றைக்குமே தம் மதம் சார்ந்த மக்கள் தொகையைப் பெருக்குவதையும், உலகளாவிய நிர்வாகத்தை உருவாக்குவதையும், அதைவைத்து மற்றைய மதங்களை விழுங்க நினைப்பதையும், நம் இந்து மதம் என்றும் ஏற்றுக் கொண்டதில்லை. அது பொருள் வளர்ச்சிக்காக ஏற்பட்ட மதமன்று. அருள் வளர்ச்சிக்காக ஏற்பட்ட மதம்.

ஞான பூமியாகிய கிழக்கில் உதித்ததால் இந்து மதத்திற்கு, ஞானமே முதல் நோக்கமாய் என்றும் இருந்திருக்கிறது. மேற்குலகாகிய பொருள் உலகில் உதித்ததாலோ என்னவோ? மேற்படி மதத்தாருக்கு உலகியல் வெற்றியே உயர்வாய்த் தோன்றி நிற்கிறது. அதனால்தான் தம் மதத்திற்கான மக்கள் தொகையைப் பெருக்கும் முயற்சியில், அம்மதம் சார்ந்தவர்கள் நேர்மையற்ற பலவிதத்தாலும் இயங்கி நிற்கின்றனர்.

தாம் உயர்வென்று நினைத்த ஒரு கருத்தை, உலகத்தார்க்கு உபகரிக்க நினைப்பதில் என்ன தவறு இருக்கிறது? சிலர் கேட்க நின்னக்கலாம். நியாயமான கேள்விதான். ஆனால் அன்பையும் பொறுமையையும் உலகிற்கு உபதேசித்த, ஒரு மகானின் வழிவந்தவர்களாய்ச் சொல்லிக்கொண்டு, மதப்பலத்தைப் பெருக்குவதற்காக, மனிதர்களுக்கிடையே வெறுப்பையும், பகையையும் உருவாக்கும், இவர்களது செயலே கண்டனத்திற்கு உரிய விடயமாகிறது. தமது சமயம் வளர்க்க, மற்றைய சமயத்தை அழிக்க நினைக்கும், இவர்தம் செயற்பாடுகள் பற்றி அடுத்தவாரம் சொல்கிறேன்.

(தொடரும்...)

**கம்பவாரிதி இ.ஜெயராஜ்**

# அன்னை பூமி...

அன்பார்ந்த சங்குநாத வாசகர்களுக்கு ஜிம்மிக் குட்டியின் இனிய ஞாயிறு வணக்கங்கள் உரித்தாகட்டும்.


நீண்டகால உறவாக உங்களுடன் நான் உறவாடியிருக்கிறேன். ஆன்றோரும் சான்றோருமான பெரியவர் பின்னும் முன்னும் திரிந்து நானும் பேசக் கற்றிருக்கிறேன். மனிதர்கள் பற்றிய பல்வேறு வகையான பதிவுகள் என் மனதில் ஆழப்பதிந்து என்னையும் ஓர் உயர்வான நிலைக்கு வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் நிறையக் கிடைத்ததையிட்டுப் பெருமிதம் அடைகிறேன். இந்த மண்ணில் மனித இனத்தைத் தவிர்த்து எத்தனையோ ஊர்வன, பறப்பன, நீந்துவன, சுகமான வாசனை வீசி மண்ணுக்கும் மனிதருக்கும் தெய்வங்களுக்கும் கல்லறைகளுக்கும் சமர்ப்பணமாகும். அற்புத மலரினங்கள், மரங்கள், கொடிகள், புல் பூண்டுகள் என்று உயிருடன் வாழ்ந்தும் மண்ணில் மடிந்தும் வாழ்ந்து கொண்டிருக்கும் இனிய உறவுகளைப் பற்றியெல்லாம் சிந்திக்கவும் இரக்கப்படவும் மதிப்பளிக்கவும் நான் பழக்கப்படுத்தப்பட்டிருக்கிறேன்...ஓமோம் பிறப்பென்பது பொதுவானது. அதில் சிறப்பென்பது வந்து வாய்ப்பது. நாம் உருவாக்கிக் கொள்வது...

ம்...ம்...என்னடா ஏதேதோ புலம்புவதாக யோசிக்கிறியள் போல ...அது ஒண்டுமில்லை எங்கடை உறவுகளுக்கு என்று நிர்மாணிக்கப்பட்ட ஆலயங்களுக்கு ஈடான சரணாலயம் கேள்விப்பட்டிருப்பியள் தானே. புது வருடத்தோடை அங்கை காவல் கடமைக்கு என்னைக் கேட்டிருக்கினம். எனக்குப் பெருமையாக் கிடக்குது...அதைப்பற்றி நானும் முடிவெடுத்திட்டன். என்ன ஒரு கவலை- உங்களோடை பேச முடியாது. ஆனாலும் நீங்கள் நினைச்சால் வந்து பார்க்கலாம் தானே. வறுமையாலும் பாதுகாப்புப் பிரச்சினையாலும் குடும்பப் பிரச்சினையாலும் இழப்புக்களாலும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை நல்ல நோக்கத்தோடை இலட்சியக் கனவுகளோடை இல்லங்களிலை சேர்க்கிற பெற்றார் பாதுகாவலர்களும் பராமரிக்க முடியாத காரணத்தால முதியோர் இல்லங்களிலை சேர்க்கப்படுகிற முதியவர்களின் பிள்ளைகளும் உறவுகளும் இடமில்லாமல் தெருவில கைவிடப்பட்ட கட்டாக்காலி நாய்களோடை வளர்த்த நாய்களையும் சரணாலயத்திலை சேர்க்கின்ற நல்ல மனம் கொண்ட அன்பர்களும் மொத்தத்திலை நல்ல பணி ஆற்றுகின்றார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தனைக்கும் அப்பால் வாழ்வை வாழ்ந்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் எதிர்நீச்சல் போடுகிற மனிதரும் விலங்குகளும் பசிக்கு உணவும் படுக்க இடமும் மட்டும் கிடைத்தால் போதும் என்று அமைதி அடைந்து விடாது என்கிற ஒரு தேவை பற்றிய எண்ணம் எல்லோருக்கும் ஏற்பட வேண்டும். சிந்தித்தால் மட்டும் போதாது செயற்படவும் வேண்டும். செயற்படுத்த நல்ல மனிதனின் நிதியுதவி, அர்ப்பணிப்பு, பரந்த மனப்பான்மை எந்த நெருக்கடியிலும் தளர்வறியா மனமும் தாங்கு திறனும் சகிப்புத் தன்மையும் வேண்டும். கருணை என்பதுடன் கூடிய கவனிப்பு அனைத்து உயிரினங்களுக்கும் அத்தியாவசியம் என்பதை உணர்ந்து ஏற்றுக் கொண்டு செயற்பட வேண்டும்.

என்ன யோசிக்கிறியள். இவ்வளவையும் நான் பேசினதென்று நினைக்கிறியளோ. பரவாயில்லை நானும் இப்படியெல்லாம் யோசிக்கிறனான் தான். ம்...பெரியவரின்ர பேட்டி இப்ப ரி.வியில போய்க் கொண்டிருந்தது. வீடு முழுக்க அவரின்ர மாணவர்களும் அன்புள்ளவர்களும் இருந்து கேட்டுக் கொண்டு இருந்தவையள். நானும் அவையின்ர காலடியிலே தான் இருக்கிறன். ம்...பெரியவர் என்னைத் தட்டிக் குடுக்கிறார். எனக்குத் தலை கால் புரியேல்லை. ஏதோ சொல்லுறார்...

“என்ன ஜிம்மி செயற்பாடுகள் பற்றி உனக்கும் விளங்கி விட்டுதோ... இந்தப் பூமி ஒரு தாய். நல்லது கெட்டது எல்லாம் இதன் வயிற்றில் சங்கமம். குளம், குட்டை, சாக்கடை, கோயில், சுடுகாடு எல்லாம் இதன் மடியில் தான். எத்தனை அற்புதங்களை அடி வயிற்றில் சுமந்து எம்மை வாழ வைச்சுக் கொண்டிருக்கிறாள். ஏறி மிதிக்கிறவையையும் அகழ்ந்து குழி தோண்டி அநியாயங்களைப் புதைக்கிற அசிங்கங்களையும் அமைதியாகத் தாங்கிக் கொண்டு இருக்கிறாள். பொறுமை மீறினால் பொங்கி எரிமலையாவாள். ஆனாலும் கருணையுள்ளவள். ம்... எல்லாரும் புது வருடத்தை வரவேற்கத் தொடங்கிட்டினம்.

இந்த அற்புத மண்ணில் எங்கை இருந்தாலும் அதை நேசிக்கிறது மட்டும் இல்லை. சேவை செய்து வாழப் பழக வேணும். சரி எல்லோரும் போட்டு வாங்கோ. இனி புது வருடதிலை சந்திப்போம்...’’- நானும் போட்டு வாறன்.



திருமதி.பாரதி கணேஷ்
சுன்னாகம்.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : பறக்கும் பாவை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : விஸ்வநாதன் ராமூர்த்தி
பாடியவர்கள் : ரி.எம்.சௌந்தரராஜன், பி.சுசீலா



கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
செல்லாத இடம் நோக்கி செல்லலாமா
சிந்தாமல் சிதறாமல் அள்ளலாமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

வண்ணமணி மண்டபத்தில் துள்ளி விழுவோமா
அந்திரத்தில் கண்மயங்கி துள்ளி விழுவோமா
வண்ணமணி மண்டபத்தில் துள்ளி விழுவோமா
அந்திரத்தில் கண்மயங்கி துள்ளி விழுவோமா
சொன்னவர்கள் சொன்னபடி அள்ளி வருவோமா
தொட்டு வரும் தென்றலுக்கு தூது விடுவோமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
செல்லாத இடம் நோக்கி செல்லலாமா
சிந்தாமல் சிதறாமல் அள்ளலாமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

கண்ணாடி பார்த்தபடி கதை படிப்போமா
பொன்னான வண்ணங்களில் படம் வரைவோமா
கண்ணாடி பார்த்தபடி கதை படிப்போமா
பொன்னான வண்ணங்களில் படம் வரைவோமா
நடந்ததை நினைத்தபடி ரசித்திருப்போமா
நாளை இன்னும் அதிகமென்று பிரிந்திருப்போமா



கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா

சந்திரனை தேடிச் சென்று குடியிருப்போமா
தமிழுக்கு சேதி சொல்லி அழைத்துக்கொள்வோமா
சந்திரனை தேடிச் சென்று குடியிருப்போமா
தமிழுக்கு சேதி சொல்லி அழைத்துக்கொள்வோமா
அந்தி பட்டு வானத்திலே வலம் வருவோமா
அங்கும் ஒரு ராஜாங்கம் அமைத்திருப்போமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா
செல்லாத இடம் நோக்கி செல்லலாமா
சிந்தாமல் சிதறாமல் அள்ளலாமா

கல்யாண நாள் பார்க்க சொல்லலாமா - நாம்
கையோடு கை சேர்த்து கொள்ளலாமா



# து ஆண்டு நிறைவு விழா













# வெறும் விளையாட்டு அல்ல!

காரத்தி

தற்போது கிரிக்கெட் எவ்வளவோ மாறிவிட்டது. பங்களாதேஷத்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியையெல்லாம் எத்தனை பேர் முழுவதுமாகப் பார்த்திருப்பார்கள் என்பதே கேள்விக்குறி. ஒருநாள் தொடர்களே சமயங்களில் போர் அடிக்கின்றன. இது இருபது-20 களின் காலம். அதுவும் மாநிலம் மாநில மாக சண்டையிட்டுக்கொள்ளும் ஐ.பி.எல். என்றால் இன்னும் ஏக குஷி நம் ரசிகர்களுக்கு. இருபது-20 தொடர்களை மையப்படுத்தி அமேசான் பிரைமில் வெளியாகியிருக்கும் தொடர் தான் 'இன்சைடு எட்ஜ்.'

'ஆட்டுமந்தைகள் மைதானத்தில் நடக்கும் விளையாட்டை விளையாடட்டும், நாம் கோடிகளில் விளையாடுவோம்' என்பார் ஒரு புக்கி. கிட்டத்தட்ட 'இன்சைடு எட்ஜ்' வெப் சீரிஸின் ஒன்லைன் இதுதான். மும்பை மேவ்ரிக்ஸ் அணியின் உரிமையாளர், முன்னாள் நடிகையான ஜரினா மாலிக். விளையாட்டுப் பொருட்கள் விற்கும் நிறுவனத்தின் உரிமையாளர் விக்ராந்த் தவான் (விவேக் ஓபராய்). மேலிடத்து ஆலோசனைக்கேற்ப, மும்பை மேவ்ரிக்ஸ் அணியில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்குகிறார் விக்ராந்த். வீரர்களை பெட்டிங்கில் ஈடுபடுத்துவது. வீரர்களுக்குள் இருக்கும் வர்க்க பேதங்கள், கிரிக்கெட் எப்படி ஒரு சமூகத்தின் பிரியத்துக்குரிய விளையாட்டாகவும் அதேநேரம் வணிகமாகவும் இருக்கிறது போன்றவற்றையும் தொட்டுச் செல்கிறது இந்த சீரிஸ். விளையாட்டு வீரர்கள் இதற்கு எப்படி பலிக்கடா ஆக்கப்படுகிறார்கள், கிரிக்கெட்டில் நடக்கும் அதிகார அத்துமீறல்கள், கிரிக்கெட் வீரர்களின் ஏலம், பண போதை, லேட் நைட் பார்ட்டிகள், ஊக்க மருந்து சர்ச்சைகள் என அனைத்தையும் தோலுரிக்கிறது இந்தத் தொடர்.

விக்ராந்த் தவானின் வீழ்ச்சியுடன் முதல் சீசன் முடிகிறது. பி.பி.எல்.தொடர்கள், இந்திய கிரிக்கெட் போர்டு தலைவரான யஷ்வர்தன் படேலின் தகிடுதத்



தங்களுடன் தொடங்குகிறது இரண்டாம் சீசன். தன் விரல் அசைவில் ஊக்க மருந்து சோதனைக்குழுவின் சர்வதேசத் தலைவர் முதல் தேசிய தொலைக் காட்சியின் ப்ரைம்டைம் நிர்வாக ஆசிரியர் வரை அனைவரின் நாற்காலிகளையும் காலி செய்யும் சர்வ வல்லமை படைத்தவர் யஷ்வர்தன். இந்திய கிரிக்கெட் போர்டின் தலைவர் பதவிக்கான தேர்தல் நெருங்க நெருங்க, யஷ்வர்தனின் நிலையோ சற்று ஆட்டம் காணத் தொடங்குகிறது. அடுத்துவரும் தேர்தலில் வெல்ல, கோடிகளில் பணம் தேவைப் படுகிறது. ஏலத்தில் வாங்கப்படும் வீரர்கள் பட்டிங்கில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பணம் புழங்கிய விக்ராந்த் தவானின் கைகள் தற்போது வெறுமையில் தவிக்கின்றன. யஷ்வர்தன் காய்களை நகர்த்த, விக்ராந்த் கட்டங்களை நகர்த்துகிறார். இந்த சீசனில் கோப்பை வெல்பவர் யார், ஜாம்பவான் யார் போன்றவற்றைச் சொல்லி, அடுத்த சீசனுக்கான ஆர்வத்தைத் தூண்டி முடிந்திருக்கிறது இரண்டாம் சீசன்.

கதையின் முதன்மைப் பாத்திரங்களுக்கு அப்பால் நடக்கும் சில காட்சிகள்தான் இன்சைடு எட்ஜின் சிக்ஸர் மொமன்ட்டுகள். பட்டியலினச் சமூகத்தைச் சேர்ந்த வேகப்பந்து வீச்சாளர் பிரசாந்த் கனௌஜியா, ரசிகர்களின் பேவரைட். அவருக்கும் தேவேந்திர மிஸ்ராவுக்கும் நடக்கும் சண்டையுடன் முடியும் முதல் சீசன், இரண்டாம் சீசனில் பிரசாந்தின் குற்றவுணர்ச்சியுடன் தொடங்குகிறது. தென்னாபிரிக்க வெள்ளையர்கள் முன், இருவருமே சமமாக இகழப்படுவதும், தேவேந்திர மிஸ்ரா கண்ணீர் சிந்துவதும், இது, தான் விரும்பாமலே தன் மேல் திணிக்கப்பட்ட ஒன்று என தேவேந்திர மிஸ்ரா புலம்புவதும் ஓர் அழகிய சிறுகதை.

'ஆமா, இந்த லேடி, அவங்க இல்ல', ' இந்த கிராமத்து லுக்ல வேகமா பந்து வீசற பையன் இவன்ல', ' ஆமா, இந்த ஓனர் பொண்ணுதான போன சீசன்ல...' என நமக்குத் தொடர் பார்க்கும்பொழுது ஆயிரம் கேள்விகள் எழலாம். தொடர் முழுக்க இப்படியான நிஜ கதாபாத்திரங்களின் நிழல்களை உலவவிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் ஏகப்பட்ட நடுவர் தீர்ப்புகள் கேள்விக்குள்ளாகின. அதையும் ஸ்கிரிப்ட்டுக்குள் கொண்டு வந்திருக்கிறார், இந்தத் தொடரை உருவாக்கிய கரண் அன்ஷுமான். சென்னை சுப்பர் கிங்ஸுக்கான இரண்டாண்டுத் தடை, தேர்தலைக் காரணம்காட்டி தென்னாபிரிக்காவில் நடந்த ஒரு சீசன், இவற்றுக்குப் பின் நடந்த அரசியல் யாருக்கும் இதுவரையில் தெரியாது. ஆனால், இவற்றுக்கான முடிச்சுகளைப் புனைவுடன் அவிழ்க்கிறது இந்தத் தொடர்.

வெப் சீரிஸில் சென்சார் இல்லை என்பதால் சிற்சில அடல்ட் காட்சிகளும், பற்பல கெட்ட வசவுகளும் கொட்டிக் கொண்டே இருப்பது சற்று உறுத்தல். அதே போல், கிரிக்கெட்டில் தற்செயலாக நடக்கும் விடயங்கள் என நாம் நம்பும் பலவற்றுக்கு இப்படி பெட்டிங், டோப்பிங் சாயங்கள் பூசுவது அந்த விளையாட்டு மீதான குறைந்தபட்ச நம்பிக்கையையும் கெடுத்துவிடும் என்பது இதன் மைனஸ். கிரிக்கெட் ரசிகர்கள் ஜாலியாக, அதே சமயம் அதன் அதிகார அரசியலையும் சுவாரஸ்யத்துடன் புரிந்து கொள்ள 'இன்சைடு எட்ஜ்' ஓர் அட்டகாசத் தொடர்.

# நத்தார் தாத்தா வேடத்தில் சென்று சிறுவர்களை மகிழ்வித்த கோலி





கொல்கத்தாவிலுள்ள அநாதை சிறுவர்கள் இல்லத்திற்கு நத்தார்தாத்தா வேடத்தில் சென்று அங்குள்ளவர்களுக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்தார். இந்திய அணியின் தலைவர் விராட் கோலி. இது தொடர்பான வீடியோவொன்றை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் வெளியிட்டது. அந்த வீடியோவில் விராட்கோலி நத்தார் தாத்தா போன்று வேடமிட்டு சிறுவர்களைச் சந்திப்பதை பார்க்க முடிகின்றது. முதலில் தன்னை யார் என காண்பிக்காமல் விராட்கோலி அங்குள்ள சிறுவர்களுடன் உரையாடினார்.


அதன் பின்னர் அவர்களிடம் நீங்கள் விராட்கோலியை சந்திக்க விரும்புகின்றீர்களா? என அவர் கேட்டார்.

அதற்கு அவர்கள் ஆம் எனத் தெரிவித்ததும் தான் அணிந்திருந்த நத்தார் தாத்தா முகமூடியை கழற்றி விராட்கோலி தான் யார் என்பதை வெளிப்படுத்தினார்.

இந்ததருணங்கள் எனக்கு மிகவும் முக்கியமானவை என விராட்கோலி தெரிவித்தார்.

இந்தச் சிறுவர்கள் வருடம் முழுவதும் எங்களைவாழ்த்துகின்றனர், உற்சாகப்படுத்துகின்றனர் எனத் தெரிவித்த விராட்கோலி இந்த சிறுவர்களுக்கு தன்னால் மகிழ்ச்சியை ஏற்படுத்த முடிந்ததாகவும் விராட்கோலி தெரிவித்தார்.

# பிரசர் குளிசை




யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு சென்று கொண்டிருந்தது அந்த பேருந்து..பளை அருகில் வந்த போது வயதான அம்மா ஒருவர் எழுந்து கண்டக்டரிடம், "கிளிநொச்சி வந்திட்டா?" என்று கேட்டார்.

"கிளிநொச்சியா? அதுக்கு இன்னும் ரொம்ப தூரம் இருக்கும்மா" "சரி"ஆனையிறவு வந்தது. "தம்பி. கிளிநொச்சி வந்திடுச்சா?" "அட.. இன்னும் இல்லைம்மா" அம்மா மீண்டும் கிளிநொச்சி வந்திடுச்சா?"

"ஐயோ அம்மா.. உங்க இம்சை தாங்கலை. பேசாம கண்ணை மூடிட்டு தூங்கும்மா. கிளிநொச்சி வந்தா நானே சொல்றேன்"

"சரி" அந்தம்மா கண்களை மூடித் தூங்கலானார். பேருந்து மாங்குளத்தை தாண்டிக் கொண்டிருந்தது.

"கண்டக்டர் தம்பி... கிளிநொச்சி வந்திடுச்சா?" - தூங்கி எழுந்த அந்தம்மா கேட்டார். கண்டக்டருக்குத் தூக்கி வாரிப் போட்டது. "ஐயையோ.. நான் மறந்திட்டேனே. நீ ஏம்மா தூங்கின?" பழியை அந்தம்மா மீது தூக்கிப் போட்டார் கண்டக்டர். பேருந்தில் இருந்த அத்தனை பேரின் கோபமும் கண்டக்டர் மீது திரும்பியது. "பாவம் அந்தம்மா.. வண்டியைத் திருப்புப்பா.. திரும்ப கிளிநொச்சி லையே கொண்டு போய் அந்த ம்மா விட்டுட்டு திரும்பி வருவம்" என்றார்கள்.

கண்டக்டருக்கு வேறு வழி தெரியவில்லை. பேருந்தைத் திருப்பினார். வந்த வழியே கிளிநொச்சிக்குச் சென்றது.

ஒரு வழியாக சில மணி நேரங்களில் கிளிநொச்சி வந்தது. "அம்மா.. இறங்கும்மா" - சலித்தபடியே கண்டக்டர் கூறினார்.

சாவகாசமாக எழுந்த அந்தம்மா மேலே இருந்து பையை எடுத்துப் பிரித்து அதிலிருந்து பிரஷர் குளிசையை எடுத்துப் போட்டு முழுங்கி தண்ணீர் குடித்து திரு ம்ப அமர்ந்து தூக்கத்தைத் தொடர்ந்தார்.

"என்னம்மா. கிளிநொச்சில இறங்கலையா?" - கண்டக்டர் கேட்டார்.

"நான் ஏன்டா தம்பி கிளிநொச்சில இறங்கணும்? கிளிநொச்சி வந்தவுடனே பிரஷர் மாத்திரை மறந்திடாம போட்டுடுன்னு என்ர மகள் சொல்லி அனுப்பினான். அதான். நான் வவுனியா போகணும். இப்போது கண்டக்டருக்கு பிரஷர் படு பயங்கரமாக எகிறத் தொடங்கியது.

# தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்

பொதுவாக தந்தைகளின் இறுதிக் காலம் பெரும்பாலும் மௌனத்திலும், தனிமையிலும் சில சமயம் ஒதுக்கி வைக்கப்பட்டும், புறக்கணிப்பிலும் கழிய நேரிடுகிறது என்பது வருத்தத்துக்குரியது.

இதனால் தான் தந்தைமார் தாம் உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும், முற்றாக ஓய்வு பெற்று மூலைக்கு செல்வதற்கு முன்னர் மரணித்துவிட வேண்டும் என்றும் நினைக்கின்றனர்.



குடும்பத்துக்காக உழைத்து உழைத்து ஓடான பின்னர் அவரைக் கௌரவமாக வாழ வழி செய்ய வேண்டும். மூலையில் இருத்தி, மௌனத்தில் ஆழ்த்தி, மூன்று வேளையும் சாப்பிட்டு விட்டு பேசாமல் கிடந்தால் போதும் என்ற மனப்பான்மையுடன் தான் பல பிள்ளைகள் தந்தைமாரை நடத்தி வருகின்றனர்.

வயதான தந்தை தன் குடும்பத்தினரிடமிருந்து மிகக் கொஞ்சமாகத் தான் கேட்பார். ஏனெனில் கேட்டுப் பழகாத குடும்பத் தலைவராக இருந்தவர். கொடுக்க மட்டுமே தெரிந்து வைத்திருந்தவர். எனவே வயதான காலத்தில் வாய் திறந்து கேட்கமாட்டார். குடும்பத்தினர் தான் அவரின் தேவைகளை அறிந்து நிறைவேற்றி வைக்க வேண்டும்.

வாசிக்கும் பழக்கம் உள்ளவரானால் குறைந்த பட்சம் வாரப் பத்திரிகையாவது வாங்கிக் கொடுங்கள்.

சில்லறைச் செலவுகளுக்காகக் கொஞ்சம் பணமும் கொடுங்கள்.

மூலையில் அமர்த்தாமல் சிறிய வேலைகளைக் கொடுங்கள்.

பேரன் பேத்திகளை அவரிடம் இருந்து பிரிக்காதீர்கள். அவர்கள் தந்தையால் கொண்டாடப்படும் செல்வங்கள்.

குடும்பத் தேவைகளைப் பார்த்து பார்த்து செய்தவருக்கு, இப்போது உங்கள் காலம், பார்த்துப் பார்த்து செய்வதற்கு.

ஒருவர் மறைந்த பின்னர், அதைச் செய்யவில்லையே, இதைச் செய்திருக்கலாமே என்று எண்ணிப் புலம்புவதைவிட அவர் உயிருடன் இருக்கும்போதே தந்தையின் இறுதிக்காலம் அமைதியாகக் கழிவதற்கு வழிவகை செய்யுங்கள்.

வயதானவர்களுக்கு தனிமை மிகக் கொடுமையானது.

ஒரு சிறிய வானொலியை வாங்கிக் கொடுங்கள். முடிந்தால் தனி டி.வி இல்லையேல் உங்களுடன் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்க விடுங்கள்.

தன் மனைவியை இழந்த தந்தையின் தனிமை மிகமிகக் கொடுமையானது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

பெண் ஒரு கணவனை இழந்தால் அவரால் அதை ஜீரணித்து தன் பிள்ளைகளுடன் போய்ச் சேர்ந்து கொள்வாள்.

பெண் சூழலுக்கு ஏற்றாற் போல வளைந்து கொடுத்து வாழ்பவள்.

குடும்பத் தலைவன், அதிகாரம் செலுத்தியவன், சம்பாதித்தவன், பிறர் மதிப்புக்கு உரியவன் என்றெல்லாம் வாழ்ந்து விட்ட தந்தை, தன் அதிகாரமும், அன்பும், நெருக்கமும், காட்டக் கூடிய மற்றும் எது வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளக் கூடிய மனைவியை இழந்தபின் கையறு நிலைக்கு ஆளாகி விடுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

இவற்றை உணர்ந்து தந்தைக்கு மரியாதை செய்யுங்கள்,அவர் கௌரவிக்கப்பட வேண்டியவர்!

ஒவ்வொரு மகனும், மகளும் படித்து உணர வேண்டிய பதிவு.

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1923


## ராஜ்குமார்

ஒரு ஆண் கொஞ்சம் கொஞ்சமாக திருந்திட்டே வர்றான்னா அவன் பெத்த பொண்ணு வளர்ந்திட்டே வர்றான்னு அர்த்தம்



## வசந்தன்

எவ்வளவு மனது காயம்பட்டாலும் சந்தோஷம் என்பது நிரந்தரமாகக் கிடைக்கும்... நம்முடைய எண்ணத்தாலும் பொறுமையாலும்



## ஜானகி

காரணங்கள் சொல்பவர்கள் காரியங்கள் செய்வதில்லை. காரியங்கள் செய்பவர்கள் காரணங்கள் சொல்வதில்லை




## மிருதுளா



வெற்றி பெறுவது மிகவும் எளிதானதே என்ன செய்கிறாய் என்பதை அறிந்து செய் செய்வதை விரும்பிச் செய் செய்வதை நம்பிக்கையோடு செய்

## வேணி

விட்டுக் கொடுங்கள் விருப்பங்கள் நிறைவேறும், மன்னிப்புக் கொடுங்கள் தவறுகள் குறையும், மனம் விட்டுப் பேசுங்கள், அன்பு அதிகமாகும்



## புகழ்

இறங்கிச் செல்வதில் பிரச்சினை இல்லை. ஆனால் எப்படி இறங்குவது என்பது தான் பிரச்சினையே. சில நேரங்களில் வாழ்க்கையும் நம்மை இப்படித்தான் திணற வைக்கிறது



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மூலிகை பொடிகளும் அதன் அற்புத மருத்துவ குணாங்களும்..!!



**அறுகம்புல் பொடி :** அதிக உடல் எடை, கொழுப்பை குறைக்கும். மேலும் இரத்தத்தை சுத்தப்படுத்தி தோல் நோய்கள் வராமல் தடுக்கிறது. கோடை வெயிலுக்கு அறுகம்புல் சாறு குடிக்கும்போது உடல் குளிர்ச்சி அடையும்.

**நெல்லிக்காய் பொடி:** பற்கள் எலும்புகள் பலப்படும். விற்றமின் "சி" உள்ளது. மேலும் இவை நீரிழிவு மட்டுமில்லாமல், உடலின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க, இதயத்தை காக்க, மூட்டுவலி குறைய, கண்களை பாதுகாக்க, மொத்தத்தில் உடல் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது.

**கடுக்காய் பொடி:** குடல் புண் ஆற்றும், சிறந்த மலமிளக்கியாகும். கடுக்காய் வாயிலும் தொண்டையிலும், இரைப்பையிலும், குடலிலும் உள்ள ரணங்கள் ஆற்றிடும் வல்லமை பெற்றது. பசியைத் தூண்டி இரத்தத்தைச் சுத்தப்படுத்தி வாத பித்த கபம் ஆகியவற்றால் வரும் ஏராளமான நோய்களைக் குணப்படுத்தும்.

**வில்வம் பொடி:** அதிகமான கொழுப்பை குறைக்கும். இரத்த கொதிப்பிற்கு சிறந்தது. வில்வ பொடியை கொண்டு தேநீர் தயாரித்து குடித்தாலே போதும் இரத்த சர்க்கரை அளவை கட்டுப்பாட்டில் வைக்கலாம்.

**அமுக்கிரா பொடி :** தாது புஷ்டி, ஆண்மை குறைபாட்டுக்கு சிறந்தது. வாத நோய், நரம்பு தளர்ச்சி, கை, கால் நடுக்கம், மன சோர்வு, தூக்கமின்மை, முதுமையில் ஏற்படும் சோர்வு போன்றவற்றிற்கு அமுக்கரா சிறந்த மருந்து.

**சிறுகுறிஞ்சான் பொடி:** சர்க்கரை நோய்க்கு மிகச் சிறந்த மூலிகையாகும். காய்ச்சல் தீர 10 சிறுகுறிஞ்சான் இலைகளுடன், 5 மிளகு, ½ தேக்கரண்டி சீரகம் சேர்த்து, நசுக்கி, லீற்றர் நீரில் இட்டுக் கொதிக்கவைத்து, கஷாயம் செய்து, ஒரு மணி நேரத்திற்கு இரண்டு தேக்கரண்டிகள் வீதம் குடித்து வர மிக விரைவிலேயே காய்ச்சல் போன்றவை நீங்கும்.








# அற்புத மருத்துவ குணாங்கள் நிறைந்த சித்தரத்தை..!

சித்த ஆயுர்வேத வைத்தியர்கள் இதை கபம், வாதம், வீக்கம், இழுப்பு, இருமல், காய்ச்சல் போன்றவைகளுக்குப் பயன்படுத்துவார்கள் என்றாலும் நெஞ்சிலுள்ள கபத்தை வெளியேற்றுவதில் திறன் மிக்கது.

சாதாரண காய்ச்சல் மற்றும் சுவாச பாதிப்புகள் விலக, சில துண்டுகள் சித்தரத்தையை தூளாக்கி அத்துடன் அதே அளவு கற்கண்டைக் தூளாக்கி இவற்றை, ஒன்றாகக் கலந்து வைத்துக் கொண்டு, அதில் சிறிதளவு தினமும் பாலில் கலந்து பருகிவர, காய்ச்சல் மற்றும் சுவாச பாதிப்புகள் யாவும் விலகிவிடும்.

ஆஸ்துமா குணப்படுத்த: சிலர், இரைப்பு இருமல் எனும் ஆஸ்துமா பாதிப்பால், மூச்சடைக்கும் வேதனையை அடைவார்கள். அவர்கள், சித்தரத்தை, அதிமதுரம், தாளிசபத்திரி, திப்பிலி மற்றும் மிளகு ஆகிய மூலிகைகளை இலேசாக வறுத்து, அரைத்து பொடியாக்கி வைத்துக் கொண்டு, தினமும் இதில் சிறிதளவு எடுத்து, தேனில் குழைத்து சாப்பிட்டுவர, பாதிப்புகள் விரைவில் நீங்கிவிடும்.

எலும்புகள் பலம் பெற : இந்த பாதிப்புகள் யாவும் நீங்க, நன்கு உலர்ந்த சித்தரத்தை மற்றும் அமுக்கிரா கிழங்கை எடுத்து இடித்து தூளாக்கிக்கொண்டு, இந்தப்பொடியை சிறிது தேனில் குழைத்து தினமும் இருவேளை என ஒரு மண்டலம் என்ற கால அளவில், நாற்பத்தெட்டு நாட்கள் சாப்பிட்டு வர, வெகுநாட்களாக துன்பமளித்த வலிகளின் பாதிப்பு குறையும். எலும்புகளின் ஆற்றல் மேம்படும்.



உலர்த்தி சிறு துண்டுகளாக வெட்டிய ஒன்றிரண்டு சித்தரத்தையை, மூன்று தம்ளர் தண்ணீரில் இட்டு கொதிக்கவைத்து, தண்ணீர் மூன்றில் ஒரு பங்காக சுண்டி வரும் வேளையில், நீரை எடுத்து வைத்துக் கொண்டு, தினமும் இருவேளை, சில நாட்கள் தொடர்ந்து பருகிவர, வறட்டு இருமலை தணிக்கும்.